உமா வாசகம்

ஆறும் புத்தகம்—பொதுப் பகுதி

[முதல் பாரத்துக்கு உரியது.]

1951௵ ஜூன்௴ வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி
திருத்தி அமைக்கப்பெற்றது.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

த. சே. உமாபதி, M.A., L.T.,
தலைமையாசிரியர்,
ஸி. அப்துல் ஹக்கீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி, சென்னை.

உமாதேவன் கம்பெனி
16, செம்புதாஸ் தெரு, சென்னை—1

பதிப்புரிமை] 1951 [விலை அணா, 14.

First Edition : 1949
Reprinted : 1950, 1951 (Twice).
Revised Edition : November 1951.

428
RB 4-51

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

54746
26C211

THE JUPITER PRESS LTD., MADRAS—1.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

முகவுரை

உமா வாசகம் என்னும் பெயருடன் வெளிப்போதரும் நூல் வரிசையில் இஃது ஆறும் புத்தகம். 1951-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்தையொட்டி இது திருத்தி அமைக்கப்பெற்றுள்ளது.

சிறுவர் சிறுமியரின் மனோநிலையையும், அவர்தம் தமிழறிவின் எல்லையையும் மனத்திற்கொண்டு இஃது இயற்றப் பெற்றுள்ளது. இதன்கண் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு பாடமும் பாடத்திட்டத்தின் நோக்கமாகிய மொழிப்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு இயன்றிருத்தல் குறிப்பிடத் தக்கது. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் தரப்பட்டுள்ள பயிற்சியே இதற்குச் சான்றாகும். அன்றியும், மொழி வளர்ச்சிக்குரிய புதிய சொற்களும், சொற்றொடர்களும் ஒவ்வொரு பாடத்திலும் ஏற்ற அளவில் இடம் பெற்றுள்ளன.

மாணவர் மாணவிகட்கு அகராதி உபயோகிக்கும் பழக்கம் உண்டாதற்பொருட்டு ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அருஞ்சொற்களைக் குறித்து, அவற்றுக்குப் புத்தகத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதும்படி அமைக்கப்பெற்றுள்ள பயிற்சி குறிப்பிடத்தக்கதாம். செய்யுட்பகுதிக்குக் குறிப்புரைகள் தரப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் இதனைப் படித்துப் பயனுறுதற்கு ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர்களை வேண்டுகிறோம்.

சென்னை,
9-11-51.

பதிப்பாளர்

CONNEMARA ... LIBRARY
7 MAY 1958

உள்ளுறை

உரை நடைப் பகுதி

எண்	பொருள்			பக்கம்
1.	காந்தியடிகள் காட்டிய வழி	....	....	1
2.	கவியரசர் கம்பர்	....	....	7
3.	மாண்டவன் மீண்ட மாயம்	....	....	11
4.	கலைக்கோயில்	....	....	17
5.	மார்க்கோ போலோ—I	....	....	26
6.	நட்புப்பேறு	....	....	29
7.	தமிழ் நாட்டுச் சிற்பக் கலை	....	....	33
8.	வெண்ணிப் பறந்தலைப் போர்	....	....	39
9.	மேட்டூர் அணை	....	....	44
10.	டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்	....	...	48
11.	மார்க்கோ போலோ—II	...	....	53
12.	புலவர் தூது	....	....	58
13.	கண்ணகி வழக்குரைத்தல் (நாடகம்)		....	64
14.	உழவுத்தொழில்	....	...	69
15.	இசையால் நேர்ந்த இன்னல்	....	....	75
16.	எங்கள் செஞ்சிச் செலவு	....	....	79

செய்யுட்பகுதி

I.	கடவுள் வணக்கம்	....	....	86
II.	வருணனைப் பகுதி :			
	1. நிலா	....	....	87
	2. மழைக் குறி	....	....	88
	3. கடல்	....	....	88
III.	கதைச் செய்யுள் :			
	1. தருமரும் அருச்சுனனும்		....	89
	2. தேசிங்கு பாராசாரிக் குதிரையை அடக்குதல்			90
	3. இறந்த சிங்கத்தை எழுப்பியதால் நேர்ந்த இன்னல்	....	....	91
IV.	பல்சுவைப் பகுதி :			
	1. வெளி மயக்கம்	....	...	92
	2. வெற்றிலை போடுவதன் விளைவு		....	92
	3. குறத்தி குறி சொல்லல்		....	93
	4. ஏற்றப் பாட்டு	....	....	93
V.	தனிப் பாடல்கள் :	....	...	94
VI.	நீதிப் பகுதி :			
	1. சதகச் செய்யுள்	....	....	95
	2. வாக்குண்டாம்	....	....	97
	3. நல்வழி	....	....	98
	4. நீதி நெறி விளக்கம்	....	....	99
	5. திருக்குறள்	....	....	100
	செய்யுட்பகுதி-குறிப்புரை	....	....	103

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS


CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

உமா வாசகம்

(ஆறும் புத்தகம்)

1. காந்தியடிகள் காட்டிய வழி

1. உத்தமர் காந்தியடிகளின் பெயரை அறியாத இந்தியர் எவரும் இருக்க இயலாது. நம் நாட்டில் மட்டுமன்றி, பிற நாடுகளிலும் அவர் பெயரைக் கேளாதவர் இரார். **மோகன் தாஸ் கரம்சந்து காந்தி** என்பது அவரது முழுப் பெயர். அவர் புத்தரைப் போலவும், இயேசு நாதரைப் போலவும் ஒப்புயர்வற்ற உத்தமர் என்பதே மக்களின் கருத்து. அத்தகைய பெரியாரின் வரலாற்றை அறிந்து, அவர் அருள் மொழிகளைப் பின்பற்றி, அவர் காட்டிய வழியில் நடப்பதே நமது கடமையாகும்.

2. நமது நாட்டின் மேற்குக்கரையில் **கத்தியவார்** என்னுந் தீபகற்பம் உளது. அங்குள்ள **போர்பந்தர்** என்னும் ஊரில், 1869-ஆம் ஆண்டில் காந்தியடிகள் பிறந்தார். அவர் தந்தையார் வணிக குலத்தைச் சேர்ந்தவர்; **இராசக் கோட்டைச்** சிற்றரசரிடம் அமைச்சராயிருந்தவர்; வாய்மை, நேர்மை என்னுஞ் சிறப்பியல்புகள் வாய்ந்தவர். அவருடைய மனைவியாரின் பெயர் **புத்தளிபா** என்பது. அவ்வம்மையார் கடவுள் பத்தியும், சமயப் பற்றும் நிறைந்தவர்; இந்து சமயத்துக்குரிய விரதங்கள் எத்தனையுண்டோ, அத்தனையும் மேற்கொள்ளும் வழக்கமுடையவர்; பொறுமைக்கு இருப்பிடமானவர்.

3. இத்தகைய பெற்றோர்க்குப் பிறந்த மைந்தர் எவ்வாறிருப்பர்? **'மகனறிவு தந்தையறிவு,'** என்பதும், **'தாயைப் போல் சேய்,'** என்பதும் நம் நாட்டு முதுமொழிகள். இவற்றிற்கிணங்கக் காந்தியடிகள் தந்தையார் வாயிலாக வாய்மை, நேர்மை ஆகிய பண்புகளையும், தாயார் மூலமாகச் சாந்தம், சமயப்பற்று, கடவுள் பத்தி ஆகிய உயர்ந்த குணங்களையும் பெற்றார்.

4. உயர்குணங்களுக்கு உறைவிடமாய் விளங்கிய காந்தியாரும் பள்ளி வாழ்க்கையில் பல தவறுகள் செய்துள்ளார். ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு சேருமானல், அந்தப் பால் முழுதும் நஞ்சாகும். அது போல, நற்குணங்கள் நிறைந்த பலரிடையே துர்க்குணங்கள் நிறைந்த சிலர் சேரினும், நல்லவர் தீயவராய் மாறிவிடுவர். அவ்வாறே நம் அடிகளும் தீயவர் உறவால் தீய ஒழுக்கங்களை மேற்கொண்டார். ஆயினும், அவர் தம் தவற்றையுணர்ந்து, உடனே திருந்திவிட்டார். இந்நெறியை நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

5. உள் நாட்டில் படிப்பு முடிந்த பிறகு, காந்தியடிகள் வழக்கறிஞர் படிப்புக்காக இங்கிலாந்துக்குப் போக விரும்பினர். அதற்கு அவருடைய அன்னையார் ஒப்புக்கொள்ளவில்லை. வெள்ளையர் நாட்டிற்குச் சென்ருல், மாமிசம் தின்னல், சாராயங் குடித்தல் போன்ற துர்ப்பழக்கங்கள் தம் மைந்தருக்குப் படிந்துவிடும் என்று பயந்தார் அவ்வம்மையார். அதை அறிந்த அடிகள், அன்னையார் கால்களில் விழுந்து வணங்கி, " அம்மா, நான் சாராயம் குடிக்க மாட்டேன் ; மாமிசத்தைத் தொடமாட்டேன்," என்று சத்தியம் செய்தார் ; அதன்படியே நடந்துகொண்டார் ; எத்தனையோ இடையூறுகளுக்கிடையே தம் அன்னையாருக்களித்த வாக்குறுதியை நிறைவேற்றினர்.

6. காந்தி மகான் மூன்ருண்டுகள் இங்கிலாந்தில் தங்கிப் 'பாரிஸ்டர்' பரீட்சையில் தேறி, இந்தியாவுக்குத் திரும்பினர். இராசக் கோட்டையில் வழக்கறிஞர் தொழிலை நடத்தத் தொடங்கினர் ; ஆனல், சில நாட்களுக்குள் ஒரு வழக்குக் காரணமாகத் தென்னுப்பிரிக்காவுக்குச் சென்ருர். அக்காலத்தில் வாணிகம் செய்து பொருள் திரட்டவும், கூலி வேலை செய்து வயிறு வளர்க்கவும் பல இந்தியர் அங்குச் சென்று குடியேறியிருந்தனர். அவர்களை அங்கு வசித்த ஆங்கிலேயர் மிகத் தாழ்வாக நடத்தினர். படித்தவர், பணக்காரர் முதலிய எல்லா இந்தியரையும் ஆங்கிலேயர் 'கூலிகள்' என்றே வழங்கி வந்தனர். அன்றியும், வண்டிகளிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும், பிற பொது இடங்களிலும் இந்தியரை வெள்ளையர் தம் அருகிலிருக்கவும் விடுவதில்லை.

7. அத்தகைய நிலை, அடிகள் மனத்தைப் புண்படுத்தியது. அவர் இந்தியருக்கு வெள்ளையர் செய்து வந்த கொடுமைகளை எங்ஙனமாவது போக்க வேண்டுமென்று தீர்மானித்தார். ஆட்சி உரிமையும், படையின் பலமும் பெற்றிருந்த ஆங்கிலேயரோடு மறப்போர் தொடுக்க இயலாதென்பதை அறிந்த அடிகள், அறப்போர் தொடுத்தார். அவர் தொடுத்த போரில் குண்டு, துப்பாக்கி முதலிய படைகளை நீக்கித் '**துன்புறுத்தாமை**' என்னும் படையைத் துணையாகக் கொண்டார்; இந்த அறப்போர்தான் '**சத்தியாக்கிரகம்**' எனப்படுவது. தாம் மேற்கொண்ட போரில் அடிகள் வெற்றி கண்டார்.

8. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்த போது, அங்கு வாழ்ந்திருந்த இந்தியர் ஒவ்வொருவரும் அரசியலாரிடமிருந்து அனுமதிச் சீட்டுகள் பெறவேண்டுமென்னும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அவ்வனுமதிச் சீட்டில் அதற்குரியவர் கல்வி கற்றவராயினும், கல்வியற்றவராயினும், தம் கைவிரல் பத்திலும் மையொற்றி அடையாளம் வைக்கவேண்டும்; பிறகு அச்சீட்டை எங்குச் சென்றாலும் எடுத்துச் செல்ல வேண்டும். அந்த அவமானத்தை நீக்க அடிகள் அறப்போர் தொடுத்தார்; வெற்றியும் கண்டார். அரசியலார் சமாதானம் செய்துகொண்டனர். அதன்படி விருப்பமுள்ளவர் மட்டும் சீட்டுப் பெறலாமெனவும், விருப்பமற்றவர் சீட்டுப் பெறவேண்டுவதில்லையெனவும் முடிவு செய்யப்பட்டது. அப்போது சிலர் சீட்டுப்பெற விரும்பினர். மற்றவர் அதை எதிர்த்தனர்.

9. சீட்டுப் பெற விரும்பியவர்களுள் காந்தியடிகள் முதன்மையானவர். ஒரு நாள் அவரும் அவருடைய நண்பர் சிலரும் சீட்டுகளைப் பெறுதற்குப் புறப்பட்டனர். காந்தியடிகளின் நண்பரான **மீர் ஆலம்** என்ற பட்டாணியரும், அவர் நண்பர் சிலரும் அவர்களை வழி மறித்தனர். அதைக் கேளாமல் சென்ற அடிகளை அவர்கள் நையப் புடைத்தார்கள். அவர் உதடு கிழிந்தது; முன் பற்கள் விழுந்தன. மூர்ச்சித்துக் கீழே விழுந்த அவரைச் சிலர் தூக்கிச் சென்று சிகிச்சைஅளித்தனர். இதற்குள் மீர் ஆலமும் அவர் நண்பர்களும் சிறை செய்யப்பட்டார்கள். காந்தியடிகள் நினைவு பெற்றெழுந்தவுடனே, "மீர் ஆலம் எங்கே?" என்றார்; அவர் சிறை செய்யப்பட்ட செய்-

தியை அறிந்தார் ; அவர்களைச் சிறையிலிருந்து அப்பொழுதே விட்டுவிட வேண்டுமென்றும், அவர்களைத் தண்டிக்கக் கூடா-தென்றும் காந்தியடிகள் கடிதம் எழுதிப் போலீஸ் அதிகாரிக்கு அனுப்பினர். அதற்கிணங்க அதிகாரி அவர்களை விடுதலை செய்தார்.

10. மகாத்துமாவின் இச்செயல் இயேசுநாதரின் இறுதிச் செயலை ஒத்திருக்கின்றதன்றோ? இயேசுநாதரைப் பகைவர்-கள் சிலுவையிலறைந்த போது, அவர், "ஆண்டவரே இவர்-கள் தங்கள் அறியாமையால் செய்த இச்செயலுக்காக இவர்-களை மன்னிக்க வேண்டும்," என்று ஆண்டவரை வேண்டிக்-கொண்டாரல்லவா? அங்ஙனமே தீமை புரிந்தார்க்கும் நன்மையே செய்ய வேண்டுமென்ற ஒப்பற்ற கொள்கைக்-காகவே உத்தமர் காந்தியடிகள் இறுதிக் காலத்தில் தம் உயிரை அர்ப்பணம் செய்தார்.

11. மகாத்துமா காந்தி காட்டிய நல்வழிகள் இன்னும் எத்தனையோ உண்டு. 'ஜாதி' என்னும் சொல்லையே அவர் விரும்பியதில்லை. ஒரு நாள் காந்தியடிகள் வடநாட்டிலுள்ள ஓர் ஊருக்குப் போயிருந்தார். அன்று மாலை ஒரு பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்-துக்கு வந்த ஹரிஜனங்கள், சிறிது தூரத்தில் தனியே அமர்த்-தப்பட்டார்கள். காந்தியடிகள் பேச்சு மேடைக்கு வந்தார். அவர் தூரத்தில் அமர்ந்திருந்தவர்கள் ஹரிஜனங்களென்பதை அறிந்துகொண்டார். மேடையை விட்டு இறங்கி அவர்க-ளிடையே போய் அமர்ந்தார். உயர் ஜாதியினரும் வேறு வழி-யின்றி ஹரிஜனங்களுடன் கலந்து அமர்ந்தனர். அதுகண்ட அடிகள் பேரானந்தமடைந்தார்.

12. மத சம்பந்தமாகக் காந்தியடிகள் கொண்டிருந்த கொள்கை நாம் கருத்தில் வைக்கத்தக்கது. அவர் தம்மை **வைஷ்ணவர்** என்று சொல்லிக்கொள்வது வழக்கம். ஆனால், அவருக்கு எல்லா மதங்களிடத்தும் பற்றுண்டு. அவர் ஒவ்-வொரு மதத்திற்குமுரிய நூல்களை நன்கு ஆராய்ந்தவர். 'கடவுள் ஒருவரே,' என்பது எல்லா மதங்களும் கூறும் உண்மை. ஆதலால், மதம் காரணமாக மக்கள் ஒருவரை-யொருவர் வெறுப்பதும், ஒருவரோடொருவர் சண்டையிடு-

வதும் அறியாமை காரணமாகவும், ஆணவம் காரணமாகவும் நிகழ்வன என்பது காந்தியடிகளின் கருத்து. எல்லா மதத்தினரும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமென அவர் விரும்பினர்; அம்முயற்சியில் தம் ஆருயிரையுமிழந்தார்.

13. அடிகள் தென்னுப்பிரிக்காவில் தமது அறப்போரை முடித்துக்கொண்டு, 1914ல் இந்தியாவுக்கு வந்தார். அவர் விரும்பியிருந்தால், தம் வழக்கறிஞர் தொழிலில் அளவற்ற செல்வம் திரட்டியிருக்கலாம்; அரசர்போல வாழ்ந்திருக்கலாம். ஆனால், தந்நலமற்ற அவர், அயலார் ஆட்சியிலிருந்து தம் நாட்டுக்கு விடுதலை பெறும் வேலையில் முனைந்தார்; ஆயுதமின்றி அறப்போர் நிகழ்த்தினர்; தம் முதுமையைக் கருதாமல் முப்பதாண்டுகள் உழைத்து வெற்றி கண்டார். 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் நாள் நள்ளிரவில் நம்மையும் நம் நாட்டையும் சூழ்ந்திருந்த அடிமையாட்சி என்னுமிருள் மறைந்து, சுதந்தரம் என்னும் சூரியன் உதிக்கக் கண்டு, அடிகள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். ஆனால், நம்மை நல்வழிப்படுத்தவும், நம் நாடு மேலும்மேலும் முன்னேறவும் அவர் நீண்ட நாள் வாழவில்லை. நாடு சுதந்திரமடைந்து ஐந்து திங்களுக்குள்ளேயே அவர் மறைந்தார்.

14. நமக்கும், நமது நாட்டுக்கும் தம்முடைய உடல், பொருள், உயிர் மூன்றையும் கொடுத்துதவிய உண்மைத் தியாக மூர்த்திக்கு நாம் செய்யத்தக்கது யாது? அஃது அவர் காட்டிய வழியில் நிற்றலேயாம். **சாதி வேறுபாடு, சமயப்பூசல், மதுபானம், தீண்டாமை, கல்வியின்மை** ஆகிய பேய்களை நம் நாட்டினின்றும் வெளியேற்றி வெற்றி காண்பதே நாம் அவர் காட்டிய வழியில் நிற்றலுக்கு அடையாளமாகும். அதுவே நமது நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையாகும்.

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. காந்தியடிகள் எப்பெரியார்களுக்கு ஒப்பாகக் கூறப்படுகிறார்?

ஆ. புத்தளிபாவின் அரிய குணங்கள் யாவை?

இ. காந்தியடிகள் தம்மைப்பற்றிய தீய ஒழுக்கங்களினின்று எவ்வாறு தம்மை விடுவித்துக்கொண்டார்?

ஈ. காந்தியடிகள் இங்கிலாந்துக்குச் செல்வதற்கு முன் மேற்கொண்ட விரதங்கள் யாவை?

உ. மகாத்துமா தென்னுப்பிரிக்காவில் அறப்போர் தொடுக்க நேர்ந்த காரணம் யாது?

ஊ. 'மீர் ஆலம்' என்பவர் யார்? அவரும் அவர் துணைவரும் காந்தியடிகளை ஏன் புடைத்தனர்?

எ. இயேசுநாதரின் இறுதிச் செயலோடு மகாத்துமாவின் எந்தச் செயலை ஒப்பிடலாம்?

ஏ. காந்தியடிகள் மத சம்பந்தமாகக் கொண்டிருந்த கருத்து யாது?

2. கீழ் வரும் சொற்றெகுதிகளை வாக்கியங்களாக அமைக்க:

அ. மதத்திற்கும் ஒவ்வொரு உரிய நன்கு நூல்களை ஆராய்ந்தவர்.

ஆ. தம்முடைய நமக்கும் உடல், பொருள், உயிர் நமது நாட்டுக்கும் மூன்றையும் உதவியவர் அவர்.

3. கீழ் வரும் சொற்களுக்குப் புத்தகத்தின் இறுதியிலுள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

உத்தமர், இயலாது, ஒப்புயர்வு, அமைச்சர், வாய்மை, நேர்மை, உறைவிடம், நஞ்சு, களவாடு, வழக்கறிஞர், இடையூறு, கொடுமை, போர் தொடுக்க, துன்புறுத்து, கையப் புடைத்தார், சிகிச்சை, அர்ப்பணம், தியாகம்.

4. வாக்கியங்களில் அமைக்க:

இயலாது, கடமை, வாய்மை, ஒழுக்கம், உறுத்தியது, ஆறுதல், பொருள் திரட்ட.

2. கவியரசர் கம்பர்

"வெண்பாவிற் புகழேந்தி ; பரணிக்கோர் சயங்கொண்டான் ;
விருத்த மென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் ; கோவைஉலா அந்தாதிக்(கு)
ஒட்டக் கூத்தன் ;
கண்பாய கலம்பகத்துக்(கு) இரட்டையர்கள் ; வசைபாடக்
காள மேகம் ;
பண்பாய பகர்சந்தம் படிக்கா(சு) அலால்ஒருவர்
பகரொ ணாதே."

என்பது ஒரு பழம்பாட்டு. இது புகழேந்தி, சயங்கொண்டார், கம்பர், ஒட்டக்கூத்தர், இரட்டையர், காளமேகம், படிக்காசுப் புலவர் ஆகிய சிறந்த புலவர்களின் சிறப்பை விளக்குகிறது; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான பாட்டோ, நூலோ இயற்றுவதில் மேன்மை பெற்று விளங்கினர் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது. எனவே, தமிழில் ஆக்கப் பெறும் பல வகைப் பாக்களில் விருத்தப்பா இயற்றுவதில் கம்பர் தலை சிறந்தவர் என்பது நன்கு விளங்குகின்றது. கம்பரைக் கவிச்சக்கரவர்த்தி என்று தமிழறிஞர் கூறுகின்றனர். 'கம்பசூத்திரம்' என்னும் வழக்கும், 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்,' என்னும் வாக்கியமும் கம்பரின் கல்வித் திறத்தை விளக்க எழுந்தவை.

2. கம்பர் சோழநாட்டி லுள்ள திருவழுந்தூரில் ஏறத்தாழ எண்ணூறுண்டுகட்கு முன்பு பிறந்தார். இவர் வேளாண்குலத்தவரென்பர் பலர் ; இளமையில் உவச்சர் வீட்டில் வளர்ந்தமையால், உவச்சர் குலத்தவரென்று கூறுவர் சிலர். இவர் தமது இளமையிலேயே பெற்றோரை இழந்து, உவச்சர் குலத்தவர் ஒருவரால் வளர்க்கப்பெற்றார். பின்னர், திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, அங்கு அக்காலத்தில் சிறந்த கொடையாளியாய் விளங்கிய சடையப்ப வள்ளல் என்பவரால் ஆதரிக்கப் பெற்று, அவர் இல்லத்திலேயே வளர்ந்து வந்தார் ; அச்சடையப்பரின் பிள்ளைகளுடன் ஓர் ஆசிரியரிடத்துத் தமிழ் கற்றார். தமது ஊக்கத்தாலும், இறைவன் இன்னருளாலும்

இவர் விரைவில் பெரும்புலவரானார். இவரது புகழ் நாடெங்கும் பரவியது.

3. அக்காலத்திற் சோழ நாட்டை ஆண்டவர் **இரண்டாம் குலோத்துங்கர்.** அவர் தமிழ் மொழியின்மீது பேரன்புடையவர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழ் வளர்த்த மன்னருள் ஒருவர். அவரது அவைக்களத்தை **ஒட்டக்கூத்தர்** முதலான பெரும்புலவர்கள் அலங்கரித்துத் தமிழாராய்ந்தார்கள்.

4. கம்பரைப்பற்றிக் கேள்வியுற்ற குலோத்துங்க மன்னர் அவரை வரவழைத்தார்; இவர் புலமையை நேரிலறிந்து அவருக்குப் பல சிறப்புக்கள் செய்தார்; '**கவிச்சக்கரவர்த்தி**' என்னும் பட்டத்தையும் வழங்கினார்; சிறு நாடொன்றையும் நன்கொடையாக நல்கினார்; அன்றியும், இவரைத் தம் அவைப்புலவராகவும் அமர்த்திக்கொண்டார். கம்பர் அவ்வப்போது அழகிய பாக்கள் இயற்றி மன்னரை மகிழச் செய்தார்.

5. ஒரு நாள் ஏதோ காரணம்பற்றி அரசர்க்குப் புலவர் மீது சீற்றம் பிறந்தது. கம்பரை நோக்கி, "நீர் இனி எமது நாட்டில் இருத்தல் கூடாது. விரைவில் வெளியேறுக!" என்று ஆணையிட்டார் அரசர். கம்பநாடர் வெகுண்ட மன்னரை நோக்கி, "**கொல்லிமலை நாடாளும் கொற்றவா, நீ முனிந்தால், இல்லையோ எங்கட்கிடம்?**" என்று கூறிச் சோழநாட்டை விட்டகன்றார். பண்டைப் புலவரின் பண்பு இதுவே. தன்மதிப்பே அவர்தம் தனிப் பண்பு. பட்டம் பதவிகளை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், மானத்தையே பெரிதாக மதிப்பது அவர் மனப்பாங்கு.

6. சோழநாட்டை விட்டகன்ற கம்பர், ஆந்திர நாட்டை அடைந்தார். அங்குள்ள **ஓரங்கல்** என்னும் சிறுநாட்டை அக்காலத்தில் **பிரதாபருத்திரர்** என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவர் கம்பநாடர் தம் நாட்டில் வந்திருந்த செய்தியை அறிந்தார்; உடனே தம் பிரதானிகளை அனுப்பி, அவரை அழைத்து வரச் செய்தார்; புலவருக்கு நல்வரவு கூறி, பரிசுகள் வழங்கித் தம் அவையில் இருக்குமாறு இவரை வேண்டிக்கொண்டார். கம்பரும் அதற்கிசைந்து, அங்கு வீற்றிருந்து, ஆந்திர அரசரைத் தம்முடைய இனிய தமிழ்ப் பாக்களால் மகிழ்வித்து வந்தார்.

7. சில நாட்கள் கழிந்தன. கம்பநாடரில்லாத குலோத்துங்கரின் சபை சந்திரனில்லா வானம் போலப் பொலிவிழந்து காணப்பட்டது. மன்னர் மனத்தில் கம்பநாடரைப் பற்றிய நினைவு அடிக்கடி தோன்றித் துன்புறுத்தத் தொடங்கியது. அவருக்குத் தாமிழைத்த துன்பத்தைப்பற்றி அரசர் எண்ணியெண்ணி வருந்தினர்; இறுதியில் கம்பநாடார் தங்கியிருந்த இடத்தைக் கண்டறிந்து வரும்படி ஏவலாளரைப் போக்கினர். பிரதாபருத்திரரின் சபையில் அவர் தங்கியுள்ளார் என்பதை அறிந்த குலோத்துங்கர், அவசர புத்தியால் தவறு செய்த தம்மை மன்னித்து, மீண்டும் தம் நாட்டிற்கு வந்து, தம் அவையை அலங்கரிக்க வேண்டுமென்று கோரிக் கம்பருக்கு ஓலையனுப்பினர். அறியாமையாற் செய்த தீமையை மறந்து விடுவதே அறிஞரின் பண்பாதலால், கம்பர், சோழ மன்னரை மன்னித்து, மீண்டும் சோழநாட்டை அடைந்தார்.

8. கம்பர் சோழ நாட்டுக்குத் திரும்பிய பின்பு, சடையப்ப வள்ளலின் வேண்டுகோளாலும், சோழ அரசரின் தூண்டுதலாலும் இராமாயணத்தை இயற்றத் தொடங்கினர். பல வடமொழிப் பண்டிதர்களை வால்மீகி இராமாயணத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்டு, நாளொன்றுக்கு நூற்றுக் கணக்கில் செய்யுட்களைப் பாடித் தம் காவியத்தை முடித்தார்.

9. கம்பராமாயணம் பன்னீராயிரஞ் செய்யுட்களாலியன்றது. அவற்றுள் இறுதியிலுள்ள ஆயிரத்தைந்நூறு பாடல்கள் ஒட்டக் கூத்தரால் பாடப்பட்டவை. மற்றவை கம்பரால் பாடப்பட்டவை. கம்பர் நன்றியறிதல் மிக்கவர். அவர் தம்மை இளமையில் பாதுகாத்த சடையப்ப வள்ளலைத் தாம் இயற்றிய இராமாயணத்தில் பத்திடங்களில் புகழ்ந்து பாடித் தம் நன்றியை வெளிப்படுத்தியுள்ளார்.

10. அக்காலத்தில் புலவர் எவரேனும் நூலியற்றினல், அதனைக் கற்றவர் நிறைந்த சபையில் படித்துக் காட்டுவது வழக்கம். சபையிலுள்ள அறிஞர், அந்நூலின்கண் ஏதேனும் ஐயமெழுப்பினல், நூலாசிரியர் தக்க விடை கூறி, அவ்வையத்தை நீக்க வேண்டும். பின்பு சபையார் அந்நூலுக்குப் புகழுரை கூறுவர். இந்த முறை '**அரங்கேற்றுதல்**' எனப்படும். கம்பர் தாமியற்றிய இராமாயணத்தைத் **திருவரங்கத்தில்** பெரும்புலவர் பலர் முன்னிலையில் அரங்கேற்றினர். அக்காலத்-

திலும், இக்காலத்திலும் அவர் நூலைப் புகழாத தமிழ்ப்புலவர் எவருமிலர். இராமாயணத்தைத் தவிரக் கம்பர் இயற்றிய வேறு நூல்களும் உண்டு. கம்பநாடர் வாழ்க்கையைப் பற்றிய கதைகள் பற்பல. அவற்றைப் படித்தறிய வேண்டுவது தமிழ் மாணவ மாணவிகள் கடமையாம்.

பயிற்சி:

1. விடை எழுதுக:

அ. கம்பர் எவ்வகைச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர்?
ஆ. வசை பாடுவதில் வல்ல புலவர் யார்?
இ. கம்பர் எப்போது, எங்குப் பிறந்தார்?
ஈ. கம்பர் தம் இளமைப் பருவத்தில் எங்கு வளர்ந்தார்?
உ. கம்பர் ஏன் சோழ நாட்டை விட்டகன்றார்?
ஊ. பண்டைப் புலவர்களிடம் காணப்பட்ட தனிப் பண்புகள் எவை?
எ. கம்பராமாயணத்தைப் பற்றிச் சிறு குறிப்பு ஒன்று எழுதுக.
ஏ. 'அரங்கேற்றம்' என்பது யாது?

2. சொல்லியபடி செய்க:

அ. கம்பர் திருவழுந்தூரில் பிறந்தார். (வாக்கியத்தைத் 'திருவழுந்தூர்' என்று தொடங்கி எழுதுக.)
ஆ. கம்பர் இளமையிலேயே பெற்றோரை இழந்து, உவச்சர் குலத்தவர் ஒருவரால் வளர்க்கப்பெற்றார். (இதனை இரண்டு வாக்கியங்களாக எழுதுக.)
இ. குலோத்துங்கர் சோழநாட்டை யாண்டார். ('சோழ நாடு' எனத்தொடங்கி வாக்கியத்தை எழுதுக.)
ஈ. சிறு நாடொன்றை நன்கொடையாக நல்கினர். ('நல்கினர்' என்பதற்குப் பதில் 'நல்கப்பட்டது' என்னும் சொல்லை அமைத்து வாக்கியத்தை எழுதுக.)

3. இப்புத்தகத்தின் இறுதியிலுள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

ஒழுக்கம், அறிஞர், திறம், வள்ளல், இல்லம், இன்னருள், அவைக்களம், நன்கொடை, வெகுண்டு, சீறும், பண்பு, மனப்பாங்கு, அகன்ற, பிரதானி, இசைந்து, பொலிவு.

3. மாண்டவன் மீண்ட மாயம்

1. பண்டைக் காலத்தில் வடநாட்டில் **மட்டி புரம்** என்ற சிற்றூர் ஒன்றிருந்தது. அதன் புரத்தே இருந்த மரங்கள் செறிந்த சோலையொன்றில் முற்றுந்துறந்த முனிவரொருவரின் ஆசிரமம் இருந்தது. அதற்கு **மௌட்டிய மடம்** என்பது பெயர். அதன் தலைவராய் விளங்கியவர் **பரமார்த்தர்** என்னும் குரு சிரேட்டர். அற்புதமான சீடர் ஐவரை அவர் தம் பூர்வ புண்ணியவசத்தால் பெற்றிருந்தார். **மட்டி, மடயன், மூடன், மிலேச்சன், பேதை** என்பன அச்சீடர்களின் பெயர்கள்.

2. ஒரு நாள் குருவும் சீடரும் ஏதோ வேலை காரணமாக அயலூருக்குப் போக நேரிட்டது. வழியில் யாறு ஒன்று குறுக்கிட்டது. அதன் கரையை அடைந்தவுடனே மட்டி என்னுஞ் சீடன், குரு நாதர் முன்னே வந்து அவரடிகளில் விழுந்து வணங்கி, "குரு நாதரே, அடியேன் கூறுவதைக் கேட்டருளக் கோருகிறேன்; இந்நதி கொடியது. என் தந்தையார் இதைப் பற்றிய செய்தியொன்றை எனக்குக் கூறியுள்ளார். அதனை அவர் உரைத்தவாறே தெரிவிக்கின்றேன். கேளுங்கள்; ஒரு நாள் என் தந்தையாரும் அவர் நண்பரொருவரும் உப்புப் பொதி ஏற்றப்பட்டிருந்த இரண்டு கழுதைகளை ஓட்டிக் கொண்டு இவ்வாற்றைக் கடந்து சென்றார்களாம். கோடைகாலமாதலின் நட்டாற்றில் கழுதைகளை நிறுத்திக் குளிப்பாட்டித் தாங்களும் குளித்துக் கரையேறினார்களாம். அந்தோ! என்னென்று சொல்வது இந்நதியின் கபடச் செயலை! சிறிதும் சந்தில்லாதபடி தைக்கப்பட்டிருந்த கோணிப் பையின் வாய் சற்றும் திறவாதிருக்க, **தோலிருக்கச் சுளை விழுங்கியது போலக்** கோணியினுள்ளிருந்த உப்பையெல்லாம் இந்த யாறு தின்றுவிட்டிருந்ததாம். ஆதலால், நம்முள் எவரையேனும் இது விழுங்கிவிடக்கூடும். இந்நதி விழித்திருக்கும்போது நாம் இதனைக் கடத்தலாகாது," என்று பயபக்தியுடன் மொழிந்தான்.

3. அது கேட்ட அனைவரும் வியப்பெய்தினர். "மட்டி சொல்வதில் உண்மையிருக்க வேண்டும். '**ஜாக்கிரதைக்குப் பயமில்லை**,' என்பர் பெரியார். ஆதலால், நாம் யாறு தூங்கும்

நேரத்தை அறிந்து அதனைக் கடத்தலே சிறந்தது,'' என்றார் குரு நாதர்.

4. உடனே மடயன் குரு நாதரைப் பார்த்து, "நீங்கள் இங்கேயே இருங்கள். நான் சென்று யாறு விழித்திருக்கிறதா, தூங்குகிறதா என்பதை அறிந்து வருகிறேன்,'' என்று கூறிச் சுருட்டு பற்ற வைப்பதற்காகத் தான் கையில் வைத்திருந்த கொள்ளிக்கட்டையோடு யாற்றை அணுகினான்; நீரில் இறங்-காமல் சிறிது தூரத்திலேயே நின்று, கொள்ளிக்கட்டையைத் தண்ணீரில் தோய்த்தான். உடனே அது சுரீரென்று புகைந்த-தைக் கண்டு, துள்ளிக் குதித்து ஓடி வந்தான்; "ஐயா, நதியைக் கடக்க இது தருணமன்று! அது விழித்திருக்கிறது! நான் அருகிற்சென்று தொட்டவுடனே அது பாம்பெனச் சீறிப் பாய்ந்தெழுந்து, என்னைப் பற்றித் தின்ன வந்தது! அடியேன் உங்கள் கிருபா நோக்கம் பெற்றவனாகையால், உயிர் தப்பி வந்து சேர்ந்தேன்!'' என்று நடுநடுங்கிக்கொண்டே கூறினான்.

5. சிறிது நேரங்கழித்துக் குரு நாதர், "யாராவது சென்று நதி தூங்கிவிட்டதா என்பதை அறிந்து வந்தால் நாம் சீக்கிரம் மடத்தையடையலாம்,'' என்றார்.

6. அதுகேட்ட மூடன், குரு நாதர் ஆணையைச் சிரமேற்-றுங்கி, கொள்ளிக்கட்டையைக் கையிலெடுத்துக்கொண்டு, விரைவாயோடினான்; மிக்க பயத்துடன் தொலைவில் நின்று, கொள்ளிக்கட்டையை மெல்லத் தண்ணீரில் நனைத்தான். முன்-னமே அக்கட்டையின் நெருப்பு அணைந்திருந்தமையால், எவ்-வித ஓசையும் எழவில்லை. அது கண்ட அவன் மகிழ்ச்சி மிக்கவனாய், ஒரே பாய்ச்சலாய்க் குரு நாதரிடம் ஓடி வந்து, 'குரு சிரேஷ்டரே, எழுந்திருங்கள்! ஒரு வினாடி கூடத் தாமதித்தல் கூடாது! நதி நன்றாய்த் தூங்குகின்றது! புறப்-படுங்கள் சீக்கிரம்!'' என்றான்.

7. அதைச் செவியுற்ற அனைவரும் யாற்றை அணுகி, வாயைத் திறவாமல் மூச்சை அடக்கிக்கொண்டு, மெல்ல மெல்ல அடிமேலடி வைத்து, நதியைக் கடந்து கரையேறி-விட்டார்கள்.

8. அப்போது அவர்கள் அடைந்த ஆனந்தத்தை அளவிட்டுக் கூறல் இயலாது. "நாமனைவரும் நம் குரு நாதரின் அருள் விசேடத்தாலன்றோ நதியால் விழுங்கப்படாமல் கரை ஏறினோம்!" என்றான் பேதை.

9. இதற்குள் குரு நாதருக்குத் தம் அருள் விசேடத்தில் ஐயம் பிறந்துவிட்டது. அவர், "அது கிடக்கட்டும்; நாம் அனைவரும் வந்து சேர்ந்து விட்டோமா என்று எண்ணிப் பாருங்கள்," என்று கூறினார்.

10. உடனே மட்டி எண்ணத் தொடங்கினான். அவன் தன்னைக் கூட்டிக்கொள்ளாமல் மற்றவரை மட்டும் எண்ணி, ஐந்து பேர் மட்டுமே இருக்கக்கண்டு, "ஐயையோ! இப்பொல்லாத நதி நாம் அறியாதபடி நம்முள் ஒருவரை விழுங்கி விட்டதே! என்ன செய்வது!" என்று கதறத் தொடங்கினான். மற்றச் சீடர் ஒவ்வொருவரும் மட்டியைப் போலவே கணக்கிட்டு, "ஐயோ! நம்முள் ஒருவன் மாண்டானே! என்ன செய்வோம்!" என்று வாயிலும் தலையிலும் அறைந்து கொண்டு அழத் தொடங்கினர். குரு சிரேட்டர் என்ன செய்வார்! பாவம்! அவரும் கணக்கிட்டார். விதி யாரை விட்டது! அவர் கணக்கும் மற்றவர் கணக்கே போன்றதாயிற்று. ஆதலால், அவரும் ஒப்பாரி வைக்கத் தொடங்கினார்.

11. அவர்கள் இங்ஙனம் அழுதுகொண்டிருந்த போது, ஒரு வழிப்போக்கன் அவ்விடத்தை அடைந்தான். அவன் அவர்கள் அடைந்த துன்பத்தைக் கண்டு, அவர்களை அணுகி, "ஏனையா இவ்வாறு புலம்புகிறீர்கள்? உங்களுக்கு என்ன நேர்ந்தது?" என்று வினவினான். தங்கள் துக்க மேலீட்டால் ஒருவரும் வழிப்போக்கனுக்கு விடை கூற முன்வரவில்லை. ஆயினும், வழிப்போக்கன் பல முறை கேட்ட பின், மிலேச்சன் சிறிது மனம் தேறி, "ஐயா, எங்கள் துன்பத்தை என்னென்று கூறுவது! நாங்கள் ஆறு பேர் ஒரு வேலை நிமித்தம் பிரயாணம் தொடங்கினோம். இந்த யாறு குறுக்கிட்டது. இதன் கொடுமையை முன்னமே அறிந்திருந்த நாங்கள், முன் சாக்கிரதையாய் இது தூங்குந்தருணம் பார்த்து இதைக் கடந்தோம். அப்படியும், பாழாய்ப்போன இந்நதி அறுவருள் ஒருவரை விழுங்கிவிட்டது. நாங்கள் இனி எப்படி உயிர் வாழ்வோம்!" என்று அழுதுகொண்டே கூறினான்.

12. அது கேட்ட வழிப்போக்கன் அவர்களை எண்ணிக் கணக்கிட்டான். அறுவர் இருக்கக் கண்டான்; அவர்களுடைய அறிவின்மையை நன்கு தெரிந்து கொண்டான். குறும்புத்தனம் நிறைந்த அவன், தன் குறும்பை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புக் கிடைத்ததையெண்ணி மகிழ்ந்தான். உடனே அவர்களை நோக்கி, "ஐயன்மீர், நீங்கள் அழவேண்டா. நான் மந்திரத்தில் வல்லவன். என் மந்திர சக்தியாலும், என் குரு நாதரின் அருளாலும் நதியில் மாண்டவனை நான் வருவிக்கிறேன். ஆனால், நான் சொல்கிறபடி மட்டும் நீங்கள் கேட்க வேண்டும். அன்றியும் ஐம்பது பணம் எனக்களிக்கவேண்டும். இவற்றிற்கு நீங்கள் உடன்படுவீர்களாயின், ஒரு கணப் பொழுதில் மாண்டவன் மீண்டும் வரும்படி செய்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.

13. அவர்களுக்கு மந்திரவாதியிடம் நம்பிக்கை பிறந்தது. அவன் விரும்பியபடி நடந்துகொள்ள அவர்கள் உடன்பட்டார்கள். ஆனால், ஐம்பது பணத்துக்கு எங்குப் போவது எனத் திகைத்தார்கள். ஆயினும், குரு நாதர் சிறிது மனம் தேறியவராய், மந்திரவாதியை அணுகி, "ஐயா, நீர் சொல்லுகிறபடியே கேட்க நாங்கள் உடன்படுகிறோம்; ஆனால் எங்களிடம் உமக்குக் கொடுக்க ஐம்பது பணமில்லையே என்றுதான் யோசிக்கிறோம். எங்கள் வழிச் செலவுக்காக வைத்திருக்கும் பதினைந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, உமது மந்திர பலத்தால் மாண்டவனை மீண்டும் வருவிக்கக் கோருகிறேன். உமக்குக் கோடிப் புண்ணியமுண்டு!" என்றார்.

14. தன் குறும்புத்தனத்துக்குப் பதினைந்து பணம் பரிசு கிடைப்பதைக்கண்ட வழிப்போக்கன் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, "நீங்கள் மிகவும் நல்லவர்களாய்க் காணப்படுகிறீர்கள்! உங்களிடம் என்னையறியாமலே எனக்குக் கருணை பிறக்கிறது. ஆதலால், உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய யான் உடன்படுகிறேன். பதினைந்து பணத்தை முதலில் என்னிடம் கொடுங்கள்," என்றான். ஐம்பது பணம் கேட்ட மந்திரவாதி பதினைந்து பணத்துக்குச் சம்மதித்துத் தங்கள் குறையைத் தீர்க்க உடன்பட்டது தங்கள் பூர்வ புண்ணியமெனக் கருதிய அவர்கள், பதினைந்து பணத்தை உடனே அவனிடம் கொடுத்துவிட்டார்கள்.

15. பிறகு மந்திரவாதி அவர்களை வரிசையாக நிறுத்தினான். " நான் சொல்கிறபடி செய்யவேண்டும், தெரிகிறதா? என் கையில் உள்ள இத்தடி மந்திர சக்தி வாய்ந்தது. நான் இதனால் ஒவ்வொருவர் முதுகிலும் ஓர் அடி கொடுப்பேன். முதலில் அடி படுபவர் தம் பெயரைக் கூறிவிட்டு '**ஒன்று**' என்று எண்ண வேண்டும். இரண்டாவது அடி வாங்குபவர் தம் பெயரைக் கூறிவிட்டு, "**இரண்டு**" என்று சொல்ல வேண்டும். இவ்வாறே ஒவ்வொருவரும் சொல்லவேண்டும், தெரிகிறதா?" என்று எச்சரித்தான். பிறகு தன் கைத்தடியால் தாட்சணியமின்றியும், கை கூசாமலும் ஒவ்வொருவன் முதுகிலும் ஒவ்வோர் அடி அடித்தான். ஒவ்வொருவனும் தன் பெயரைக் கூறிவிட்டு, ஒன்று, இரண்டு என்று கூறிக்கொண்டே வந்தபோது, இறுதியில் அடிபட்ட குரு நாதர், " அப்பா! என் பெயர் பரமார்த்தன்; **ஆறு**." என்றார்.

16. உடனே மந்திரவாதி, " பார்த்தீர்களா! இப்பொழுது ஆறு பேரும் இருக்கின்றீர்கள் அல்லவா? மாண்டவனை மீண்டும் வருவித்துவிட்டேன்! மகிழ்ச்சியாய்ப் போங்கள்," என்று கூறிவிட்டுப் பதினைந்து பணத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

பயிற்சி :

1. விடை எழுதுக:

அ. மௌட்டிய மடத்தில் வசித்துக் கொண்டிருந்தவர்கள் யார்? அவர்களுடைய பெயர்கள் யாவை?

ஆ. யாற்றின் கபடச் செயலாகக் கூறப்படுவது யாது?

இ. யாற்றின் தூக்கம் எங்ஙனம் சோதிக்கப்பட்டது?

ஈ. குருவும் சீடரும் ஏன் அழுதனர்?

உ. வழிப்போக்கன் எப்படிப்பட்டவன்? அவன் கூறிய மொழிகள் யாவை?

ஊ. குரு நாதர் வழிப்போக்கனிடம் கூறியது யாது?

எ. வழிப்போக்கன் மாண்டவனை எவ்வாறு மீளச் செய்தான்?

2. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

ஆசிரமம், சிரேட்டர், செய்தி, பொதி, கபடம், வியப்பு, அணுகி, அளித்து, கண்கூடு, ஆணை, மகிழ்ச்சி, ஐயம், ஒப்பாரி, வாய்ப்பு, கருணை.

3. பொருள் எழுதி வாக்கியங்களில் அமைக்க :

கரை - கறை ; கூரிய - கூறிய ; உரை - உறை ; இரங்கு - இறங்கு.

4. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதில் அப்பொருளுடைய வேறு சொற்களை அமைத்து எழுதுக :

அ. **பண்டைக்** காலத்தில் வட நாட்டில் மட்டி புரம் என்னும் **சிற்றூர்** ஒன்றிருந்தது.

ஆ. இதைப் பற்றிய **செய்தி**யொன்றை என் **தந்தையார் கூறியுள்ளார்**.

இ. இவர்கள் உரையாடிக்கொண்டிருந்த போது, ஒருவன் குதிரையைச் **செலுத்திக்கொண்டு** வந்தான்.

ஈ. அவர்கள் அடைந்த **ஆனந்தத்தை** அளவிட்டுக் கூற **இயலாது**.

4. கலைக்கோயில்

1. கலை என்பது வித்தை ; கோயில் என்பது இருப்பிடம். ஆகவே, '**கலைக்கோயில்**' என்னுந் தொடருக்கு '**வித்தைக்கு இருப்பிடம்**' என்பது பொருளாகும். ஓவியம், சிற்பம், விஞ்ஞானம் முதலிய சில கலைகள் பயிலப்படும் இடம் '**கலா சாலை**' எனப்படும். எல்லாக் கலைகளும் பயிலப்படும் இடம் '**சர்வகலாசாலை**' எனப்படும். இத்தகைய கலாசாலைகளும், சர்வகலாசாலைகளும் நமது நாட்டில் பல உள்ளன. ஆனால் இவற்றுள் பல, பெயரின் பொருளுக்கேற்றவாறு அமைந்தவை அல்ல. பெயரின் பொருளுக்கேற்றதாயும், இயற்கையோடு ஒத்ததாயும், மாணவ மாணவிகளின் மனத்துக்கு இயைந்ததாயும் கலாசாலை இருக்கவேண்டுமென்று நமது நாட்டுப் பெருங்கவிஞர் **இரவீந்திரநாத தாகூர்** கருதினர்.

தம் கருத்திற்கிணங்க ஒப்புயர்வற்றதொரு கலைக் கோயிலையும் தோற்றுவித்தார். அதற்குச் '**சாந்தி நிகேதனம்**' என்பது பெயர்.

2. கவி சிரேட்டரான இரவீந்திரநாத தாகூரை அறியாதவர் இரார். அவர் இந்தியத் தாயின் இணையற்ற புதல்வர். நமது நாட்டில் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கல்விப் பயிற்சி நமது நாட்டுக்கு ஏற்றதன்று என்பது அவருடைய கருத்து. ஆதலால், அவர் நமது நாட்டுக்கேற்ற கலைப் பயிற்சியை அளிக்கத்தக்க கலைக்கோயில் ஒன்றை நிறுவத் துணிந்தார் ; 1901-ஆம் ஆண்டில் அதை நிறுவினர்.

3. இரவீந்திரநாத தாகூர் இளைஞராயிருந்தபோது ஒரு சம்பவம் நிகழ்ந்தது : அவர் தந்தையாரான **மகரிஷி தேவேந்திர நாத தாகூர்**, **போல்பூர்** என்னும் ஊருக்கு இரண்டு மைல் தூரத்தி-

லுள்ள மரங்கள் செறிந்த ஓர் இடத்தில் ஓர் ஆசிரமத்தை அமைத்தார்; அவர் அதிற்றங்கி அருந்தவம் புரிந்து, அமைதி-யாய் வாழ்ந்து வந்தார். இளைஞராயிருந்த இரவீந்திரநாத தாகூர், ஒரு நாள் அத்தனியிடத்துக்குச் செல்ல நேர்ந்தது. அங்குச் சில நாட்கள் தங்கியிருந்த தனயரும் தந்தையாரும், பல செடிகொடிகளை உற்பத்தி செய்து, அவ்விடத்தைப் பொலிவு மிக்க பொழிலாக்கினர்.

4. பல ஆண்டுகட்குப் பின்னர் இரவீந்திரநாத தாகூர் தம் கருத்திற்கிசைந்த கலைக் கோயிலைச் **'சாந்தி நிகேதனம்'** என்னும் பெயருடன் அப்பொழிலின்கண் நிறுவினர். **'சாந்தி'** என்னும் சொல்லுக்கு **'அமைதி'** என்பது பொருள். **'நிகேதனம்'** என்பது **'வீடு,' 'தேவர் கோயில்'** என்னும் பொருள்களையுடையது. ஆகவே, **'அமைதிக்கு இருப்பிடம்'** என்னும் பொருள்படுவது **'சாந்தி நிகேதனம்'** என்னும் தொடர்.

5. பாரத நாட்டுப் பண்டைக் கல்வி முறையைப் பின்-பற்றியதாய், இயற்கைக்கு ஒத்ததாய், ஆசிரமம்போன்றதாய்ச் சாந்தி நிகேதனம் விளங்கவேண்டும் என்பது இரவீந்திரநாத

தாகூரின் நோக்கம். அங்ஙனமே அமைக்கப்பட்ட அக்கலைக்கோயில் இன்றும் புகழுக்குரியதாய் விளங்கி வருகின்றது. அங்குத் தினசரி வாழ்க்கை எவ்வாறு நடைபெறுகின்றதென்பதைத் தெரிந்துகொள்வோம் :

6. விடியற்காலம் 4-30 மணிக்குச் சில மாணவர் இன்னிசை பாடிக்கொண்டு அக்கலா நிலையத்தைச் சுற்றி வருவர். அதைக் கேட்டு ஆசிரியரும் மாணவரும் துயில் நீத்து எழுவர் ; உடனே தத்தம் விடுதியைக் கூட்டிச் சுத்தம் செய்துவிட்டு, வெளியே செல்வர். மலஜலம் கழித்த பிறகு, எல்லாரும் வெளியிடத்திலிருந்து, உடற்பயிற்சி செய்வர் ; அதன் பின்னர்க் கிணறுகளிலிருந்து இராட்டினங்களால் தண்ணீர் முகந்து, குளித்தல், துணி தோய்த்தல் முதலிய வேலைகளைச் செய்வர்.

7. காலைக் கடன்களைக் கழித்த பிறகு எல்லாரும் தியானத்தில் இருப்பர். இது பதினைந்து நிமிஷ நேரம் நடைபெறும். இதில் எல்லா மாணவரும் கலந்து கொள்ளவேண்டுமென்பது கட்டாயமன்று. கலந்துகொள்ள விருப்பமில்லாதவர், மற்றவருக்கு இடையூறின்றி, அமைதியாயிருத்தல் வேண்டும். தியானம் முடிந்த பிறகு மணியடிக்கும். உடனே எல்லாரும் கலா நிலையக் கோயிலுக்குப் போக வேண்டும். அங்கே வணக்கம் முடிந்தவுடனே காலையுணவு கொள்ளச் சாப்பாட்டு விடுதிக்குப் போவர். இவையாவும் காலை ஏழு மணிக்குள் முடிவு பெறும்.

8. ஏழு மணி முதல் பத்து மணி வரை கல்விப்பயிற்சியும், கலைப்பயிற்சியும் நடைபெறும். பத்து மணி முதல் இரண்டு மணி வரை பகல் உண்டியை முடித்துக்கொண்டு ஓய்வு கொள்வர். மீண்டும் இரண்டு மணி முதல் ஐந்து மணிவரை பாடங்கள் கற்பிக்கப்படும். பின்னர் விளையாட்டு நடைபெறும். பிறகு இராச் சாப்பாட்டுக்குப் போகும் வரை ஆசிரியர் மாணவரைக் கூட்டிக் கதைகள் சொல்லுவர்; அவர்களைப் பாடச் செய்வர் ; நடிக்கச் செய்வர். இரவு சாப்பிட்டு முடிந்த பின் ஒன்பதரை மணிக்கு அனைவரும் படுக்கைக்குச் செல்ல வேண்டும். அப்போதும் சில மாணவர் பண் இசைத்துக் கொண்டு கலாநிலையத்தைச் சுற்றி வருவர். இங்ஙனம் இன்னிசையோடு நாளைத் தொடங்கி இன்னிசையோடேயே நாளை

முடிக்கும் கலா நிலையத்தைக் கலைக்கோயில் என்று கூறுவது பொருத்தமன்றோ?

9. சாந்தி நிகேதனத்தில் வகுப்புக்கள் நடைபெறும் முறை விநோதமானது! சாதாரணக் கலாசாலைகளில் இருப்பவை போல அங்கு வகுப்பு அறைகள் இல்லை. வகுப்புக்கள் எல்லாம் மரங்களின் கீழேதான் காணப்படும். மாணவர்க்கோ ஆசிரியர்க்கோ நாற்காலி மேசைகள் அங்கிரா. தரையின்மீது விரிக்கப்பட்டுள்ள பாய்களின்மீதுதான் அனைவரும் அமர வேண்டும். ஆங்கில போதனை முறையைப் பின்பற்றும் கலாசாலைகளில் உள்ள வகுப்பறை ஆடம்பரங்கள் அங்குக் காணப்படா. ஒவ்வொரு வகுப்பிலும் பதினைந்து மாணவ மாணவியருக்குமேல் இரார். அன்றியும், குறித்த நாட்களில் குறித்த பாடங்களே நடைபெற வேண்டும் என்னும் கட்டுப்பாடும் அங்கில்லை. ஒவ்வொரு மரத்தின் கீழும் ஒவ்வொரு கலையில் வல்ல பேராசிரியர் அமர்ந்திருப்பர். அவர்கள் நம் நாட்டுச் சர்வகலாசாலைகளிற் பயின்று உயர்ந்த பட்டங்கள் பெற்றவர்கள்; அன்றியும், அவர்கள் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து முதலிய அயல் நாட்டுச் சர்வகலாசாலைகளிலும் பயின்று பட்டங்கள் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவ மாணவிகள் தாங்கள் விரும்பும் கலையை அக்கலை போதிக்கப்படும் இடத்திற்குச் சென்று அமர்ந்து கற்கலாம். ஆகவே, பிள்ளைகள் விரும்பாத பாடங்களை அவர்கள்மீது சுமத்தும் துர்ப்பழக்கம் அங்கில்லை. அவர்கள் விருப்பப்படி கலைகளைப் பயிலும் உரிமையிருப்பதால், மாணவ மாணவிகள் அவற்றில் உலையா ஊக்கத்தோடு பயின்று, குறைந்த கால அளவில் நிறைந்த தேர்ச்சியடைய முடிகிறது.

10. சாந்தி நிகேதனத்தில் ஆண்களும் பெண்களும் ஒருங்கிருந்து கலை பயில்கின்றார்கள். ஆனால், பெண்களுக்குத் தனி விடுதியுண்டு. அவ்விடுதியை மேற்பார்க்கப் பெண் அதிகாரிகளுமுண்டு. பெண்கள் வைகறையில் துயிலெழுந்து, மலர்களைக் கொய்து, மாலைகள் தொடுக்கும் பணியில் ஈடுபடுவார்கள். ஆயினும், ஆடவரும் பெண்டிரும் ஒன்றுபட்டுப் பல தொழில்களையும் இயக்கங்களையும் நடத்துகின்றார்கள். நெசவுத்தொழில், அச்சுத்தொழில், பாற்பண்ணைத் தொழில்,

தோட்டத் தொழில் முதலிய தொழில்களும், சட்டசபை, நீதிமன்றம் முதலிய இயக்கங்களும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. கலாநிலையத்தைச் சேர்ந்த மருத்துவ சாலையும், தபால் நிலையமும் அங்குண்டு.

11. சாந்தி நிகேதனத்தில் **இசை, நாடகம், நடனம், ஓவியம், சிற்பம்** ஆகிய கலைகளே முக்கிய இடம் பெற்றுள்ளன. இதனால், அங்குக் கல்வியே கற்பிக்கப்படுவதில்லை என்று எண்ணக்கூடாது. அங்கிருந்து வெளிவரும் மாணவ மாணவி-கள் கல்வியில் குறைந்த பட்சம் **மெற்றிக்குலேஷன்** அளவு பயின்றவர்களாய் இருப்பார்கள்; ஆனால், அருங்கலை சிலவற்-றில் அளப்பருந்தேர்ச்சி பெற்றிருப்பார்கள். அன்றியும், ஒழுக்கத்திலும், ஒற்றுமையிலும், உழைப்பிலும் ஒப்பற்-றவர்களாய் விளங்குவார்கள்.

பயிற்சி :

1. விடை எழுதுக :

அ. 'கலைக்கோயில்' என்னும் தொடருக்குப் பொருள் யாது?

ஆ. 'கலைக்கோயில்' என்னும் தொடர் உன் பாடத்தில் எதைக் குறிக்கிறது?

இ. 'சாந்தி நிகேதனம்' யாரால் நிறுவப்பட்டது? ஏன்?

ஈ. 'சாந்தி நிகேதனம்' என்னும் தொடருக்குப் பொருள் யாது?

உ. சாந்தி நிகேதனத்தில் தினசரி வாழ்க்கை எங்ஙனம் நடைபெறுகிறது?

ஊ. சாந்தி நிகேதனத்தில் வகுப்புக்கள் எவ்வாறு நடை-பெறுகின்றன?

எ. சாந்தி நிகேதனத்தில் நடைபெறும் தொழில்கள் யாவை?

2. சொல்லியபடி செய்க :

அ. இரவீந்திரநாத தாகூரை அறியாதவர் இல்லை. ('இல்லை' என்னும் சொல்லை நீக்கிப் பொருள் கெடாமல் வாக்கி-யத்தை எழுதுக.)

ஆ. இக்கல்வி நம் நாட்டுக்கு ஏற்றதன்று என்பது அவர் கருத்து. (வாக்கியத்தை, 'அவர் கருத்து' என்னும் தொடரைக்கொண்டு தொடங்குக.)

இ. இரவீந்திரநாத தாகூர் சாந்தி நிகேதனத்தை நிறுவினர். (வாக்கியத்தைச் 'சாந்தி நிகேதனம்' என்னும் சொல்லைக்கொண்டு தொடங்குக.)

ஈ. பாரத நாட்டுப் பண்டைக் கல்வி முறையைப் பின்பற்றியதாய், இயற்கைக்கு ஒத்ததாய், ஆசிரமம் போன்றதாய்ச் சாந்தி நிகேதனம் விளங்க வேண்டும். (இவ்வாக்கியத்தை மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.)

3. இப்புத்தகத்தின் இறுதியில் உள்ள அகராதியைப் பார்த்துப் பொருளெழுதுக :

இயைந்தது, செயற்படுத்து, சம்பவம், தனயர், பொலிவு, நிறுவினர், துயில் நீத்து, முகந்து, தியானம், இடையூறு, ஆடம்பரம், உலையா, ஒருங்கிருந்து, விடுதி, கொய்து, பணி, இயக்கம்.

5. மார்க்கோ போலோ—I

1. இன்று நாம் வாழ்வது இயந்திர உலகம். உணவு சமைக்க இயந்திரம்—உடை தோய்க்க இயந்திரம்—எதற்கும் இயந்திரம்; இயந்திர உதவியால் மனிதன் மாட்சியுற்று விளங்குகிருன். எனவே, இக்காலத்தில் இந்தியாவின் தென்கோடியிலிருக்கும் திருவனந்தபுரத்திலிருந்து ஆயிர மைலுக்கு அப்பாலுள்ள டில்லி நகரத்துக்கு ஆகாய விமானத்தில் அரை நாளில் பிரயாணம் செய்ய முடிகிறது. பண்டைப் பிரயாண நிலை இதுவன்று. இராமேசுவரத்தினின்று காசிக்குச் செல்ல அக்காலத்தில் ஆறு மாதமாகுமென்பதை நூல்களின் வாயிலாக நாம் அறிகிரும். அக்காலத்திற் பிரயாணஞ் செய்தவர்கள் அடைந்த இன்னல்கள் எண்ணற்றவை. பிரயாண மார்க்கத்திலிருந்த ஊர்கள் ஒன்றுக்கொன்று அதி தூரத்திலிருந்தன. செப்பனிட்ட சாலைகள் இல்லை. வழியெல்லாம் காடுகள்; விலங்குகளின் தொல்லை ஒரு பக்கம்; கொள்ளைக்கூட்டத்தவர் பயம் மற்ருரு பக்கம். இத்தனை துன்பங்களுக்கிடையே சமயப் பற்றினுலும், வாணிக முயற்சியினுலும், நாடாராயும் நாட்டத்தினுலும் தூண்டப்பெற்று, மன வலியும் உடல் வலியும் மிக்க சிலரால் அக்காலத்தில் பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய அரிய பெரிய பிரயாணங்களைச் செய்து அழியாப் புகழ் பெற்றவருள் ஒருவர் **மார்க்கோ போலோ**[1] என்பவர்.

1. Marco Polo

2. மார்க்கோ போலோ இத்தாலி நாட்டினர். இத்தாலி என்பது ஐரோப்பிய நாடுகளுள் ஒன்று. அது செல்வம் மலிந்தது; புகழ் நிறைந்தது; தொன்மை வாய்ந்தது. அதன்கண் வனப்பும் வாணிக முயற்சியும் வாய்ந்து விளங்கியது **வெனிஸ்**[1] நகரம். பிற நகரங்களுக்கில்லாத தனிச் சிறப்பொன்று அதற்குண்டு. அதன்கண் புழுதி நிரம்பிய தெருக்களும், அவற்றிற் பெருமுழக்கம் புரியும் வண்டிகளும் காணப்படா. தெருக்களுக்கும் வண்டிகளுக்கும் பதிலாகக் கால்வாய்களும் தோணிகளும் காட்சியளிக்கும். இத்தனிச் சிறப்பேயன்றி, மற்றொரு பெருஞ்சிறப்பும் அதற்குண்டு. கீழ்நாட்டு வணிகர்களும், மேல் நாட்டு வணிகர்களும் கூடித் தங்கள் வாணிகப் பண்டங்களை மாற்றிக் கொள்ளும் ஒப்பற்ற வாணிகத் தலமாகவும் அது விளங்கியது.

3. வெனிஸ் நகரத்தின் ஒருபால் அமைந்திருந்த பரந்ததொரு மரக்கலத்துறையில் பட்டாடைகள் நிறைந்த சீனக் கலங்களும், ஏலக்காய் முதலிய நறுமணப் பொருள்களும் முத்து, இரத்தினம் முதலிய விலை மிக்க பண்டங்கள் ஏற்றப்பட்ட பாரத நாட்டுப் பாய்மரக் கலங்களும், பாரசீகம் முதலிய பிற கீழ் நாட்டுக் கலங்களும் காட்சியளிக்கும். இவற்றைப் பெறுவதற்குப் **பிரான்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி, இங்கிலாந்து** முதலிய மேல் நாட்டு வணிகர்கள் அங்கு திரள் திரளாகக் காணப்படுவார்கள்.

4. இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த வெனிஸ் நகரத்தில் 13-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் முயற்சி மிக்க வணிக சகோதரர் இருவர் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் மூத்தவர்க்கு **நிக்கோலோ போலோ**[2] என்பது பெயர். இளையவர் பெயர் **மேபியோ போலோ**[3] என்பது. அவர்களுள் மூத்தவர் புதல்வரே **மார்க்கோ போலோ** என்பவர். போலோ சகோதரர்கள் ஊக்கமும் முயற்சியுமிக்கவர்களாதலின், அவர்கள் அடிக்கடி வாணிக நிமித்தம், அயல் நாடுகட்குச் செல்வது வழக்கம். அங்ஙனமே அவர்கள் மார்க்கோ போலோ நான்கு வயதுடையவராயிருந்தபோது ஆசிய நாடுகட்குச் சென்றவர்கள் சுமார் பத்தாண்டளவும் தாய் நாடு திரும்பவில்லை.

1. Venice 2. Nicolo Polo 3. Maffeo Polo

5. மார்க்கோ போலோ இளைஞராயிருந்தபோது வெனிஸ் நகரத்து மற்றச் சிறுவர்கள் போலவே தாமும் அடிக்கடி கப்பல் துறைக்குச் செல்வார். ஆனால், அவர் மற்றவரைப் போலக் கடலிற்குதித்துக் கப்பல்களைச் சுற்றி விளையாடுவதில்லை. கடற்கரையில் இருந்த கடைகளில் கப்பலோட்டிகள் அமர்ந்திருந்தால், அவர்களுடன் இருப்பார்; அவர்கள் தாங்கள் செய்த பிரயாணங்களைப்பற்றிக் கூறும் வரலாறுகளைக் கேட்பார். சிலர், ஒற்றைக் கண் உள்ள மக்களின் நாட்டுக்குப் போய்த் திரும்பியதாகக் கூறுவர். மற்றும் சிலர், பேய்களும் பைசாசங்களும் வாழும் நாட்டுக்குச் சென்று வந்ததாகக் கூறுவர். வேறு சிலர், மனிதரைப் புசிக்கும் மக்களைக் கண்டு வந்ததாகச் சொல்லுவர்; இன்னும் சிலர் தலையையின்றித் தோள்களில் கண்களைப் பெற்று வாழ்பவரின் நாட்டைக் கண்டுவந்ததாக நவில்வர். இத்தகைய விந்தை மிக்க செய்திகளைக் கேட்டு வியப்படைவதில் மார்க்கோ போலோவுக்கு நிரம்ப ஆசை உண்டு. ஆதலால், அவர் கரை நோக்கி வரும் கலங்களுக்காக நாட்கணக்கில் காத்துக்கொண்டிருந்து, அவை கரையருகில் வந்தவுடனே மிக்க ஆவலோடு ஓடிச்சென்று மாலுமிகளை அணுகி, அவர்களின் பிரயாணங்களைப்பற்றிய செய்திகளைக் கேட்டு மகிழ்வார். இதனால், பிற நாடுகளைக் காணவேண்டுமென்ற விருப்பம் அவர்பால் நாளுக்கு நாள் வளரத் தொடங்கியது. அவர் சிற்சில சமயங்களில் அயல் நாட்டுப் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த தம் தந்தையாரைப்பற்றியும், சிறிய தந்தையாரைப்பற்றியும் நினைந்து வருந்துவார்; 'அவர்கள் என்று வருவார்களோ' என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருப்பார்.

6. ஒரு நாள் வெனிஸ் நகரத்துக் கப்பல் துறையில் ஒரு மரக்கலம் வந்து நின்றது. அதிலிருந்து ஆடம்பர உடைகளணிந்த இருவர் இறங்கினர். அவர்களுக்குச் சொந்தமான பல மூட்டைகளும் சிப்பங்களும் இறக்கப்பட்டன. அவர்களைக் கரையிலிருந்த அனைவரும் வியப்புடன் நோக்கினர். மார்க்கோ போலோவும் அப்போது அங்கிருந்தார். கலத்தினின்று இறங்கிய தனவந்தர்களே தம்முடைய தந்தையாரும் இளைய தந்தையாருமாவர் என்பதை அறிந்தபோது மார்க்கோ போலோவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் விரைந்தோடி அவர்களைத் தழுவிக்கொண்டார். தாங்கள்

நாட்டை விட்டுச் சென்றபோது சின்னஞ்சிறுவராயிருந்தவர் இப்போது உடற்கட்டு மிக்க பதினைந்தாண்டு நிரம்பிய இளங்-காளையாய் விளங்குவதைக் கண்டு அவர்கள் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தார்கள்.

7. மார்க்கோ போலோ தம் தந்தையாரும் சிறிய தந்தை-யாரும் பிரயாணஞ் செய்தபோது கண்ட புதுமைகளைக் கூறும்படி வேண்டினார். அதற்கு நிக்கோலோ போலோ கூறிய விவரங்கள் வினோதமானவை: "குழந்தாய், நாம் வசிக்கும் வெனிஸ் நகரமே உலகிற் சிறந்த நகரமென நம் நாட்டவர் கருதுகின்றனர். அது பிற நகரங்களைக் கண்டறியாதவர் கூற்று. அவர் கிணற்றுத் தவளையை ஒத்தவர். வனப்பிலும் வளத்திலும் வெனிஸ் நகரைக் காட்டிலும் சிறந்த நகரங்கள் ஆசியாக் கண்டத்தில் உள்ளன. **கதே**[1] என்று வழங்கும் **சீன நாட்டில் யாங்ட்சி கியாங்** என்னும் ஆற்றங்கரையில் **ஹாங்சோவ்**[2] என்னும் நகரம் இருக்கிறது. அது நமது நகரத்தைப் போலவே கால்வாய்கள் நிறைந்தது. ஆனால் அந்நகரத்தில் குறுக்கிலும் நெடுக்கிலுமாகப் பன்னீராயிரம் பாலங்கள் உள்-ளன. அவை அனைத்தும் திண்மை மிக்கவை. கருங்கற்களால் ஆனவை. அந்நகரம் நமது நகரத்தைப்போலப் பதின்மடங்கு பரப்புடையது. அதன் முதன்மையான தெரு ஒன்று இரு-நூறடி அகலமுள்ளது. அதன் இரு புறங்களிலும் அரண்-மனைகளும், கோவில்களும், வீடுகளும், கடைகளும், தோட்-டங்களும் காட்சி அளிக்கின்றன. அந்நகரின் கடைகளில் பட்டுத்துணியும், நறுமணப் பொருள்களும், முத்து இரத்தி-னம் முதலியவையும் விற்பனைக்காக குவியல்களாகக் காணப்-படுகின்றன. விலை மதிக்க முடியாத அணிகலன்களைப் பூட்-டிக்கொண்டு, பட்டாடைகளை அணிந்துகொண்டு, ஆடவரும் மகளிரும் அக்கடைகளுக்குத் திரள் திரளாக வந்து பொருள்-களை வாங்குவது கண் கவர் காட்சியாகும்," என்று நிக்கோலோ போலோ கூறி முடித்தார்.

8. இச்செய்திகளைக் கேட்ட மார்க்கோ போலோவும், பிறரும் ஆச்சரியமுற்றனர். அன்றியும், அவர்கள் போலோ சகோதரர்கள் சீன நாட்டுக்குச் செல்ல நேர்ந்த காரணத்தை

1. Cathay 2. Hongchow

அறிய விரும்பினார்கள். அவர்கள் விருப்பத்திற்கிணங்கி நிக்கோலோ போலோ, "நாங்கள் வெனிஸ் நகரத்தை விட்டுப் பாரசீக நாட்டின் வழியே போக்காரா[1] என்னும் நகரை அடைந்தோம். அங்குச் சீனப் பேரரசர் குப்ளே கான்[2] தமது தலைநகராக்கிக்கொண்டிருந்த பீக்கிங்[3] நகரத்துத் தூதர்களைச் சந்தித்தோம். அவர்கள் எங்களைத் தங்கள் நாட்டிற்கு வர-வேண்டும் என்றும், தங்கள் பேரரசரைக் காண வேண்டும் என்றும் வற்புறுத்தி அழைத்துச் சென்றார்கள். நாங்கள் அவர்கள் விருப்பத்திற்கிணங்கிச் சீன நாட்டை அடைந்தோம். பீக்கிங் நகரில் சீனப் பேரரசர் குப்ளே கானுடைய பேட்டி எங்களுக்குக் கிடைத்தது. அவர் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார். நமது நாட்டைப் பற்றியும், நம் நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைப்பற்றியும், நமது சமயத்தைப்பற்றியும் விவரமாகக் கூறும்படிக் கேட்டார். எங்கள் பணிவுமிக்க மொழிகளையும், நாங்கள் சபையில் நடந்துகொண்ட நல்ல முறைகளையும் கண்ட கான், நம் நாட்டு குரு-மார்களைக்கொண்டு தம் நாட்டுக் குடிகளைச் சீர்திருத்த நிச்-சயித்துள்ளார்; ஆதலால், நூறு குருமார்களைத் தமது நாட்-டுக்கு அனுப்பி உதவ வேண்டுமென்று போப்பாண்டவருக்கு[4] ஒரு விண்ணப்பமெழுதி எங்களிடமீந்து எங்களைப் பிரயா-ண்ப்படுத்தி அனுப்பினார். நாங்கள் போப்பாண்டவரைக் கண்டு, கானுடைய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, நூறு குருமார்களோடு விரைவில் புறப்பட நிச்சயித்துள்ளோம். இம்முறை நாங்கள் புறப்பட்டுச் செல்லும்போது மார்க்கோ போலோவையும் உடனழைத்துச் செல்ல முடிவு செய்துள்-ளோம்," என்று கூறி முடித்தார்.

பயிற்சி :

1. விடை எழுதுக :

அ. முற்காலப் பிரயாணத்துக்கும் இக்காலப் பிரயாணத்-துக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை ?

ஆ. முற்காலத்தில் எக்காரணங்களால் பிரயாணங்கள் மேற்-கொள்ளப்பட்டன ?

இ. வெனிஸ் நகரத்தின் சிறப்புக்கள் யாவை ?

1. Bokhara 2. Kublai Khan 3. Peking 4. Pope

ஈ. மார்க்கோ போலோ எந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்? அவர் தந்தையார் பெயர் யாது?

உ. மார்க்கோ போலோ தம் இளமையை எவ்வாறு கழித்தார்?

ஊ. ஹாங்சோவ் நகரத்தின் சிறப்பைக் கூறுக.

எ. போலோ சகோதரர்கள் சீனவுக்குச் சென்றதற்குக் காரணம் என்ன?

ஏ. போலோ சகோதரர்களை ஆதரித்த சீனப் பேரரசர் யார்? அவருடைய சிறப்பியல்புகள் யாவை?

2. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுதுக:

அ. அக்காலத்தில் பிரயாணத்தை——அடைந்த——எண்ணற்றவை. [துணிந்தவர், செய்தவர், மேற்கொண்டவர், நன்மைகள், துன்பங்கள்]

ஆ. அதன்கண் புழுதி—தெருக்களும், அவற்றில்—செய்யும் வண்டிகளும் காணப்படா.

[கிளம்பிய, மலிந்த, படிந்த, அடையாளம், ஆரவாரம், கூச்சல்]

3. எதிர்ச்சொற்கள் கூறுக:

மாட்சி, துன்பம், வன்மை, புகழ்ச்சி, பரந்த, இளைஞர், சிலர்.

4. இப்புத்தகத்தின் இறுதியில் உள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

மாட்சி, இன்னல், விலங்கு, நாட்டம், தூண்டப்பெற்று, மலிந்தது, தோணி, திரள், நிமித்தம், பைசாசம், சிப்பம், காளை, அணிகலன், விண்ணப்பம்.

6. நட்புப்பேறு

1. பரதகண்டத்தில் உள்ள **தண்டகாரணியம்** என்னும் செறிந்த வனத்தில் **கர்ப்பூரகௌரம்** என்னும் தடாகம் ஒன்றுண்டு. அதில் **மந்தரன்** என்னும் பெயருடைய ஆமை ஒன்று வசித்து வந்தது. அத்தடாகத்தின் கரையிலிருந்த ஓர் ஆலமரத்தில் **இலகுபதனன்** என்னும் ஒரு காக்கை வாழ்ந்து வந்தது. அம்மரத்தின் வேர்களினிடையே ஒரு வளையை அமைத்துக்கொண்டு **இரணியகன்** என்னும் ஓர் எலி தங்கியிருந்தது. ஆலமரத்தின் அருகில் அடர்ந்து வளர்ந்திருந்த புதரொன்றினைச் **சித்திராங்கன்** என்னும் மான் தன் இருப்பிடமாகக் கொண்டு உறைந்து வந்தது.

2. அந்நான்கும் உபகாரம் செய்கிறவன் மித்திரனென்றும் அபகாரம் பண்ணுகிறவன் சத்துருவென்றும் அறிந்து, நட்புக்கொண்டு வாழ்ந்து வந்தன. ஒரு நாள் மேயச் சென்ற சித்திராங்கன் மாலையில் வாராமையால், மற்ற மூன்றும் கவலையுள் ஆழ்ந்தன. அன்று இரவெல்லாம் அவை தூங்கவேயில்லை; சித்திராங்கனுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ என்று சிந்தித்துக்கொண்டு, தத்தம் மனத்துள் தோன்றியவற்றைக் கூறிக்கொண்டும் இரவைக் கழித்தன.

3. பொழுது புலர்ந்தவுடனே இலகுபதனன் பறந்து சென்று பலவிடங்களையும் பார்த்துக்கொண்டு வருகையில், சித்திராங்கன் ஒரு வேடன் பரப்பி வைத்திருந்த வலையில் அகப்பட்டுக்கொண்டிருந்ததைக் கண்டது; அதனருகிற்சென்று, "மித்திரா, உனக்கு இத் துன்பம் எங்ஙனம் நேரிட்டது?" என்றது. அது கேட்ட சித்திராங்கன், "நண்பா, இப்போது இதைக் கேட்டுப் பயனில்லை. நீ சென்று நம் நண்பன் இரணியகனை விரைவில் அழைத்துவந்தால், அவன் வேடன் வருவதற்குள் என் கட்டையறுத்து என்னை விடுவிப்பான்," என்றது.

4. அங்ஙனமே காகம் விரைந்து சென்று, தன் நண்பர்களிடம் மானுக்கு நேர்ந்த இடுக்கணைப் பற்றித் தெரிவித்தது. அது கேட்ட எலி,

> "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
> இடுக்கண் களைவதாம் நட்பு"

என்னும் வாக்குக்கிணங்க, ஒரு சிறிதும் காலம் தாழ்த்தாமல், மானிருந்த இடத்தை அடைந்தது. அதைக் கண்ட மான், தாயைக் கண்ட சேயைப்போல அகமகிழ்ந்து, "நண்பா, கணப்பொழுதும் தாமதியாமல் என் கட்டைச் சேதி. வேடன் வந்துவிட்டால் நம்மனைவர்க்கும் ஆபத்து நேர்வது திண்ணம்!" என்று கூறிற்று. இதற்குள்ளாக மந்தரனும் அங்கு வந்து சேர்ந்தது.

5. இரணியகன் வலையின் கயிறுகளைச் சேதிக்கத் தொடங்கியது. அதற்குள் இலகுபதனன் எலியைப் பார்த்து, "மித்திரா, வேடன் அதோ வருகிறான். ஆகட்டும் சீக்கிரம்!" என்று கூறிற்று. எலியும் தன் முழுப்பலத்தோடு முயன்று, அதி சீக்கிரமாய்ச் சித்திராங்கன் வலையை அறுத்தது. உடனே அவை அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தன. அது கண்ட வேடன், "கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே!" என்று சிந்தித்துக்கொண்டே அவையோடிய திசையை உற்று நோக்கினான்; மற்ற மூன்றும் வெகு தூரம் ஓடிவிட்டதையும், மந்தரன் மட்டும் மந்த நடையாய்ப் போய்க்கொண்டிருந்ததையும் கண்டான்; விரைந்தோடி அதனைப் பற்றித்

தன் வில்லிற் சேர்த்துக் கட்டிக்கொண்டு, சிறிது மகிழ்ச்சியோடு செல்லலானன்.

6. மானும், எலியும், காகமும் அதுகண்டு திகைத்தன. "துன்பம் நேர்ந்தபோது துக்கித்தல் கூடாது; திடமனத்தோடு அதினின்றும் விடுதலையடைகிறவனே அறிவாளி. ஆதலால், நான் கூறுகிறபடி செய்தால், நம் நண்பனை விடுவிக்கலாம்," என்றது எலி. "உயிரினும் அரிய நண்பனைக் காக்க எது வேண்டுமானாலும் செய்வோம். இப்போது செய்ய வேண்டுவது யாது? சொல்லும்," என்றன காகமும் மானும். "நாம் இப்போது வேடனுக்கு முன்னே சென்று, வேடன் வரும் வழியிலுள்ள ஏறிக்கரையில் சித்திராங்கன் செத்தவனைப்போலக் கிடக்கும்படி செய்ய வேண்டும். அவன்மீது இலகுபதனன் இருந்து கொண்டு குத்துவதுபோல நடிக்கவேண்டும். அதை வேடன் கண்டால், மந்தரனைப் பிணித்துள்ள வில்லைக் கீழே வைத்து விட்டுச் சித்திராங்கனிடம் போவான். நான் விழிப்பாயிருந்து மந்தரனை விடுவிப்பேன். மந்தரன் தண்ணீரில் இறங்கி விடுவான். வேடன் உங்கள் அருகில் வருவதற்குள் நீங்கள் ஓடி விடுங்கள்; நானும் ஓடி விடுகிறேன்," என்று கூறியது எலி.

7. அது கேட்ட மானும் காகமும் மகிழ்ந்தன. பிறகு அம்மூன்றும் தங்கள் ஏற்பாட்டின்படியே செய்து, ஆமையைக் காப்பாற்றின. ஏமாற்றமடைந்த வேடன், **வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் இழந்தவனைப்போலத்** துக்கமடைந்து, "ஐயோ! கைக்கு வாராத பெரிய இலாபத்தை இச்சித்துக் கைக்கு வந்த சிறிய இலாபத்தையும் இழந்தேனே! யார்க்கும் **அதிக ஆசை அதிக நஷ்டம்.** 'கிடைத்த மட்டும் போதும்' என்று நினைக்கிறவனே அறிவாளி," என்று எண்ணிக் கொண்டே தன் வீட்டுக்குச் சென்றான்.

பயிற்சி :

1. **விடை எழுதுக:**

அ. மந்தரன், இலகுபதனன், இரணியன், சித்திராங்கன் என்பவை எவற்றின் பெயர்?

ஆ. சித்திராங்கனுக்கு நேர்ந்த விபத்தென்ன?

இ. சித்திராங்கன் விடுதலையடைந்த வகை யாது ?

ஈ. மந்தரனுக்கு நேர்ந்த துன்பம் யாது ?

உ. மந்தரன் விடுவிக்கப்பட்டது எவ்வாறு ?

ஊ. மந்தரன் தப்பிய போது வேடன் மனத்தில் உதித்த எண்ணங்கள் யாவை ?

2. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதில் வேறு சொற்களை அமைத்து எழுதுக :

அ. தண்டகாரணியம் என்பது மரம் **செறிந்த** வனம்.

ஆ. **தடாகத்தின்** கரையில் ஒரு காக்கை **வாழ்ந்து வந்தது.**

இ. **உபகாரம் செய்பவன் மித்திரன் ; அபகாரம் செய்பவன் சத்துரு.**

ஈ. அவை மூன்றும் கவலையால் **நித்திரை** செய்யவில்லை.

3. புத்தகத்தின் இறுதியிலுள்ள அகராதியைப் பார்த்துப் பொருளெழுதுக :

செறிந்த, தடாகம், உறைந்தது, நட்பு, மித்திரன், சத்துரு, மகிழ்ந்தன, இச்சித்து.

7. தமிழ் நாட்டுச் சிற்பக் கலை

1. 'சிற்பக்கலை' என்பது யாது? மண்ணினாலும், மரத்தாலும், உலோகங்களாலும், பாறைகளாலும் அழகிய உருவங்களைத் தோற்றுவிக்கும் கலையே சிற்பக் கலை என்பது. '**கலை**' என்னும் சொல்லுக்கு '**வித்தை**' என்பது பொருள். இத்தகைய சிற்பக் கலை பண்டைக் காலத்தில் நம் நாட்டில் உன்னத நிலையில் இருந்தது. சிறிது சிறிதாக இது தன்னிலை கெட்டு, இப்போது மறைந்து வருகிறது. சிற்பக் கலையின் சிறப்பைத் தெரிவிக்கும் கோவில்கள் பல தமிழ் நாட்டிலுண்டு. அவற்றுள் **மகாபலிபுரத்**தில் உள்ள கோவில்கள் தலைமை வாய்ந்தவை.

2. மகாபலிபுரம் என்பது ஒரு சிற்றூர். இது நமது மாகாணத்திலுள்ள செங்கற்பட்டு ஜில்லாவில் கடற்கரையோரத்தில் சென்னைக்குத் தெற்கே ஏறத்தாழ முப்பத்தைந்து மைல் தூரத்தில் உள்ளது. இது ஆழ்வார்களால் '**திருக்கடன்மல்லை**' என்று குறிக்கப்படும் ஒரு வைணவ ஸ்தலமாகும். ஆங்கிலேயர் இதனை ஏழு **கோவில்கள்**[1] என்னும் பெயரால் குறிப்பிட்டுள்ளார்கள். நமது நாட்டு வரலாற்றில் இது **மஹாமல்லபுரம்** என்று வழங்கப்பட்டுள்ளது.

3. இக்காலத்தில் ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கும் இத்தலம், பண்டைக் காலத்தில் சிறந்ததொரு கப்பல் துறையாய் விளங்கியது. '**கலங்கள் இயங்கும் மல்லை கடல் மல்லை**' என்று ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த **பூதத்தாழ்வார்** அத்தலத்தைக் குறித்துள்ளார். இதனால், இதன் பழமை விளங்குகிறது. அன்றியும், அக்காலத்தில் இதற்குக் '**கடன்மல்லை**' என்ற பெயர் வழங்கி வந்ததென்பதும் விளங்குகிறது.

4. இது கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்து வந்த **பல்லவ மன்னர்**களுடைய துறைமுகப்பட்டினமாய் விளங்கி வந்ததென்பதைச் சரித்திரமூலமாக நாம்

---

1. Seven Pagodas

அறிகிறோம். அன்றியும், இது தன் பெருமை குன்றியுள்ள இக்காலத்திலும் இதற்குப் பெருமை அளித்து வரும் **பஞ்ச பாண்டவ ரதங்கள்** என்னும் கற்கோவில்களைக் கட்டுவித்த பல்லவ மன்னரான **நரசிம்ம வர்மருக்கு** வழங்கி வந்த **மஹாமல்லர்** என்னும் பட்டப்பெயர் காரணமாக **மகாமல்லபுரம்** என்னும் பெயரைப் பெற்றதெனச் சரித்திரம் கூறுகிறது.

5. முற்காலத்தில் சிறந்த துறைமுகப் பட்டினமாய் விளங்கிய மகாபலிபுரம் இக்காலத்தில் ஒரு சிற்றூராகவே இருக்கிறது. ஆயினும், இக்காலத்திலும் யாத்திரிகர்கள் இதை நாடிச் செல்கின்றனர்கள். இதற்குக் காரணம், அது தென்னிந்தியச் சிற்பக் கலைக்கு இருப்பிடமாய் விளங்குவதேயாம்.

6. இவ்வூரிலிருந்து அரை மைல் தூரத்தில் ஐந்து சிறு கோவில்கள் உள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனி பாறையைக் குடைந்து சமைக்கப்பெற்றது. அவற்றிற்குப் **பஞ்சபாண்டவ ரதங்கள்** என்னும் பெயர் வழங்கி வருகிறது. குருகுல வீரர்களாய பாண்டவர்கட்கும் அந்த இரதங்களுக்கும் தொடர்பேதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஐந்து கோவில்கள் அங்கு இருப்பதால், இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம்.

7. பாண்டவ ரதங்களுள் மிகப் பெரியதும், சிறந்த வேலைப்பாடமைந்ததும் **யுதிஷ்டிர ரதமாகும்.** அது மூன்று நிலைகளை உடையது. அந்நிலைகளின்மீது ஏறிச் செல்லப் படிகளுண்டு. மேலே சென்றால், **பிரமன், திருமால், சிவன், கிருஷ்ணன்** முதலிய கடவுளரின் திருவுருவங்களும், வேறு பல உருவங்களும் கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவரும் வனப்புடன் காணப்படுகின்றன. மற்ற நான்கு கோவில்களுக்கும் பீம ரதம், அருச்சுன ரதம், நகுல ரதம், சகதேவ ரதம் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. அவற்றிற்கு மேல் மாடங்கள் இல்லை. ஆயினும், இவை வேலைத்திறம் மிகுதியும் உடையவையாகவே விளங்குகின்றன. பாண்டவ ரதங்களின் அருகில் யானை, குதிரை, சிங்கம், இடபம் ஆகிய பிராணிகளின் உருவங்கள் காட்சியளிக்கின்றன. அவற்றைத் தொலைவிலிருந்து காண்பவர் உயிருள்ள பிராணிகளாகவே மதிப்பர்.

8. பாண்டவ ரதங்களைவிடப் பேரழகு வாய்ந்தனவாய்க் கருதப்படும் சிற்பங்கள் அவ்வூரின்கண் உள்ள திருமால் கோயிலின் பின்புறமுள்ள பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **அருச்சுனன் தவம் புரியும் காட்சி, கண்ணபிரானர் கோவர்த்தன மலையைக் குடையாய்த் தாங்கிய காட்சி, மகிஷாசுர வதம், வராகாவதாரம்** ஆகியவை முதன்மையானவை. அவற்றுள் அருச்சுனன் தவம் என்னும் அற்புத சிற்பம், இரண்டு பெரிய பாறைகளிற் செதுக்கப்பட்டுள்ளது. அதன் அழகு, வார்த்தைகளால் வருணிக்கத் தக்கதன்று. அருச்சுனன் ஒரு காலைத் தூக்கியும், ஒரு காலை ஊன்றியும் நின்று, இரண்டு கைகளையும் மேலே தூக்கிப் பாசுபதமென்னும் கணையைப் பசுபதியினிடம் பெறுவதற்காகக் கடுந்தவம் புரிவதுபோலக் காட்சியளிக்கிறது அச்சிற்பம். ஊண் உறக்கமின்றி இடையறாத் தவத்தில் ஈடுபட்டு நிற்கும் அவன் உடல் இளைத்து எலும்புகள் தோன்றுமாறு காணப்படுகிறது. அவனைச் சூழ்ந்து தவத்தால் மெலிந்து வாடிய முனிவரும், இன்னிசைக் கருவிகள் ஏந்திய எழில் மிகுந்த கந்தவரும் நிற்கின்றனர். வில்லும் கணையும் ஏந்திய வேடர் குழுவும், பூதகணமும் தொடர்ந்து வரச் சிவபெருமான் வேட்டுவர்போல அருச்சுனன் முன்னே நிற்கின்றார். அவற்றைக் கண்ணால் கண்டு களிக்க முடியுமேயன்றி, வாயால் வருணித்தல் முடியாத காரியம்.

9. பாய்ந்து செல்வதுபோலக் காணப்படும் சிங்கத்தின்மீதமர்ந்து, எட்டுக் கைகளிலும் பல்வகைப் படைகளைத் தாங்கிப் பகைவனாகிய மகிஷாசுரனோடு துர்க்கா தேவி போர் புரிவது போலச் செதுக்கப்பட்டுள்ளது ஒரு சிற்பம். அது காண்போருடைய கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் பெருமையுடையது. ஆதிசேடனுடைய முடியின்மீது ஒரு காலை ஊன்றிக்கொண்டு, பூமிதேவியை ஒரு கையால் அணைத்துக்கொண்டு, அமரர்கள் போற்ற நிற்கும் ஆதிவராக மூர்த்தியின் திருவுருவத்தின் அழகை யாரால் வருணிக்க முடியும்! இத்தகைய சிறந்த அமைப்புடன் காணப்படும் எல்லாச் சிற்பங்களைப் பற்றியும் ஒரு புத்தகமாக எழுதலாமேயன்றி, ஒரு பாடமாக எழுதுவது இயலாத செயலாம்.

10. மகாபலிபுரத்தின் கடற்கரையோரத்தில் ஒரு பண்டைய கோவில் உளது. அதில் ஒரு பகுதியில் சிவலிங்கமும் மற்றொரு பகுதியில் பள்ளிகொண்டுள்ள திருமாலின் பெரிய சிலையும் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கின்றன. அச்சிவலிங்கம் உருட்சியாயிராமல், பன்னிரண்டு பட்டைகள் உடையதாயும், பாதிக்குமேல் தகர்த்தெரியப்பட்டும் உள்ளது. அக்கடற்கரைக் கோயிலின் மேற்குப் புறத்தில் சிறு கற்களில் செதுக்கப்பட்ட பற்பல உருவங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒரு குரங்கின் உருவம் கண்டு களிக்கத்தக்கது.

11. அவையன்றி, அவ்வூரின் மேற்புறமுள்ள சிறு குன்றுகளின்மீது எண்ணில்லாச் சிற்பங்கள் இணையற்ற எழிலுடன் காணப்படுகின்றன. அங்குப் பல குகைக் கோவில்களும் உள்ளன. அக்கோவில்களிலும் அழகு நிறைந்த அரிய சிற்பங்கள் காட்சியளிக்கின்றன. அன்றியும் மகாபலிபுரத்தைச் சூழ இங்குமங்குமாகப் பாண்டவ ரதங்களையொத்த பல கோவில்கள் காணப்படுகின்றன. ஆனால், அவையெல்லாம் எக்காரணம் பற்றியோ முற்றுப்பெறாமல் நின்றுவிட்டன.

12. மகாபலிபுரத்தில் காணப்படும் சிற்பங்கள் நம் தமிழ் நாட்டுப் பண்டைய சிற்பிகளின் கலைத்திறத்துக்குச் சான்று பகர்கின்றன. இத்தகைய சிற்பங்கள் மகாபலிபுரத்தில் மட்டுமன்றி, தமிழ்நாடு முழுமையுங் காணப்படுகின்றன.

தஞ்சாவூரிலும், திருச்சிராப்பள்ளியிலும், மதுரையிலும் உள்ள கோவில்களில் காணப்படும் சிற்பங்களை நம் நாட்டவரேயன்றி அயல் நாட்டவரும் பலபடப் புகழ்ந்து எழுதியுள்ளனர். நம் நாட்டில் மிகப் பழைய காலத்திலேயே உன்னத நிலையிலிருந்த இச்சிற்பக் கலை இக்காலத்தில் அழிந்துவிட்டதென்றே கூறவேண்டும். சிற்பக்கலையின் நுட்பங்களை நன்கறிந்த சிற்பிகளை இக்காலத்தில் காணலரிது. இது மிகவும் விசனிக்கத் தக்கது. சிற்பக் கலை இத்தகைய நிலையை அடைந்ததற்கு இரண்டு காரணங்கள் கூறலாம்; மலையோரத்திற் கிடக்கும் ஒரு கருங்கல்லைத் தன் சிற்றுளியால் செதுக்கிக் கண்ணையுங் கருத்தையுங் கவரத்தக்க ஓர் உருவமாக மாற்றுந் திறம் பெற்றவன் சிற்பி. அவனை ஒப்பற்ற கலைவாணனாக மதிக்கும் மனப்பான்மை நம் மக்களிடையே மறைந்துவிட்டது. எனவே, கலையில் வல்ல சிற்பியைக் கல் தச்சன் என்றும், அவனது ஒப்பற்ற தொழில் கல்லுடைக்கும் தொழிலென்றும் இழிந்த நிலையில் வைத்து எண்ணத் தொடங்கினார்கள் நம் மக்கள். அன்றியும், கலைகளை வளர்ப்பதே தங்கருமமென்று எண்ணிய நம் நாட்டு மன்னர்களின் மாசற்ற ஆட்சி மறைந்து, அயலார் ஆட்சி தோன்றியபின் சிற்பக் கலை சீரழிய வேறென்ன வேண்டும்? ஆயினும், நம் முன்னோரின் ஆற்றலுக்கு அறிகுறியாய் நிற்கும் சிற்பங்கள் நம்மிடையே ஒரு புதிய உணர்ச்சி தோன்றுமாறு செய்கின்றன. சீரழிந்த சிற்பக் கலையை மீண்டும் பயின்று, அதனை உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே அவ்வுணர்ச்சியாகும்.

பயிற்சி :

1. விடை எழுதுக :

அ. 'சிற்பக் கலை' என்பது யாது?

ஆ. சிறந்த சிற்பங்களைத் தமிழ்நாட்டில் எங்குக் காணலாம்?

இ. மகாபலிபுரத்துக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

ஈ. பாண்டவ ரதங்களுட்சிறந்தது எது? ஏன்?

உ. அருச்சுனன் தவம் புரியுங் காட்சி எங்குள்ளது? அதன் சிறப்புக்கள் யாவை?

ஊ. கடற்கரையில் உள்ள கோவிலின் சிறப்புக்கள் யாவை?

2. பொருள் கூறி வாக்கியங்களில் அமைத்தெழுதுக:

துறை — துரை ; பாறை — பாரை ; திறம் — திரம் ; எறி — எரி ; அறிய — அரிய.

3. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

தலம், துறை, யாத்திரிகர், ஊண், இடையறு, கணை, அமர்ந்து, படைகள், கருத்து, அமரர்கள், தகர்த்து.

4. எதிர்ச் சொற்கள் தருக:

சிற்றார், பழைமை, பெருமை, முற்காலம், இடையறு, எழில்.

8. வெண்ணிப் பறந்தலைப் போர்

1. சோழ மன்னருள் தலைசிறந்தவர் **கரிகாற்சோழர்.** அவர் நாட்டு மக்களுக்கு நன்மை புரிந்து நற்புகழ் பெற்றவர்; செங்கோல் தவறாத செம்மல்; வட நாட்டில் தம் படையைச் செலுத்தி, இமயத்தில் வெற்றிக்கொடி நாட்டிய வீரர். அவரது மாட்சிமை தங்கிய ஆட்சி, அவர் புகழை மேன் மேலும் ஓங்கச் செய்தது. அது கண்ட அவருடைய பங்காளி-கள், பொறாமையால் மனம் புழுங்கினார்கள். எக்காரணம் பற்றியேனும் அரசாட்சியை அபகரிக்க எண்ணிய அவர்கட்கு வாய்ப்பொன்றும் நேரவில்லை. எனவே, அவர்கள் தங்களா-லாகாத காரியத்தைப் பிறர் மூலமாகவேனும் செய்து முடிக்க வேண்டுமென நிச்சயித்தார்கள்; இறுதியில் ஒரு சூழ்ச்சியை மேற்கொண்டார்கள்.

2. அக்காலத்தில் சோழநாட்டை ஆண்டவர் **நெடுஞ்சேர-லாதர்** என்பவர். அவரது தலைநகரம் **மாந்தை** என்பது. அவரும் கரிகாலருக்கு ஈடானவர்; ஈகையிற் சிறந்தவர்; வீரம் நிறைந்-தவர்; நேரிய முறையில் நாட்டை ஆட்சி புரிந்து, குடி மக்-களின் அன்பையும் ஆதரவையும் நிரம்பப் பெற்றவர்; ஆயி-னும்; **திருமாவளவர்** என்னும் கரிகாற் சோழரின் புகழ் தம் புகழைச் சிறிது மங்கச் செய்தது கண்டு, அவரிடம் சற்று அழுக்காறு கொண்டிருந்தார்.

3. அதையறிந்த **கரிகாற்பெருவளத்தாருடைய** பங்காளி-கள் சேரமன்னரை அடைந்தார்கள்; அவரைச் சோழவரசர் இகழ்ந்து பேசியதாகக் கற்பனைக் கதைகள் கூறிக் கலகம் செய்தார்கள். ஏற்கெனவே சேரலாதர் மனத்திற்பொறாமைத் தீப் புகைந்து கொண்டிருந்தது. புல்லரின் பொய்யுரை, புகைந்து கொண்டிருந்த நெருப்பில் நெய் பெய்தது போலா-யிற்று. பொறாமைத்தீ, போர்ச்சுவாலை கக்கத் தொடங்கியது. **'கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது.'** என்னும் முதுமொழிக் கிணங்க, வஞ்சகரின் சூழ்ச்சி வயப்பட்ட சேரமன்னர், சோழநாட்டின்மீது படையெடுக்க நிச்சயித்தார்.

4. தன் வலியும் மாற்றான் வலியும் ஒப்பிட்டறிந்தே வீரர் போரிலிறங்குவது முறையாதலால், சேரமன்னர் சோழ-

வேந்தரின் படை வலியை நன்கு ஆராய்ந்தார். எவ்வாற்றுனும் தம்மைக் காட்டிலும் மாற்றார் வலியவர் என்றறிந்த சேரலாதர், சில சிற்றரசர்களின் துணையை நாடிப் பெற்றார். நல்ல நாளில், நன்னிமித்தங்களுக்கிடையே, தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட்படையாகிய நால்வகைப் படைகளுடனே சேரலாதரும், சிற்றரசர்களும் சோழ நாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

5. நெடுஞ்சேரலாதர் தம்மீது போர் தொடுக்கக் கருதிப் படை திரட்டிய செய்தியை ஒற்றர் மூலம் அறிந்தார் சோழ மன்னர்; போருக்குக் காரணமறியாது சிறிது திகைத்தார். ஆயினும், தம் படைவலியை நன்கறிந்திருந்தும், தம்மீது போர் தொடுக்கத் துணிந்த சேரலாதர்பால் கடுஞ்சினந் தோன்றியது கரிகாலர்க்கு. காரணமின்றிக் கடும்போர் தொடங்கி, நாட்டின் அமைதியைக் குலைப்பதோடன்றி வீரர்களுயிரையும் விண்ணுலகேற்றத் துணிந்த மதிகெட்ட மன்னர்க்கு நற்புத்தி கற்பிக்க வேண்டுவது தமது கடமையென மதித்தார் கரிகாலர்.

6. கரிகாலர் சிறிதும் காலம் தாழ்த்தவில்லை; படைகளைத் திரட்டுமாறு படைத் தலைவர்கட்குப் பணித்தார்; சேரர் படை தம் நாட்டகத்தே புகுந்து போர் தொடங்குமாயின், தம்முடைய குடிகளுக்கு நேரக்கூடிய துன்பங்களை அரைக் கணத்தில் ஆராய்ந்தறிந்தார். ஆகவே, தம் தலைநகருக்குச் சிறிது தூரத்தில் இருந்த **வெண்ணிப் பறந்தலை** என்னும் ஊரின் புறத்தே தங்கி, சேரர் படைக்கு நல்வரவு கூறக் காத்திருந்தார்.

7. சேரர் படையும் வந்து சேர்ந்தது. இரண்டு சேனைகளும் இரண்டு கடல்களை யொத்திருந்தன. இருவர் படைகளிலும் போர் முரசங்கள் முழங்கின; சங்கொலிகள் கிளம்பின; 'சோழ நாட்டுக்கு வெற்றி! சேர நாட்டுக்கு வெற்றி!' என்னும் கோஷங்கள் மாறி மாறி எழுந்தன; குதிரைகள் கனைத்தன; களிறுகள் பிளிறின; காலாட்கள் ஆரவாரம் செய்தார்கள். இரு படைகளும் எதிர்த்து மோதின. வாட்படைகள் ஒன்றோடொன்று தாக்கியது, மின்னலொடு மின்னல் இணைந்தது போலக் காணப்பட்டது. கேடயங்கள் ஒன்றோடொன்று முட்டியதாலெழுந்த ஒலி, கேட்டார் மனத்தைத் திடுக்கிடச் செய்தது. கதையோடு கதை மோதி-

யது, இடியோசை எழுவதுபோன்றிருந்தது. தேரோடு தேர் முட்டியது, மலையை மலை முட்டியது போன்றிருந்தது. கலத்-தைக் கலம் தாக்கியதென யானைகள் ஒன்றையொன்று தாக்கிப் போரிட்டன. படைவீரர்கள் ஆரவாரத்துடன் போர் புரிந்-தது. புலியைப் புலியும், சிங்கத்தைச் சிங்கமும் எதிர்த்துப் போரிடுவது போலக் காட்சியளித்தது.

8. போர்க்களமெங்கும் பேரொலி பிறந்தது. களத்தி-னின்றெழுந்த புழுதிப் படலம் கார்மேகம் போலக் கதிரவனை மறைத்தது. வீரர்களுடைய விழிகள் கோபக் கனலைக் கக்கின. அம்புகளும் ஈட்டிகளும் அழல் ஒளியென விளங்கின. நாண் ஒலி காது செவிடுபடும்படி எழுந்தது. போர்க்களம் இரத்தக் களமாய்க் காட்சியளித்தது. எங்கும் ஒரே பிணக்-குவியல்! சிறிது நேரத்தில் சேரர் படை சிதைந்தது. வீரர் பின்வாங்கினர். சோழர் படையில் வெற்றி முரசு விண்ணைப் பிளந்துகொண்டெழுந்தது.

9. நிலைமையைக் கண்ட நெடுஞ்சேரலாதர், அப்படை வீரர்களிடையே புகுந்து, வீரம் நிறைந்த சில சொற்களைக் கூறினர். அவை சேரர் படையில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பின. அவர்கள் மீண்டும் போர் புரிய முனைந்தார்கள். அஞ்சியோடி ஆட்கள் ஆண்மையோடு திரும்பியதைக் கரிகாலர் கண்டார். ஏற்கெனவே இரு படைகளிலும் எண்-ணற்ற வீரர் இறந்தனர். எஞ்சி நின்றவர் வீணே மடிதல் கூடாதென மன்னர் விரும்பினர்; தாம் ஏறியிருந்த குதி-ரையை விரைவாய்ச் செலுத்தித் தம் படையின் முன்னணி-யில் வந்து நின்றார். அங்ஙனமேபகைவர் படையின் முன்னணி-யில் நெடுஞ்சேரலாதர் நிற்கக் கண்டார். சோழ மன்னர் தம் வேலாயுதத்தை எடுத்துச் சுழற்றிச் சேரமன்னர் மார்பிற் குறி வைத்து எய்தார். குறி பிழைக்கவில்லை. அந்தோ! மன்னர் மண்ணில் வீழ்ந்தார்! அதுகண்ட சேரர் படை எடுத்தது ஓட்டம்! மீண்டும் சோழர் படையில் வெற்றி முரசு ஒலித்தது.

10. தரையில் விழுந்த சேரலாதர் இறக்கவில்லை; மூர்ச்-சித்துக் கிடந்தார்; மயக்கந் தெளிந்து எழுந்தார்; தாம் மட்டும் தனியே நின்றது கண்டு வருந்தினர்; பகைவர் வேல்

தம் மார்பில் பாய்ந்து முதுகுப்புறத்தில் ஊடுருவிச் சென்றிருந்ததை அப்போதுதான் உணர்ந்தார். உண்மை வீரனுக்கு முகத்திலும் மார்பிலும் ஏற்படும் புண்கள் மதிப்பிட முடியா அணிகலன்கள். புறப்புண்ணை வீரர் விரும்பார். ஆகவே, புறப்புண் தாங்கிய சேர மன்னர் மனம் வேதனையடைந்தது. அதனை அறிந்த சோழ வேந்தர், அவரிடம் கண்ணியமாய் நடந்துகொண்டார்; விருப்பமிருந்தால் தமக்கடங்கி அரசு செலுத்தலாமெனக் கூறினர். மானத்தையே மதித்த மன்னர், அதனை விரும்பவில்லை. புறப்புண் பெற்ற பின்பு தாம் உயிர் வாழ விரும்பவில்லையென்று கூறிவிட்டார்; போர்க்களத்தை விட்டகன்றார். தம் வாளைப் பூமியிற் புதைத்தார்; அதன் எதிரில் வடக்கு நோக்கியமர்ந்தார்; உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். வேலால் நீங்காதிருந்த அவரது உயிர், விரதத்தால் நீங்கியது. சேரலாதர் புகழ் நாடு முழுதும் பரவியது.

பயிற்சி:

1. விடை யெழுதுக:

அ கரிகாற்சோழரின் சிறப்புக்குக் காரணம் என்ன?

ஆ. அவரது சிறப்பையொத்த சிறப்புடன் அக்காலத்தில் வாழ்ந்த சேர மன்னர் யார்?

இ. சோழ மன்னர்மீது சேரமன்னர் பொறாமை கொள்ளக் காரணம் யாது?

ஈ. அப்பொறாமையை வளர்த்தவர் யாவர்? அதற்குக் காரணம் என்ன?

உ. சேர மன்னரும் சோழ மன்னரும் எங்குப் போர் செய்தனர்?

ஊ. அப்போரை வருணித்து எழுதுக.

எ. போரின் முடிவு யாது?

ஏ. சேரர் எவ்வாறு இறந்தார்? ஏன்?

2. கீழ் வரும் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

நற்புகழ், மாட்சி, வாய்ப்பு, இறுதியில், சூழ்ச்சி, கருதி, அமைதி, திரட்டு, நல்வரவு.

3. இப்புத்தகத்தின் இறுதியில் உள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

தலைசிறந்த, செம்மல், மாட்சிமை, வாய்ப்பு, சூழ்ச்சி, ஈகை, புல்லர், முதுமொழி, வயப்பட்ட, மாற்றான், நிமித்தம், விண்ணுலகு, பணித்தார், கணம், பிளிறின, கதை, புழுதி, படலம், முனைந்தனர்.



9. மேட்டூர் அணை

1. நமது தமிழ் நாட்டுக்குப் பெருமையளிப்பது **காவிரி யாறு**. இது மேற்கு மலைத்தொடர்களில் உள்ள **குடகு** இராச்சியத்தில் தோன்றுகிறது. இது மைசூர் இராச்சியத்தின் மூலமாயும், கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களின் மூலமாயும் ஏறத்தாழ ஐந்நூறு மைல் தூரம் ஓடி **வங்காள விரிகுடா**வில் விழுகிறது. இது தோன்றுமிடத்தில் கோடைகால மழை பெய்கிறது; பாயுமிடங்களில் குளிர் கால மழை பெய்கிறது. ஆதலால், இது இடையறாத நீர்ப் பெருக்குள்ளதாய் இருக்கிறது.

2. காவிரி யாறு திரிசிரபுரத்திற்கு மேற்கே பத்து மைல் தூரத்தில் இரண்டாய்ப் பிரிகிறது. இப்பிரிவுகளில் தெற்கிலுள்ளது **காவிரி** எனப்படும். வடக்கில் உள்ளது **கொள்ளிடம்** எனப்படும்; இவை பிரியுமிடத்தில் கொள்ளிடத்துக்கு

ஒரு செய்கரை அமைக்கப்பட்டுள்ளது. இருபது மைல்களுக்கு அப்பால் காவிரியும் கொள்ளிடமும் மிக நெருங்கி ஓடுகின்றன. இவ்விடத்தில் **கல்லணை** கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு '**பெரிய அணைக்கட்டு**'[1] என்னும் பெயரும் வழங்குகிறது. இந்த அணைக்கட்டின் வடிகால், கொள்ளிடத்திற் கலக்கிறது.

3. '**ஏழ் தலம் புகழ் காவேரியால் விளை சோழ மண்டலம்**' என்று அருணகிரிநாதர் புகழ்ந்து பாடிய சோழ நாட்டுக்குக் காவிரி யாற்றினலேயே பல துன்பங்கள் நேர்ந்து வந்தன; வெள்ளத்தால் கரைகள் உடைவதும், விளை நிலங்கள் எக்கரிட்டுப் பயனில்லாமற் போவதும் அத்துன்பங்களாம். அவற்றை அடியோடு அகற்ற நெடுங்காலமாக முயற்சிகள் நடைபெற்று வந்தன. ஆனல், நிலையான பயன் ஏற்படவில்லை.

4. ஏறத்தாழ நூற்றிருபது ஆண்டுகட்கு முன் **காவிரி**யின் நீரோட்டத்தை ஒழுங்கு படுத்த **ஸர். ஆர்தர் காட்டன்** என்பவர், கொள்ளிடத்தில் **மேலணைக்கட்டை**க் கட்டுவித்தார். இதனலும் காவிரி கரை புரண்டு ஓடும் துன்பம் நீங்கவில்லை. அதனை நீக்கக் கருதி மேலணைக்கட்டில் காவிரியின் குறுக்கே ஓர் அணை கட்டப்பட்டது. அது காவிரியின் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காகக் கட்டப்பட்டது. ஆயினும், பண்டைக்குறை நீங்கிற்றில்லை.

5. எனவே, காவிரியின் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமாயின், காவிரியின் மேற்பாகத்தில் ஒரு பெரிய தேக்கத்தை அமைக்க வேண்டுவது அவசியமென்பதை உணர்ந்த **கர்னல் எல்லிஸ்** என்பவர், பேரணையொன்று கட்டும் திட்டத்தைத் தயாரித்தார். இது சம்பந்தமாக மைசூர் அரசாங்கத்தார்க்கும், சென்னை அரசாங்கத்தார்க்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. ஆனல், அக்காலத்தில் சென்னை நிருவாக சபை அங்கத்தினராயிருந்த **ஸர் சி. பி. இராமசாமி ஐயர்** தம் அரிய முயற்சியால் அக்கருத்து வேற்றுமைகளை நீக்கி வைத்தார். 1928-ல் அணை கட்டும் வேலை தொடங்கப்பட்டது.

6. அணை கட்டக் குறிக்கப்பட்ட இடமாகிய **மேட்டூர்** விரைவில் பட்டணமாக்கப்பட்டது. அங்கு மின்சார விளக்குகளும், குடிநீர்க் குழாய்களும் அமைக்கப்பட்டன. அதுகாறும்

---

1. Grand Anicut

வேறெங்கும் உபயோகிக்கப்படாத இயந்திரங்கள் வருவிக்கப்பட்டன. ஆறு ஆண்டுகளில், ஆறுகோடியே எண்பது லட்சம் ரூபாய்ச் செலவில் உலகில் உள்ள எல்லா அணைகளிலும் பெரியதாக மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டது.

7. இப்பேரணை ஒரு மைல் நீளமுள்ளது. இதனுல் உண்டாக்கப்பட்ட நீர்த்தேக்கம், அறுபது சதுர மைல் பரப்புடையது. கருங்கல்லோடு சிமிட்டிச் சுண்ணம் கலந்து செய்யப்பட்ட பெரிய அச்சுக்கற்களால் அமைந்தது இந்த அணை. நீரோட்டத்தை ஒழுங்குபடுத்த இதன்கண் பல வகை அமைப்புக்கள் உண்டு. தேக்கம் நிரம்பி வழியும்போது, நீரானது பக்கத்தில் ஓடுவதற்கென 810 அடி நீளத்தில் வடிமடையொன்று கட்டப்பட்டிருக்கிறது. அன்றியும் அதிக நீரை அப்புறப்படுத்தக் கடல் மட்டத்துக்கு மேல் வெவ்வேறு உயரத்தில் அமைக்கப்பட்ட இருபத்தொன்பது மதகுகள் உண்டு. இவையன்றி, நீர் குறையுங்காலத்தில் திறக்கப்படும் மதகுகளும் பல இருக்கின்றன.

8. இந்த அணையினுல் நம் தமிழ் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் பல; தஞ்சாவூர் ஜில்லாவில் நீரின்றி வரண்டு கிடந்த நிலங்களெல்லாம் நீர் வசதி பெற்று நன்கு விளைகின்றன; மேட்டூருக்கும் சென்னைக்கும் இடையே பல ஊர்களுக்கு மின்சார விளக்குகள் அமைந்துள்ளன; இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தின் உதவியால் பல கைத்தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன; மேலும், எத்தனையோ நன்மைகளைச் செய்துகொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

பயிற்சி:

1. விடை எழுதுக:

அ. காவிரியாறு எங்கு உற்பத்தியாகிறது? எந்தெந்த ஜில்லாக்களின் மூலம் பாய்கிறது?

ஆ. மேட்டூர் அணை கட்டப்படுவதற்குமுன் காவிரியில் கட்டப்பட்ட அணைகள் எவை?

இ. காவிரி நதியால் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு நேர்ந்த துன்பங்கள் யாவை?

ஈ. மேட்டூர் அணை யாருடைய முயற்சியால் தொடங்கப்பட்டது?

உ. மேட்டூர் அணையின் அமைப்பை விவரித்து எழுதுக.

ஊ. மேட்டூர் அணையால் தமிழ் நாட்டுக்கு என்ன நன்மைகள் ஏற்பட்டுள்ளன?

2. கீழே வருவனவற்றைப் படித்துத் தெரிந்துகொள்க:

வாங்கி கடையில் மாம்பழங்கள் இரண்டு தின்றேன் நல்ல நான்.

மேலே ஏழு சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்கின்றன. இச்சொற்களின் தொகுதி ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக்கிறதா? இல்லை.

மேலே தரப்பட்ட சொற்களே பின்னே மாற்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றைப் படிக்க:

நான் கடையில் இரண்டு நல்ல மாம்பழங்கள் வாங்கித் தின்றேன்.

இவை ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக்கின்றன.

இவ்வாறு சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நின்று, முடிந்த கருத்தைத் தெரிவிப்பதற்கு வாக்கியம் என்பது பெயர். இது 'முற்றுச் சொற்றொடர்' என்றும் கூறப்படும்.

3. கீழே தரப்பட்டுள்ள வரிகளைச் சொற்களுக்கு இடையே இடம் விட்டெழுதுக:

அ. நமதுதமிழ்நாட்டுக்குப்பெருமையளிப்பதுகாவிரியாறு.

ஆ. இவைபிரியுமிடத்தில்கொள்ளிடத்துக்கொருசெய்கரையமைக்கப்பட்டுள்ளது.

இ. சோழநாட்டுக்குக்காவிரியாற்றினாலேயேபலதுன்பங்கள்நேர்ந்துவந்தன.

ஈ. நிலையானபயன்ஏற்படவில்லை.

4. கீழ் வரும் சொற்களுக்கு இப்புத்தகத்தின் இறுதியில் உள்ள அகராதியைப் பார்த்துப் பொருளெழுதுக:

இடையறாத, நீர்ப்பெருக்கு, வடிகால், எக்கரிட்டு, அகற்ற, தேக்கம், பரப்பு, மதகு.

10. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

1. நமது தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு உலையா ஊக்கத்துடன் தொண்டாற்றிய உத்தமர் பலர். அவருள் ஒருவர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர். இவர் 1855-ஆம் ஆண்டில் உத்தமதானபுரம் என்னும் ஊரில் பிறந்தார். இவர் தந்தையார் வேங்கடசுப்பையர் என்னும் வேதியர் ; அன்னையார் சரசுவதியம்மாள் என்பவர்.

2. சாமிநாத ஐயரின் தந்தையார் இசைப் புலவராய் விளங்கினர் ; ஆதலால், ஐயர் இளமையில் தம் தந்தையாரிடம் சங்கீதமும், அரியலூர்ச் சடகோப ஐயங்கார் என்பவரிடம் தமிழும் பயின்று வந்தார். ஐயங்காரிடம் கற்கவேண்டிய நூல்களைக் கற்ற பின்னர், ஐயர் வேறு பல தமிழ்ப் புலவர்களைத் தேடிச் சென்று, பற்பல நூல்களைப் பாடம் கேட்டார். ஆயினும் இவரது தமிழ் வேட்கை தணியவில்லை. அவ்வேட்கையைத் தணிக்க வல்லவர் அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்துப் புலவராய் விளங்கிய திரிசிரபுரம் மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களே என்பதை அறிந்து அவரைத்

தம் ஆசிரியராக அடைய வேண்டும் என்று ஐயர் விரும்பினர். அதையறிந்த தந்தையார், புதல்வரை அழைத்துச் சென்று, பிள்ளையவர்களிடம் விட்டார். அது முதல் ஐயர் பிள்ளையவர்களை நிழல் போல விட்டு நீங்காமல் ஐந்தாண்டுகள்வரை அரிய பல நூல்களைப் பாடம் கேட்டார். அக்காலத்து நிகழ்ச்சிகள் பலவற்றை ஐயர் தம் வாழ்க்கை வரலாற்றிற் குறித்துள்ளார். அவை படித்து இன்புறத் தக்கவை.

3. பிள்ளையவர்கள் 1875-ஆம் ஆண்டில் இறைவனடி எய்தினர். அதன் பின்னர் ஆதீனத் தலைவரான **சுப்பிரமணிய தேசிகரிடம்** பாடம் கேட்டு வந்த ஐயர், அங்குப் புதியராய்ப் படிக்க வந்த அனைவர்க்கும் பாடம் கற்பித்தும் வந்தார். அப்போது அவருக்கு வயது இருபதே. அக்காலத்தில் தமிழ் மொழிக்குத் தாயகம் போன்று விளங்கிய சைவ மடமொன்றுக்குத் தலைமை தாங்கித் தமிழ் கற்பிக்கும் பெருமை எளிதில் வாய்க்கத் தக்கதன்று. அத்தகைய பெருமையை ஐயர் இளைஞராயிருந்த பொழுதே பெற்றுவிட்டார். இதுவே அவர் தமிழ்ப் புலமைக்குத் தக்க சான்றாகும்.

4. அக்காலத்தில் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராயிருந்தவர், **தியாகராச செட்டியார்** என்பவர். அவரும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றவரே. அவர் ஐயரின் புலமையின் அளவை அறிந்தவர்; ஆதலால் தாம் முதுமை காரணமாக விட்டு நீங்கிய வேலையில் ஐயரை அமர்த்தினர். அது முதல் ஐயரவர்கள் கும்பகோணம் கல்லூரியில் இருபத்து மூன்றாண்டுகள் தமிழ்ப்பணியாற்றினர். அக்காலத்தில் நிகழ்ந்த சில செய்திகளையும் இவர் குறித்துள்ளார். அவையும் படித்து இன்புறத் தக்கவை.

5. ஐயர் கும்பகோணத்தில் இருந்த பொழுது, அங்கு அரசாங்க அலுவலில் இருந்த **சேலம் இராமசாமி முதலியார்** என்பவரின் நட்பைப் பெற்றார். முதலியார் தமிழ் இலக்கியங்களின் சுவையறியும் ஆற்றல் உடையவர். அவர் **சிந்தாமணி** முதலிய பண்டைய நூல்களை ஆராய்ந்து அச்சிட்டால் தமிழுலகம் அவற்றைப் படித்து இன்புறும் என்று ஐயரிடம் அடிக்கடி கூறிவந்தார்; அன்றியும், தம்மிடமிருந்த சிந்தாமணி

முதலிய சில ஏட்டுச் சுவடிகளை இவரிடம் கொடுத்தார். சிந்தாமணி என்பது தமிழ் மொழியில் வழங்கும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. அக்காலத்தில் ஐம்பெருங்காப்பியங்களும் சங்க நூல்களும் பாடஞ் சொல்வாரும் படிப்பாருமின்றி, ஏட்டில் மறைந்து கிடந்தன.

6. சிந்தாமணியை ஐயர் ஆராய ஆரம்பித்து, அஃது ஓர் உயர்ந்த நூலென்பதையும், பிற்காலக் காவியங்கள் பலவற்றிற்கு வழி காட்டியது அதுவே என்பதையும் அறிந்தார். ஏடு படிப்பதென்பது இக்காலத்தவருக்குத் தெரியாத ஒரு கலை. ஏட்டில் மெய்யெழுத்துக்களெல்லாம் புள்ளி இல்லாமலே எழுதப்பட்டிருக்கும். ஐயர் அத்தகைய ஏட்டுச் சுவடிகளை ஆராயும் துன்பத்தையே இன்பமாகக் கொண்டார். சிந்தாமணி உரையில் வரும் மேற்கோள்களையும், பிற செய்திகளையும் அறிய மேலும் பல சுவடிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. அவற்றின் மூலம் அக்காலத்தில் பலர் படித்தும் கேட்டும் அறியாத நூல்கள் பல இருக்கக் கண்ட ஐயர், அவற்றையும் ஆராயத் தலைப்பட்டார். இவ்வாறு, ஐயர் தமது இடையரு முயற்சியால் **சிந்தாமணி, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு** முதலிய அரிய தமிழ் நூல்களை அச்சிட்டு அகம் மகிழ்ந்தார்.

7. இருபத்து மூன்றாண்டுகள் கும்பகோணம் கல்லூரியில் பணி செய்த பின்பு, ஐயர் சென்னை இராசதானிக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார்; சில ஆண்டுகள் சென்னையில் பணியாற்றிய பின்பு, தம் அறுபத்து நான்காம் வயதில் வேலையிலிருந்து நீங்கி, உபகாரச் சம்பளம் பெற்றார். ஓய்வு எடுத்துக்கொள்வதன் பொருட்டே வேலையிலிருந்து நீங்குவது வழக்கம். ஆனால், ஐயர் வேலையினின்று நீங்கிய பிறகும் ஓய்வு கொள்ளவில்லை; அப்போதும் சில பழைய நூல்களை ஆராய்ந்து வெளியிட்டார். அன்றியும், **சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியின்** தலைமை ஆசிரியராயிருந்து, மூன்றாண்டுகள் பணி செய்தார்; 1927-ஆம் ஆண்டில் தம் முதுமை மிகுதியால் அக்கல்லூரியினின்றும் நீங்கினார்.

8. பின்னும் ஐயர் ஆராய்ச்சி வேலையினின்றும் ஓய்வு பெறவில்லை. இவர் உடலில் உயிர் இருந்த வரையில் அதனைத்

தொடர்ந்து நடத்தி வந்தார். இவர் வீட்டுக்கு ஒரு நாள் நான் சென்ற போது, ஒரு புறம் ஏட்டுச் சுவடிகள்; மற்றொரு பக்கம் புத்தகக் குவியல்கள்; அருகிற் சில அருங்குறிப்புக்கள்; எதிரிற் சில மாணவர்கள்; இடையில் ஐயர் அவர்கள்; இவ்வருங்காட்சியைக் கண்டேன். இத்தகைய பேரறிஞர் தமிழுக்குச் செய்த தொண்டையறிந்த அரசாங்கத்தார், இவருக்கு **மகாமகோபாத்தியாயர்** என்னும் பட்டத்தை அளித்தனர்; சென்னைச் சர்வகலாசாலையார், **டாக்டர்** என்னும் பட்டத்தை அளித்துப் பெருமைப்படுத்தினர். ஐயர் எண்பதாண்டுகளுக்குமேல் வாழ்ந்திருந்து, தமிழ்த்தாயின் அணிகலன்களாகிய பல நூல்களைப் புதுக்கித் தந்தார். தமிழ் நாடு இழக்க இருந்த சங்க நூல்கள் என்னும் தமிழ்ப் புதையலைக் கண்டெடுத்துத் தமிழ் மக்களுக்கு உதவிய பெருமை டாக்டர் சாமிநாத ஐயருக்கே உரியதாகும்.

பயிற்சி :

1. விடை எழுதுக :

அ. சாமிநாத ஐயர் எங்குப் பிறந்தார்? அவருடைய தாய்-தந்தையர் யாவர்?

ஆ. சாமிநாத ஐயர் தமிழ் கற்க மீனாட்சிசுந்தரம் பிள்ளையை நாடிச் சென்றதேன்?

இ. தியாகராச செட்டியார் யார்? அவர் சாமிநாத ஐயருக்கு என்ன நன்மை செய்தார்? ஏன்?

ஈ. சாமிநாத ஐயர் சிந்தாமணியைப் பதிப்பிக்க முற்பட்டதேன்?

உ. ஐயரவர்கள் தமிழுலகத்துக்குப் புரிந்த உபகாரங்கள் யாவை?

ஊ. ஐயரவர்கள் பெற்ற பட்டங்கள் யாவை?

2. கீழ் வருவனவற்றைப் படித்துத் தெரிந்துகொள்க :

ஐயர் தமிழைக் கற்றார்:—இஃது ஒரு வாக்கியம். இது யாரைப் பற்றிக் கூறுகிறது? ஐயர் என்பவரைப்பற்றி. இந்த வாக்கியம்

எழுவதற்கு இடமாயிருந்தது 'ஐயர்' என்னும் சொல். இதற்கு எழுவாய் என்பது பெயர்.

ஐயர் என்ன செய்தார்? கற்ருர். எனவே, 'கற்ருர்' என்னும் சொல் எழுவாயின் செயலை உணர்த்துகிறது. வாக்கியத்தின் பயன் 'கற்ருர்.' என்னும் சொல்லிலேதான் நிலைத்திருக்கிறது. ஆதலால், கற்ருர் என்னும் சொல் வாக்கியத்தின் 'பயனிலை' எனப்படும். இது, எழுவாய் என்ன செய்தது, அல்லது எழுவாய்க்கு என்ன நேர்ந்தது என்பதைத் தெரிவிக்கும்.

ஐயர் கற்ருர்—எதை? தமிழை.

பயனிலையின் செயலை ஏற்றுக்கொள்வது எது? தமிழ்.

இது 'செயப்படு பொருள்' எனப்படும்.

எனவே, ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் உறுப்புக்கள் இருக்கும். ஆனல் செயப்படுபொருள் எல்லா வாக்கியங்களிலும் இருக்க வேண்டுவதில்லை. எழுவாயும் பயனிலையும் இருந்தேயாகவேண்டும். அவை இல்லாவிடில் வாக்கியமே அமையாது.

3. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்தெழுதுக :

அ. சாமிநாத ஐயரின் தந்தையார் இசைப்புலவர்.

ஆ. தந்தையார் புதல்வரைப் பிள்ளையவர்களிடம் விட்டார்.

இ பிள்ளையவர்கள் இறைவனடி எய்தினர்கள்.

ஈ. அப்போது அவருக்கு வயது இருபது.

4. கீழ் வரும் சொற்களுக்கு இப்புத்தகத்தின் இறுதியில் உள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

உலையா, தொண்டாற்றி, வேதியர், பயின்று, புதல்வர், வரலாறு, இன்புற, நாயகம், சான்று, பணியாற்றி, இலக்கியம், மேற்கோள், அகம், அணிகலன்.

11. மார்க்கோ போலோ—II

1. சீன நாட்டினின்று தாய் நாட்டுக்குத் திரும்பிய போலோ சகோதரர்கள், இரண்டாண்டுகள் கழித்து மறுபடியும் சீனுவுக்குப் போகப் புறப்பட்டார்கள். அப்போது குப்ளேகான் விரும்பிய வண்ணம் நூறு மதபோதகர்களை அவர்கள் அழைத்துக்கொண்டு புறப்படவில்லை. அவர்களுடன் இரண்டு பேர்களை மட்டுமே **போப்பாண்டவர்** அனுப்ப முடிந்தது. அவர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்ட போலோ சகோதரர்கள், **மார்க்கோ போலோ**வையும் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள்.

2. வெனிஸ் நகரத்தினின்று மரக்கலத்தில் புறப்பட்ட அவர்கள், **ஏக்கர்**[1] என்னுமிடம் வரையில் கடலிற் பிரயாணம் செய்தார்கள் ; அங்கிருந்து **பாக்தாது**[2] பட்டணம் சென்று, அங்குச் சில நாட்கள் தங்கினுர்கள். பாக்தாது என்பது அழகிய பட்டணம். அதன் மக்கள் வான்கலை, மருத்துவக்கலை முதலிய கலைகளில் வல்லவர்களாயிருந்தார்கள். பட்டணத்தைச் சுற்றிப் பேரீந்து மரங்கள் காட்சியளித்தன. சரிகை வேலைப்பாடு நிறைந்த பட்டுடைகள் அங்குத் தயாரிக்கப் பெற்று வந்தன. இவற்றையெல்லாங் கண்டு களித்த போலோக்கள், சில நாட்களுக்குப் பிறகு பாக்தாதை விட்டுப் பாரசீக நாட்டை அடைந்தார்கள். அங்கு மார்க்கோ போலோ நோயுற்றுர். அந்நோய் நீங்க ஓராண்டு கழிந்தது.

3. மார்க்கோ போலோ முற்றிலுங் குணமடைந்த பிறகு அவர்கள் பாரசீகத்தினின்று நீங்கி, பரந்த பாலை நிலத்தின் மூலம் பிரயாணம் செய்தார்கள். அப்பாலை நிலம் உப்பு மண் நிறைந்தது. அவர்கள் பல இன்னல்களுக்கிடையே அதைக் கடந்து இறுதியில் “இந்துகுஷ்”[3] மலையை அடைந்தார்கள் ; அங்குப் புல் வெளிகளும், மரம் செறிந்த காடுகளும், நீரூற்றுக்களும் இருக்கக்கண்டு களிப்படைந்தார்கள்.

---

1. Acre 2. Bagdad 3. Hindu Kush

4. இந்துகுஷ் மலையையும் **பாமிர்**[1] மேட்டின் சரிவுகளையும் கடந்தபோது போலோக்கள் அடைந்த துன்பங்களைக் கணக்கிட்டுக் கூற முடியாது. பாமிர் மேட்டிற் சில இடங்களில் விசித்திரமான ஆடுகளைக் கண்டதாக மார்க்கோ போலோ எழுதியுள்ளார். அந்த ஆடுகளின் கொம்புகள் பதினன்கு அங்குலக் கனமும், நாலரையடி நீளமும் இருந்தன என்று அவர் குறித்திருப்பதைப் படிக்கும் யார்தான் வியப்படையாதிருக்கக்கூடும்?

5. பாமிர் மேட்டைக் கடந்த போலோக்கள், **கோபி**[2] பாலை நிலத்தை அடைந்தார்கள். அது மரங்களற்ற பரந்த வெளி. அங்குச் சில இடங்களில் **முணுமுணுக்கும் மணல்**[3] உண்டு என்றும், அதைப் பற்றி நாடாய்வோர் கூறும் செய்திகள் வெகு விந்தையாய் இருக்கும் என்றும் மார்க்கோ போலோ குறித்துள்ளார். அவரது குறிப்பு வருமாறு:

6. "கோபிப் பாலையில் பிரயாணிகளுள் பலர் ஒன்று கூடிப் போவது வழக்கம். அப்படிப் போகும்போது தற்செயலாக ஒரு பிரயாணி கூட்டத்திற்குப் பிந்திவிட்டால், அவரிடம் அங்குள்ள தேவதைகள் அசரீரியாய் இருந்து அவர் கூட்டத்தவர் பேசுவது போலவே பேசும். சில சமயங்களில் சிறிது தூரத்தில் யாரோ பிரயாணிகள் பேசிக்கொண்டு போவது போலக் கேட்கும். தங்கள் கூட்டத்தினின்றும் பிரிய நேர்ந்த பிரயாணிகள் அந்தப் பேச்சைத் தங்கள் கூட்டத்தவரிடையே நிகழ்வதென்று எண்ணி, அது கேட்குந் திசையிற்சென்று விடுவார்கள். பொழுது புலர்ந்த போதுதான் அவர்களுக்கு உண்மை வெளியாகும்."

7. நற்காலமாகப் போலோக்கள் அத்தகைய துன்பங்களுக்காளாகாமல், சீன நாட்டை அடைந்தார்கள். சீனப்பேரரசர் குப்ளேகான் அவர்களை நன்கு வரவேற்றார். அவர் மார்க்கோபோலோவைக் கண்டவுடனே அவருடைய அறிவின் திறமையை அளந்தறிந்தார்; ஆதலால், அவரைத் தமது அரண்மனையிலேயே நிறுத்திக்கொண்டார்; அவருக்குப் படிப்படியாக உயர்ந்த பதவிகளை அளித்தார். இறுதியில் மார்க்கோ போலோ குப்ளேகானுக்குத் தூதுவராயமர்த்தப்பட்டுச்

1. Pamir 2. Gobi 3. Whispering Sand

சீனுவின் பல பாகங்களில் பிரயாணம் செய்தார்; அன்றியும், அவர் பாமா, கொச்சின் சீனு என்னும் தூர நாடுகளுக்கும் அனுப்பப்பட்டார். எங்குச் சென்ருலும் மார்க்கோ போலோ தம் கடமையை மிகச் சிறந்த முறையில் செய்து வந்தமையால், அவர் சீனப் பேரரசரின் நன்மதிப்புக்கு உரியவரானுர்.

8. இங்ஙனம் பல்லாண்டுகள் சீனுவிற் கழிந்தன. அதற்குள் போலோக்கள் அளவற்ற திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு தங்களுடைய தாய் நாட்டுக்குத் திரும்ப முயன்ருர்கள். ஆனுல், குப்ளேகான் அதற்கு உடன்படவில்லை. அவர்களுக்கு நற்காலமாய் ஒரு வாய்ப்புக் கிட்டியது; அக்காலத்திற் பாரசீகத்தை ஆண்ட மன்னர் குப்ளேகானுக்கு நெருங்கிய உறவினர். அவருக்குத் திருமணம் செய்விக்கக் குப்ளேகான் தம் நாட்டினின்றும் ஓர் அழகியை அனுப்பினுர். அம்மணப்பெண்ணுக்குத் துணை செல்லப் போலோக்கள் அமர்த்தப்பட்டார்கள். ஆதலால், அவர்கள் சீனுவினின்றும் புறப்பட்டுச் சுமத்திரா, தென்னிந்தியா, இலங்கை முதலிய பல இடங்களில் தங்கி, இறுதியில் பாரசீகத்தை அடைந்தார்கள்; அங்கு மணப்பெண்ணை மாப்பிள்ளையிடம் ஒப்படைத்து விட்டுத் தம் நாட்டை அடைந்தார்கள்.

9. அவர்கள் கொண்டு வந்த பொன், வெள்ளி, நவரத்தினங்கள் முதலியவற்றைக்கண்டு வெனிஸ் நகரத்து மக்கள் அடைந்த வியப்பை அளவிட்டுக்கூற இயலாது. அன்றியும், வெனிஸ் மக்கள் போலோக்களின் பிரயாணத்தைப் பற்றிய செய்திகளையறிய ஆவலோடு வந்து கூடுவார்கள். அவர்கள் ஆச்சரியத்தில் ஆழும்படி அநேக செய்திகளை மார்க்கோ போலோ அவர்களுக்குச் சொல்லுவார். சீனுவைப்பற்றி அவர் கூறிய செய்திகளுள் சில வருமாறு:

10. சீன நாடு மிகப் பரந்தது; அதன்கண் வெனிஸைவிடப் பெரிய பல நகரங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று தலைநகரமான பீக்கிங் என்பது. அங்கேதான் குப்ளேகான் அரண்மனை இருந்தது. அது மிக விசாலமானது; அதன் சுவர்கள் பொன் தகடுகளும், வெள்ளித் தகடுகளும் வேயப்பெற்றவை. அவற்றின்மீது விலங்குகளின் உருவங்களும், பறவைகளின்

உருவங்களும் சித்திரிக்கப்பட்டிருக்கும். பீக்கிங் நகரத்து வாணிகத்தின் பெருமையை வருணிக்க முடியாது. அங்குக் காணப்படும் பட்டாடைகளை அளவிட முடியாது. அக்காலத்திலேயே சீனவில், இப்போதிருப்பது போலவே நோட்டுப்பணம் செலாவணியிலிருந்தது. சீன, ஜோதிடர்கட்கும், மாந்திரிகர்கட்கும் பெயர் பெற்றது. மன்னரிடம் பதினயிரம் மாசற்ற வெண்குதிரைகள் இருந்தன என்று மார்க்கோ போலோ கூறுகிருர்.

11. மார்க்கோ போலோ 1327-ஆம் ஆண்டில் மரணமடைந்தார் என்பது தெரிகிறது. எனவே, அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே ஐரோப்பாவிலிருந்து ஆசியாவின் கீழ்க்கரைக்கு நிலமார்க்கமாகப் பிரயாணம் செய்த பெருமை மார்க்கோ போலோவுக்கு உரியது. அன்றியும், கீழ் நாட்டின் அக்காலச் சிறப்புக்களை மேல் நாட்டவருக்கு எடுத்துரைத்த பெருமையும் அவருடையதே. இதனல் மேல் நாடுகட்கும் கீழ் நாடுகட்கும் தொடர்பு உண்டாயிற்று; இதுவே பிற்காலத்தில் ஐரோப்பியர் கீழ் நாடுகளிற் பரவத் தூண்டுகோலாயிற்று.

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. போலோ சகோதரர்கள் வெனிஸிலிருந்து எது வரையில் மரக்கலத்திற் சென்றார்கள் ?

ஆ. மார்க்கோ போலோ எங்கு நோயுற்றார் ? அவர் சுகமடைய எவ்வளவு காலம் ஆயிற்று ?

இ. இந்துகுஷ் மலையின் இயல்பு எவ்வாறிருந்தது ?

ஈ. பாமிர்ப் பீட பூமியில் எவ்வகை ஆடுகள் காணப்பட்டன ?

உ. ‘முணு முணுக்கும் மணல்’ என்பது யாது ?

ஊ. மார்க்கோ போலோ குப்ளேகானல் அடைந்த நன்மைகள் யாவை ?

எ. போலோக்கள் தங்கள் நாடு திரும்புவதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் யாது ?

ஏ. மார்க்கோ போலோ சீனுவைப்பற்றிக் கூறியவை யாவை?

ஐ. மார்க்கோ போலோவின் பிரயாணத்தால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

2 கோடிட்ட இடங்களில் போருத்தமான சோற்களை அமைத்து எழுதுக :

அ. அவர்களுடன் இரண்டு பேர் — போப்பு அனுப்பினர். [கூட, மட்டும், உடன்]

ஆ. இக்காட்சிகளை —— போலோக்கள் அங்குச் சில நாட்கள் தங்கினர்கள். [கேட்டு, சொல்லி, கண்டு, விரும்பிய, மகிழ்ந்த]

இ. பாமிர் மேட்டை — கோபி பாலை நிலத்தை —. [சென்ற, சேர்ந்த, கடந்த, கண்டார்கள், சேர்ந்தார்கள், அடைந்தார்கள்.]

3. கீழ் வருவனவற்றுக்குத் தகுந்த நிறுத்தக் குறிகள் இடுக.

அ. மார்க்கோ போலோ கூறியதாவது சக்கரவர்த்தியாரே நாங்கள் இங்கு வந்து பல நாட்களாயின எங்கள் ஊருக்குப்போக அன்புகூர்ந்து அனுமதி யளிக்கவேண்டும்

ஆ. நிக்கோலோ போலோ மேபியோ போலோ மார்க்கோ போலோ என்னும் மூவரும் அரசரைப் பார்த்து கான் அவர்களே நீங்கள் புரிந்த உதவிக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று கூறினர்

4. கீழ் வரும் சோற்களுக்கு அகராதியைப் பார்த்துப் போருளேழுதுக :

வான்கலை, மருத்துவக்கலை, பரந்த, வியப்பு, அசரீரி, புலர்ந்த, தூதுவர், வாய்ப்பு, ஆவல், வேயப்பெற்று, செலாவணி.



12. புலவர் தூது

1. பண்டிதை விஜயலட்சுமி அம்மையார் ரஷ்யாவுக்கு இராயபாரியாக அனுப்பப்பட்ட செய்தி கேட்டு, நாம் வியப்படைந்தோம்; ஒரு பெண்மணி இராயபாரியாக அயல் நாட்டுக்குச் செல்வது இதுவே முதல் தடவை என்று மகிழ்ந்தோம்; இந்திய நாட்டு வரலாற்றில், இது ஒரு புதுமை என்றும் எண்ணினோம். ஆனால், ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னரே, நம் தமிழ் நாட்டில் பெண்பாலர் அரசர்பால் தூது செல்லும் வழக்கம் இருந்தது என்று கூறினால் நீங்கள் ஆச்சரியம் அடைவீர்கள். ஆனால் இது உண்மை. இச்செய்தி சங்க நூலிற் காணப்படுகிறது.

2. ஏறத் தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் தமிழ் நாடு மூன்று பெரிய இராச்சியங்களாகப் பிரிந்திருந்தது. அவை சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பவை. அவற்றையாண்டவர் சேரர், சோழர், பாண்டியர் என்று வழங்கப்பட்டனர். அவரை மூவேந்தரென்றும், முடியுடை மன்னர் மூவர் என்றும் கூறுவர். அக்காலத்தில் அம்மூவரேயன்றி, வேறு பல சிற்றரசர்களும் தமிழ் நாட்டின் சிறு சிறு பகுதிகளை

ஆண்டுவந்தார்கள். அவர்களுக்குக் 'குறுநில மன்னர்கள்' என்னும் பெயர் வழங்கி வந்தது.

3. அக்குறுநில மன்னர்களுள் ஒருவர் **தொண்டைமான் இளந்திரையர்** என்பவர். அவர் சோழ மன்னர் ஒருவருக்கும் **பீலிவளை** என்ற நாககன்னிகைக்கும் பிறந்தவர். பீலிவளையின் விருப்பத்தின்படி சோழ மன்னர் தம் நாட்டின் ஒரு பகுதியை இளந்திரையருக்கு ஈந்தார். அப்பகுதிக்குத் **தொண்டை நாடு** என்பது பெயர். இளந்திரையர் **காஞ்சீபுரத்**தைத் தலைநகராக்கிக்கொண்டு, தொண்டை நாட்டை ஆண்டு வந்தார்.

4. தொண்டைமான் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவர்; முடியுடை மன்னர் மூவரோடு சேர்த்து எண்ணப்படும் பெருமையும் வீரமும் நிறைந்தவர்; தமிழ்ப் புலமை நிரம்பியவர்; செந்தமிழ்ச் செய்யுட்கள் பலவற்றை அவர் இயற்றியுள்ளார். அவர் **அதியமான்** என்ற மற்றொரு சிற்றரசர்பால் எக்காரணத்தாலோ பகை கொண்டார்.

5. **அதியமான்** என்பவர் கடையெழு வள்ளல்களுள் ஒருவர். தம்மை அடைந்த இரவலர்க்கு வரையாது பொருள் வழங்குபவர் **வள்ளல்** எனப்படுவர். அதியமான் ஒருவகை வீரர்களாகிய **மழவர்களுக்குத்** தலைவர்; சேரமானுக்கு உறவினர்; ஒரு தருணத்தில் ஏழு அரசர்களைப் போரில் வென்றவர். **தகடூர்** என்பது அவர் தலைநகரம். அஃது இக்காலத்துள்ள மைசூர் இராச்சியத்தில் இருப்பதாகக் கூறுவர் சிலர். சேலம் ஜில்லாவில் உள்ள தருமபுரியையடுத்த அதமன் (அதியமான்) கோட்டை என்னும் பகுதியே அக்காலத்தில் தகடூர் என வழங்கப்பட்டது என்பர் சிலர். அதியமான் ஊரைச் சார்ந்த ஒரு மலை உண்டு. அதற்குக் **குதிரைமலை** என்பது பெயர். அதியமானுக்கு **அதிகமான் நெடுமானஞ்சி, நெடுமானஞ்சி, எழினி** என்னும் வேறு பெயர்களும் வழங்கி வந்தன.

6. அதியமான் புலவர்களைப் போற்றி ஆதரிக்கும் பண்புடையவர். **அவ்வையார், பரணர்** முதலிய பெரும் புலவர்கள் அதியமானைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். ஒரு நாள் அதியு-

மான் தமது குதிரை மலையின் மீதிருந்த இயற்கைக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு வந்தார். அப்போது மலையின் ஒரு பிளவில் இருந்த கருநெல்லி மரத்தில் ஒரு கனியிருக்கக் கண்டார். அக்கனியைத் தின்றவர் நெடுநாள் சீவித்திருப்பர் என்பது அவருக்குத் தெரியும். அவர் தனியே இருந்தமையால், ஆபத்துக்குள்ளாகக்கூடிய இடத்தில் அம்மரம் இருந்ததையும் பொருட்படுத்தாமல், அதில் ஏறி அக்கனியைப் பறித்தார்.

7. தாம் பறித்த கருநெல்லிக் கனியைத் தின்று, அதன் பயனை அடைய அதியமான் மனம் எண்ணவில்லை. தாம் நீண்ட நாள் வாழ்ந்திருப்பதைவிடத் தம்மைப்போன்ற அரசர் பலருக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்தும் பெருமையுடைய **அவ்வையார்** அதனைத் தின்று நீண்ட ஆயுளைப்பெறட்டும் என்று எண்ணியது அவர் மனம். அவர் தன்னலமற்ற தன்மையைப் பாருங்கள்! அவர் விரும்பியபடியே அக்கனியைக் கொண்டு வந்து தம்மரண்மனையில் இருந்த அவ்வையாருக்கு அளித்தார். அவரும் அதைத் தின்று அதியமானைப் புகழ்ந்து பாடினர்.

8. அத்தகைய அதியமானோடு போர்தொடுக்க எண்ணிய தொண்டைமான், பெரியதொரு படையைத் திரட்டினர்; புத்தம் புதிய போர்க்கருவிகள் பலவற்றைச் செய்வித்தார்; அவற்றிற்கு மெருகிட்டு, நெய் பூசி, மலர் மாலையும் மயிர்பீலியும் அணிவித்து, ஆயுதச்சாலையில் அழகுபெற அமைத்தார்; அதியமான் ஒப்பற்ற வீரராதலின், அவரை எதிர்க்கத்தக்க தருணத்தை எதிர்நோக்கி இருந்தார்.

9. அச்செய்தி அதியமானுக்கு எட்டியது. ஆனல், அதியமான் மனத்தில் அப்போது போர் புரியும் எண்ணம் எழவில்லை. "நாம் தொண்டைமானுடன் போர் தொடுத்தால், வீரர் பலர் வீணில் மடிவர்; நாடு நாசமாகும்; குடிமக்கள் இடர்ப்படுவார்கள். ஆதலால், போர் தொடுக்காமல் இருப்பதே நலம்," என்று அவர் எண்ணினர்; அரும்பெரும் புலவர் அவ்வையாரை அணுகி, "அம்மையீர், தொண்டைமானிடம் தூது சென்று போரைத் தடுக்கத் தக்கவர் நீரே. என் பொருட்டும், என்னுடைய குடிமக்கள் பொருட்டும் நீவிர் இதனைச் செய்ய வேண்டுகிறேன்," என்ருர்.

10. அதியமான்பால் அளவற்ற அன்புகொண்டிருந்த அவ்வையார் அதற்கிசைந்து, உடனே தகடூரை விட்டுப் புறப்பட்டார்; பல நாட்கள் நடந்து காஞ்சிபுரத்தை அடைந்தார். அருந்தமிழ் மூதாட்டியராகிய அவ்வையாரின் வரவை அறிந்த தொண்டைமான், அவருக்கு நல்வரவுக் கூறிப் பெரிதும் உபசரித்தார். அவ்வையார் நெடு நேரம் தொண்டைமானுடன் பற்பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார்; பின்பு தாம் தூது வந்த காரியத்தைத் தெரிவித்தார்; தம் இன்னுரைகளால் தம் கருத்தைத் தொண்டைமான் நன்கு உணரச் செய்தார். அவ்வுரைகளைக் கேட்ட தொண்டைமானுக்குப் போரில் இருந்த விருப்பம் விரைவில் மாறிவிட்டது.

11. ஆயினும், தம் ஆயுத பலத்தை அவ்வையார் அறிந்து சென்று, அதியமானுக்கு அறிவிக்கவேண்டும் என்னும் அவா தொண்டைமான் உள்ளத்தில் தோன்றியது. ஆகவே, அதற்கு முன்னர் அவ்வையார் தம் அரண்மனைக்கு வந்ததில்லையாதலால், அதனை அவருக்குக் காட்டுவதுபோல அழைத்துச் சென்றார்; அரண்மனையின் பல பாகங்களையும் காட்டிக்கொண்டே படைக்கலக் கொட்டிலுள் நுழைந்தார்; அங்கிருந்த படைக்கலங்களை அவ்வையாருக்குக் காட்டி நின்றார். அவற்றைக் கண்ட அவ்வையார், தொண்டைமான் கருத்தை அறிந்தார்; அதியமான் வீரத்தை அவர் நன்குணரும்படி செய்ய நிச்சயித்தார்.

12. "காஞ்சிபுர வேந்தரே, உமது அரண்மனையின் வன்மையும், படைக்கலங்களின் பெருமையையும் என்னென்றுரைப்பேன்! ஆ! புத்தம் புதிய படைக்கலங்கள்! எவ்வளவு அழகாகச் செய்யப்பட்டுள்ளன! இவற்றின் கைப்பிடிகளும் காம்புகளும் எவ்வளவு அழகாயுள்ளன! ஒவ்வொன்றும் மெருகிடப்பட்டு மின்னுகின்றதே! நெய் பூசப்பெற்ற இவை பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பெற்றல்லவா காட்சியளிக்கின்றன! தொண்டைநாட்டு மன்னரே, உம்முடைய படைக்கலங்களின் பெருமையை எவ்வாறு புகழ்வேன்! இவற்றை நோக்க அதியமானுடைய ஆயுதங்கள் எம்மாத்திரம்! அவை பகைவரைக் குத்திக்குத்தி நுனி மழுங்கியும், அடி முறிந்தும், காம்பிழந்தும், கைப்பிடி உடைந்தும், இரத்தக்கறை நிறைந்தும் கொல்லன் கொட்டிலிற் கிடக்-

கின்றன. அவற்றிற்கு இவ்வளவு அழகும், பெருமையும் எங்ஙனம் அமையும்?'' என்று கூறினார் அவ்வையார்.

13. அவ்வையாரின் சொற்களின் ஆழ்ந்த பொருளைத் தொண்டைமான் அறிந்தார்; தம்முடைய படைக்கலங்களைப் புகழ்வது போல இகழ்ந்தும், அதியமான் படைக்கலங்களை இகழ்வது போலப் புகழ்ந்தும் பேசிய அவ்வையாரின் அறிவைக் கண்டு வியந்தார். தம்முடைய படைக்கலங்கள் போரில் உபயோகிக்கப்படாமையால் புத்தம் புதியவையாய்க் காட்சி அளித்தன; அதியமானுடையவை அடிக்கடி போரில் உபயோகிக்கப்பட்டமையால் உடைபட்டுக் கொல்லன் உலைக்களத்திற் கிடந்தன. இவ்வளவு நுட்பமாகத் தம்மை இகழ்ந்த அவ்வையார்மீது தொண்டைமான் சினம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, அவருக்கு அவ்வையாரிடம் இருந்த மதிப்பு மேலும் அதிகரித்தது. அவ்வையார் மொழிகளுக்கிணங்கித் தொண்டைமான் போரைத் தவிர்த்தார்.

14. அக்கால புலவர்களின் நுட்ப அறிவைக் கவனித்தீர்களா? அதுமட்டு மன்று; தாம் விரும்பியதை மன்னனுயிற்றே என்று மறைக்காமல் கூறும் மன வல்லமையைக் கவனியுங்கள். அரசர்களுக்கு அறிவு புகட்டும் ஆற்றல் அவ்வையாரிடம் மட்டுமன்றி, அக்காலப் புலவர் எல்லாரிடத்தும் இருந்தது என்பதை விளக்கப் பண்டைய நூல்களில் பற்பல செய்திகள் உண்டு.

பயிற்சி:

1. விடை எழுதுக:

அ. பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டையாண்ட மூவேந்தர் யாவர்?

ஆ. குறுநில மன்னர் என்பார் யார்?

இ. இளந்திரையர் என்பவர் யார்? அவர் சிறப்புக்கள் யாவை?

ஈ. அதியமான் என்பவர் யார்? அவர் பெருமைகள் யாவை?

உ. அதியமானிடம் அன்புகொண்டிருந்த புலவர் யார்?

ஊ. அப்புலவருக்கு அதியமான் செய்த அருஞ்செயல் யாது?

எ. அதியமான் தொண்டைமானுடன் போர் புரிய ஏன் விரும்பவில்லை ?

ஏ. தொண்டைமானிடம் தூது சென்றவர் யார் ?

ஐ. தொண்டைமானுடைய படைக்கலச் சாலையைக் கண்ட அவ்வையார் கூறிய மொழிகள் யாவை ?

ஒ. அவற்றின் உட்பொருள் யாது ?

2. பொருத்தமான வினைமுற்றுக்களைக் கோடிட்ட இடங்களில் முக்காலங்களிலும் அமைத்து எழுதுக :

அ. நானும் என் நண்பனும் கோட்டைக்கு — (போ)

ஆ. நானும் நீயும் பந்து — (விளையாடு)

இ. நானும், நீயும், மணியும் வேலைகளை — (செய்)

3. கீழே தரப்பட்டுள்ளவற்றைக் கவனித்துச் சொல்லியபடி செய்க:

சோறு + செலவு = சோற்றுச்செலவு

று என்னும் எழுத்தை இறுதியில் உடைய சொல்லோடு மற்றொரு சொல் வந்து சேரும்போது று என்னும் எழுத்திலுள்ள ற் என்னும் எழுத்து இரட்டும். கீழே தரப்பட்டுள்ளவைகளைச் சேர்த்தெழுதுக :

வயிறு + வலி =
கயிறு + கட்டில் =
கிணறு + தவளை =
பயறு + உருண்டை =
தாறு + கோல் =
சேறு + நண்டு =
வரலாறு + நூல் =

4. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :

இராயபாரி, ஈந்தார், ஆற்றல், செய்யுள், வரையாது, பண்பு, பீலி, இடர், அவா, படைக்கலம், கொட்டில், சினம்.

13. கண்ணகி வழக்குரைத்தல்

[நாடகம்]

காட்சி—1

நடிகர் :	பாண்டிமாதேவி, தோழியர்
இடம் :	பாண்டிமாதேவியின் அந்தப்புரம்
காலம் :	முற்பகல்

(பாண்டிமாதேவியார் ஒரு பீடத்தில் அமர்ந்திருக்கிறார். தோழியர் அருகில் அமர்ந்துள்ளனர்.)

ஒரு தோழி : தேவியரே, மன்னிக்க வேண்டும். உங்கள் அழகிய முகம் என்றும் போல் இல்லை இன்று ; சிறிது வாட்டமுற்றிருக்கின்றது ; பொலிவிழந்து காணப்படுகின்றது. காரணம் யாதோ? உடல் நலம் இன்மையால் அங்ஙனம் உளதோ? தெரிவித்தால் உடனே ஆவன செய்யலாமே!

பாண்டிமாதேவி : பாங்கி, நீ கூறுவது உண்மையே. ஆனால், உடலில் நோய் ஒன்றுமில்லை ; மனந்தான் நலிவடைந்துளது.

தோழி : கோப்பெருந்தேவியீர், வளம் கொழிக்கும் வையை நாட்டுக்கிறைவியரே, மீனாட்சிசுந்தரர் அருளால் எல்லாச் செல்வங்களையும் பெற்று விளங்கும் உங்கள் மனம் நலிவடையக் காரணம் யாதோ? விருப்பமிருப்பின் அடியாள்மீது அன்புகூர்ந்து அதனை வெளியிடுங்கள். இன்றே—இல்லை—இப்போதே அதனை அகற்றற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

பா—தேவி : உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டிய இரகசியம் ஒன்றுமில்லை. இன்று விடியற்காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். கடைசி ஜாமத்திற்காணுங் கனவு உடனே பலிக்கும் என்று கனா நூல் வல்லார் கூறக் கேட்டுள்ளேன். அதனாற்றான் என் மனம் கவல்கின்றது!

தோழி : பாண்டிமாதேவியீர்! நீங்கள் கூறுவது உண்மையே. ஆயினும், ஆண்டவன் அருள் பெற்றவர்களிடத்தில் 'நாளென் செயும்? வினைதான் என் செயும்? நாடி வந்த கோள் என் செயும்?' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க தீக்கனவு யாது செய்யவல்லது? அக்கனவு இன்னதென விவரிக்கலாமன்றோ?

பா—தேவி : பாங்கி, விவரிக்கலாம். அதை நினைக்குந்தோறும் மனம் வேதனையுறுகின்றது! விவரிக்கவும் வாய் நடுக்குறுகின்றது; ஆயினும், கூறுவேன், கேள்: நான் கண்ட கனவுகள் பல. ஒன்றில் செங்கோலும் வெண்குடையும் நிலத்து வீழ்ந்தன; ஆசார வாயில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது. ஒரு கனவில் எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன; சூரியனை விழுங்கக்கூடிய இருள் உண்டாயிற்று. மற்றொரு கனவில் இரவில் இந்திரவில் இட்டிருந்தது; பகலில் விண் மீன்கள் விழுந்தன. ஆதலால், வருவதோர் உற்பாதம் உண்டு. இவற்றை மன்னர்க்கு உரைப்போம், வருக.

தோழி : அங்ஙனமே செய்வோம். ஆரடியங்கே! நம் கோப்பெருந்தேவியார் அரசர் அவைக்குச் செல்கின்றார். அதிவிரைவில் அட்டமங்கலங்கள் ஏந்தி வாருங்கள்.

ஏவல் மகளிர் : இதோ வந்துவிட்டோம் அம்மணி.

[திரை]

காட்சி—2

நடிகர் :	பாண்டியன் நெடுஞ்சேழியன், கோப்பெருந்தேவி, கண்ணகி, மந்திரிகள், பிரதானிகள், வாயிற்காவலன், ஏவல் மகளிர் முதலியவர்.
இடம் :	பாண்டியன் அவைக்களம்
காலம் :	முற்பகல்

[*பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையில் அமர்ந்திருக்கின்றான். மந்திரிமார், பிரதானிகள் அவையில் அமர்ந்திருக்கின்றனர். பாண்டிமாதேவி சபையைநோக்கி வருகின்றாள். அவளை ஏவல் மகளிர் அட்டமங்கலங்களை ஏந்திக்கொண்டு சூழ்ந்து வருகின்றனர்.*]

ஏவல் மகளிர் : பாண்டியரின் பெருந்தேவியார் வாழ்க! கோப்பெருந்தேவியார் வாழ்க! (*பாண்டிமாதேவியார் அரசன் அருகில் வந்து வணங்குகின்றார்.*)

நெடுஞ்செழியன் : தேவி, மீனாட்சிசுந்தரர் அருளால் மங்களம் உண்டாகட்டும்! (*தன் அரியணையின் ஒரு புறத்தைச் சுட்டி*) இங்கு அமர்க. திடீரென்று நம் அவையின்கண் வரக் காரணம் யாதோ? ஏன் உன் முகம் வாடியிருக்கின்றது? உடல் நலமின்றோ? பிற காரணம் யாதேனுமுண்டோ?

கோப்பெருந்தேவி : நாதரே, அடியாள் இன்று விடியற் காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். அது முதல் என் உள்ளம் நடுங்காநின்றது. நம் செங்கோலும் வெண்கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன! ஆசார வாசலில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது!

நெடுஞ்செழியன் : ஆ—என்ன! செங்கோலும் குடையும் நிலத்தில் வீழ்ந்தனவா? அமைச்சர் பெருமக்களே, கேட்டீர்களா கோப்பெருந்தேவி கூறியதை!

[அத்தருணத்தில் அவைக்கு வெளியே நின்ற வாயிற்காவலனைக் கண்ணகி அணுகி,]

கண்ணகி: வாயிலோயே, வாயிலோயே, அறநெறி மறந்த அரசனின் வாயிலோயே, 'கணவனை இழந்தாள் ஒருத்தி, கையிற் சிலம்பொன்று ஏந்தி வந்து வாயிலில் காத்திருக்கின்றாள்' என்று நீதி கெட்ட நெடுஞ்செழியனுக்கு அறிவிப்பாயாக!

காவலன்: (அரசனை யணுகி) அரசர் பெருமானே, வாயிலில் வந்திருக்கிறாள் ஒருத்தி; அவள் எருமைக்கடாவை வாகனமாகக்கொண்ட கொற்றவையும் அல்லள்; பிடாரியும் அல்லள்; பத்திரகாளியும் அல்லள். அவள் கண்கள் கோபக்கனலைக் கக்குகின்றன. கணவனை இழந்தவளாம்; கையிற் சிலம்பொன்று ஏந்தியுள்ளாள்.

நெடுஞ்செழியன்: அவள் வருக. அவளை விரைவில் உள் விடுக.

[கண்ணகி சபையில் வந்து மன்னன் முன் நிற்கின்றாள்.]

நெடுஞ்செழியன்: பெண்ணே, ஏன் கண்ணீர் சொரிகின்றனை? நீ யார்?

கண்ணகி: நான் புகார் நகரில் வாழ்வேன். அவ்வூர்ப் பெருங்குடி வணிகர் மாசாத்துவான் என்பவரின் புதல்வர் கோவலருக்கு மனைவி யான். அவர் ஊழ்வினையால் உமது நகரில் வந்து, என் காற்சிலம்பொன்றை விலைப்படுத்த விரும்பி, உம்மாற் கொலையுண்டார்; என் பேர் கண்ணகி.

நெடுஞ்செழியன்: நன்று! கள்வனைக் கொல்லுதல் நீதிதானே?

கண்ணகி: தீரக் கேட்டறியாமல் கொலைக்கட்டளையிட்டுக் கோவலரைக் கொன்றமையால், உமது நீதி முறைமை கெடுவதாயிற்று; அதனைக் காட்டுவேன். என் சிலம்பின் அரி மாணிக்கம்.

நெடுஞ்செழியன்: என் தேவியுடைய சிலம்பின் பரல் முத்தே.

(உடனே இரண்டு சிலம்புகளும் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. கண்ணகி தன் காற்சிலம்பை எடுத்துத் தரையின்மீது வீசி எறிகிறாள். அது உடைகிறது. அதனுள் இருந்த அரி மாணிக்கம் என்பதை அரசன் காண்கின்றான்.)

ஆ! என்னே என் மதி! என்னே என் முறை! அந்தோ! பொற்கொல்லன் பொய்யுரை கேட்ட யானோ அரசன்! யானே கள்வன்! என் அருமரபு என்னால் பழியுற்றதே! என் ஆயுள் கெடுவதாக! (அரசன் அரியணையிற்சாய்ந்து மரணமடைகின்றான்.)

[திரை]

பயிற்சி:

1. விடை எழுதுக:

அ. அரசியின் முகம் பொலிவிழந்ததற்குக் காரணம் என்ன?

ஆ. பாண்டிமாதேவி கண்ட தீக்கனவுகள் யாவை?

இ. கண்ணகி வாயிற் காவலனிடம் கூறியவை யாவை?

ஈ. காவலன் கண்ணகியை எவ்வாறு வருணிக்கிறான்?

உ. பாண்டியன், "நீ யார்?" என்று கேட்டதற்குக் கண்ணகி கூறிய விடை யாது?

ஊ. கண்ணகி தன் வழக்கை எவ்வாறு வென்றாள்?

எ. தான் நீதி தவறிவிட்டதை அறிந்த மன்னன் கூறியது என்ன?

2. இக்காட்சிகளில் அடங்கிய கதையை உன் சொந்தச் சொற்களால் எழுதுக.

14. உழவுத்தொழில்

1. இந்தியா விவசாய நாடு. இதில் ஏறத்தாழ ஆறு லட்சம் ஊர்கள் உள்ளன. அவற்றில் வாழும் மக்களுள் பெரும்பாலார் பயிர்த்தொழில் செய்து பிழைக்கின்றனர். நம் நாட்டு மக்களுள் நூற்றுக்கு அறுபத்தைந்து பேர் ஏர்த்-தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்பது கணக்கிடப்பட்டுள்-ளது. இதனுல், நம் நாட்டவர் முற்காலத்தில் வேறு தொழில்களை அறிந்ததில்லை என்று நினைக்கலாகாது. உழவுத் தொழிலை ஒப்புயர்வற்ற தொழிலாக அவர்கள் மதித்ததே அதற்குக் காரணம். இது பற்றியே, '**சீரைத்தேடின் ஏரைத்-தேடு; ஓதுவாரெல்லாம் உழுவார் தலைக்கடையில்,**' என்னும் பழமொழிகள் தோன்றின. அன்றியும்,

> **" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
> **தொழுதுண்டு பின்செல் பவர்."**

> **" உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை; கண்டீர்**
> **பழுதுண்டு வேறோர் பணிக்கு."**

என்னும் வள்ளுவர் வாக்கும் உழுதொழிலின் உயர்வை நன்கு விளக்கும்.

2. இத்தகைய சிறந்த தொழில் இக்காலத்தில் இழிநிலை எய்தியுள்ளது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்-றுள் முக்கியமானவை இரண்டு: ஆங்கில ஆட்சியில்—உழு-தொழிலைவிட, பிற கைத்தொழில்களைவிட—ஏதேனும் உத்தி-யோகம் செய்வதே சிறந்ததென்னும் தவறுன கொள்கை பரவலாயிற்று. அதிலும், அரசாங்கத்தில் உத்தியோகம் செய்வது சாலச்சிறந்தது என்னும் கொள்கை வலியுற-லாயிற்று. இது பற்றியே, '**கோழி மேய்த்தாலும் கும்பினியில் மேய்க்கவேண்டும்,**' என்னும் முதுமொழியும் தோன்றியது. இதில் 'கும்பினி' என்னும் சொல் **ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனியைக்** குறிப்பதாகும். ஆதலால், பட்டணவாசிகளே-யன்றிக் கிராமவாசிகளும் ஆங்கிலம் கற்று உத்தியோகம் தேடத் தொடங்கி விட்டார்கள். இக்கொள்கையால் உழு-தொழிலேயன்றிப் பிற தொழில்களும், நம் தாய் மொழியாம் தமிழ் மொழியும் சீர்குலையத் தொடங்கின. ஏர்த்தொழிலின்

இன்றைய இழிநிலைக்கு இவ்வுத்தியோக மோகம் ஒரு காரணம்; மற்றொரு காரணம், நம் மக்களின் கல்வியின்மை. கிராம மக்களிடையே போதிய கல்வி இல்லாமையால், அவர்கள், **'பழங்காலைத் தூர்க்காதே; புதுக்காலை வெட்டாதே,'** என்னும் பழமொழிக்கிணங்கப் பண்டைப் பயிர்த்தொழில் முறைகளைக் கைவிடவும், நவீன முறைகளை மேற்கொள்ளவும் மறுக்கின்றார்கள். இனிப் பயிர்த்தொழில் முறைகளைப்பற்றிக் கவனிப்போம்.

3. பயிர்த்தொழிலுக்கு இன்றியமையாத சில சாதனங்கள் உண்டு. அவற்றைக் கீழ் வரும் பாட்டால் அறிக:

> "ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்,
> நீர்அருகே சேர்ந்த நிலம்உளதாய்—ஊர்அருகே
> சென்று வரற்கெளிதாய், செய்வாரும் சொற்கேட்கில்
> என்றும் உழவே இனிது."

இப்பாட்டால் உழவுத்தொழில் இனிது நடைபெறுதற்கு ஏரும், வித்தும், நீர் வசதியுள்ள சிறந்த நிலமும் இன்றியமையாதவை என்பது தெளிவாகின்றது. முதலில் நிலத்தைப்பற்றிக் கவனிப்போம்: **நன்செய்**, **புன்செய்** என நிலம் இரு வகைப்படும். ஆறு, ஏரி, குளம், கிணறு முதலிய நீர்நிலைகளினின்று நீர் பாய்ச்சிப் பயிரிடப்படும் நிலம் நன்செய்; மழையொன்றினையே ஆதாரமாகக்கொண்டு பயிரிடப்படுவது புன்செய்; இது 'வானம் பார்த்த பூமி,' என்றும் வழங்கப்படுகிறது. இவற்றுள் நன்செய்யே பெரும்பயன் அளிக்க வல்லது.

4. நன்செய் நிலத்தில் விதைக்கும் முறைகள் இரண்டு: ஒன்று, **புழுதிக்கால் விதைப்பு**; மற்றொன்று, **சேற்றுக்கால்** அல்லது **சேடை விதைப்பு**. புழுதிக்கால் விதைப்பென்பது நிலத்தை நீர் இல்லாமல் சிறிது ஈரம் இருக்கும்போது, நன்றாக ஆழ உழுது, அதில் தானியத்தை விதைப்பதாகும். இந்த முறையில் விதைப்பது சிறந்தது. சேடை விதைப்பென்பது நிலத்தில் நீர் பாய்ச்சி, ஆழ உழுது, சேறாக்கி விதைப்பதாகும்.

5. நிலத்தின் தன்மைக்கேற்றபடி விதைத்த பிறகு, அல்லது விதைப்பதற்கு முன்பு, எருவிட வேண்டுவது மிக்வும்

அவசியமாகும். இதை வள்ளுவர் ஒரு குறளின் மூலம் வற்புறுத்தியுள்ளார். அது வருமாறு :

> "ஏரினும் நன்றால் எருவிடுதல் ; கட்டபின்
> நீரினும் நன்றதன் காப்பு."

ஏர் உழுதலைக்காட்டிலும் எருவிடுதல் நன்று என்பதையும், உழுது எருவிட்ட பிறகு களை கட்டலும், நீர் பாய்ச்சுதலும், பயிரைப் பட்டிமாடு முதலியவற்றினின்று பாதுகாத்தலும் சிறந்த பயனைத் தரக்கூடியவை என்பதையும் இக்குறள் உணர்த்துகிறது. பயிரைப் பாதுகாத்தால், அது கதிர் விட்டு விளையும். தானிய மணிகள் நன்கு முற்றிய பிறகு அறுவடை செய்து, கட்டுகள் கட்டிக் களத்திற்கொண்டு சேர்க்கவேண்டும். அங்குப் பயிரை அரியரியாக எடுத்துத் தரையின் மீது அடித்துத் தானியத்தைப் பிரிக்க வேண்டும். தாளில் எஞ்சி நின்ற தானியத்தைப் பிணையடித்துப் பிரிப்பது வழக்கம். தானியம் பிரிக்கப்பட்ட பிறகு, அதை வெயிலில் உலர்த்த வேண்டும். பிறகு தூற்றிப் பதர்களை நீக்க வேண்டும். ஆனால், விதைக்கென ஒதுக்கப்படும் தானியம் சிறிதும் ஈரமில்லாதிருக்கும்படி உலர வேண்டும். இதுவரை பயிரிடும் முறைகளைப்பற்றிக் கூறப்பட்டது.

6. இனி நமது நாட்டுப் பயிர்த்தொழிலும், பயிரிடும் முறையும் முன்னேறுதற்கான செயல்களைப்பற்றிக் கவனிப்போம்: இந்தியாவில் ஓர் ஏக்கரில் 1000 பவுண்டு எடை நெல்லுக்குமேல் உற்பத்தியாவதில்லை. ஆனால், ஜப்பானில் இரு மடங்கும், இத்தாலியில் ஐந்து மடங்கும் உற்பத்தியாகின்றன. இங்ஙனமே இந்தியாவில் கோதுமை ஓர் ஏக்கருக்கு 750 பவுண்டுக்குமேல் விளைவதில்லை; ஆனால் இங்கிலாந்தில் 2000 பவுண்டுக்குமேல் விளைகிறது. இக்குறிப்புக்களால் நம் நாட்டுப் பயிர்த்தொழில் மிகவும் முன்னேற்றமடைய வேண்டுமென்பதை அறிகிறோம். முன்னேற்றத்துக்கு இடர்ப்பாடுகள் எத்தனையோ உண்டு. ஆயினும், ஒரு சில சீர்திருத்தங்களை மேற்கொண்டாற்கூட நம் நாட்டுப் பயிர்த்தொழில் முன்னேற்றமடைவது திண்ணம்.

7. இந்தியாவில் எலிகளாலும் பூச்சிகளாலும் சேதமடையும் பயிரின் வருஷ மதிப்பு 13 கோடி பவுன் என்பது

மதிப்பிடப்பட்டுள்ளது. நெல் சரியான முறையில் சேமித்து வைக்கப்படாமையால், நூற்றுக்கு ஐந்து வீதம் சேதமாகிறதாம். ஆகவே, இந்த இரண்டு விஷயங்களில் கவனத்தைச் செலுத்துவதனாலேயே நம் நாட்டுக்கு எவ்வளவு இலாபம் ஏற்படுகிறது என்பதைக் கவனியுங்கள்.

8. நம் நாட்டில் இயற்கை எருவைச் சரியாகச் சேமித்து வைப்பதில்லை. சாணியை வரட்டியாகத் தட்டி விற்றுவிடுகின்றார்கள்; அல்லது எரித்துவிடுகிறார்கள். தழை எருவை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. இவற்றைச் சரியான முறையில் மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும். அன்றியும், செயற்கை எரு வகைகளில் நிலத்துக்குத் தக்கதை அறிஞர்களின் ஆலோசனையைக் கேட்டு உபயோகிக்க வேண்டும்.

9. விதைகளை உபயோகிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். நன்றாக முற்றிய விதையைத் தேர்ந்தெடுத்து வெயிலில் உலரவைத்து, உபயோகிக்க வேண்டும். நல்ல விதை கிடையாவிட்டால், விவசாயப் பண்ணைகளில் விற்கப்படும் விதைகளை வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

10. பண்டு முதல் பழக்கத்தில் இருந்து வரும் உழவுக் கருவிகளே சாலச் சிறந்தவை என்று எண்ணுவது தவறு. புதுக் கருவிகளை உபயோகிக்க வேண்டும். '**அகல உழுவதைக் காட்டிலும் ஆழ உழுவதே நல்லது,**' என்பது பழமொழி. ஆதலால், புதுமாதிரிக் கலப்பையை உபயோகிப்பதால் ஆழ உழுவது சாத்தியமாகும்.

11. நீர்ப்பாசன வசதியும் மிக முக்கியமானது. மழை நீரையே நம்பி இருத்தல் கூடாது. கிணறுகளைத் தோண்ட வேண்டும். குழாய்க்கிணறுகளை அமைக்கவேண்டும். கிணற்று நீரை இறைப்பதிலும் சில நல்ல முறைகளைக் கையாள வேண்டும். மாடுகளை முன்னுக்கும் பின்னுக்குமாக ஓட்டித் துன்புறுத்தும் கபிலை ஏற்றம் நீக்கப்பட வேண்டும். சுற்றும் கபிலையே சாலச் சிறந்தது. கிணற்றுப்பாசனம் உள்ள நிலங்களை வேலியால் பாதுகாத்து, கறிகாய், பூ, பழம் முதலிய பல பொருள்களைப் பயிர் செய்யலாம். வெறுந்தானியங்களை

மட்டும் பயிரிடுவது அவ்வளவு சிறப்புடையதன்று. காய்கறி-களையும், பழ மரங்களையும் உற்பத்தி செய்ய வேண்டுவது அவசியமாகும்.

12. நம் நாட்டுப் பயிர்த்தொழில் முன்னேற்றமடைய இன்னும் எத்தனையோ முறைகளைக் கையாளலாம். ஆயினும், இதுவரையில் கூறப்பட்ட முறைகளை ஒவ்வொரு விவசாயியும் மேற்கொண்டால், உணவுப் பஞ்சம் என்பது இந்தியாவை விட்டு நிரந்தரமாக ஓட்டமெடுப்பது நிச்சயம்.

பயிற்சி :

1. விடை எழுதுக :

அ. நமது நாட்டை விவசாய நாடு என்று கூறக் காரணங்-கள் யாவை?

ஆ. பண்டு முதல் இன்றளவும் நம் நாட்டில் பயிர்த் தொழிலே முக்கியத் தொழிலாய் இருக்கக் காரணம் யாது?

இ. பயிர்த்தொழிலே சிறந்த தொழில் என்பதற்குக் கூறப்-படும் காரணங்கள் யாவை?

ஈ. உன் பாடத்திலிருந்து பயிர்த்தொழில் சம்பந்தமான குறள் வெண்பாக்கள் இரண்டும், பழமொழிகள் இரண்-டும் எழுதுக.

உ. நம் நாட்டில் பயிர்த்தொழில் இழி நிலையில் இருக்கக் காரணம் யாது?

ஊ. நம் நாட்டில் பயிர்த்தொழில் முன்னேற்றமடைவதற்கு மேற்கொள்ளத்தக்க சில முறைகளைக் கூறுக.

2. இரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக எழுதுக :

இந்தியா விவசாய நாடு.

இதில் ஆறு லட்சம் கிராமங்கள் உள்ளன.

3. கேள்விகளாக மாற்றுக :

அ. நம் நாட்டவர் வேறு தொழில்களை அறிந்துவைக்க-வில்லை.

ஆ. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

4. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :

இழிநிலை, கொள்கை, சாலச்சிறந்தது, முதுமொழி, சீர்குலைய, போதிய, இன்றியமையாத, உயர்வு.

5. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

ஒப்புயர்வு, சீர், தலைக்கடை, இழிநிலை, எய்தி, சால, சீர்குலைய, வித்து, சேடை, களைகட்டல், அரி, பண்ணை.

15. இசையால் நேர்ந்த இன்னல்

1. அச்சுதபுரம் என்பது தமிழ் நாட்டில் உள்ள பேரூர்களுள் ஒன்று. அதன் அண்மையில் உயர்ந்து தழைத்த மரங்கள் நிறைந்த ஒரு பொழில் உண்டு. அதனுட்சென்றால் ஓர் ஆசிரமத்தைக் காணலாம். அது மிகப்பரந்தது; மண் சுவர் எழுப்பிக் கட்டப்பட்டது; அதன் கூரை, பனையோலையால் வேயப்பட்டது. அது ஒரு பாடசாலை; அதைச் சூழ்ந்து பல குடிசைகள் காட்சியளித்தன. அவற்றுள் ஒன்று, சற்றுப் பெரியது. அதில் ஆசிரியரும் அவர் மனைவியாரும் வசித்தனர். மற்றக் குடிசைகள் மாணவர் வாழும் விடுதிகள். அச்சுதபுரத்துச் சிறுவர் அனைவரும் அங்குத் தங்கி, ஆசிரியர்க்குப் பல தொண்டுகளைப் புரிந்துகொண்டு, கல்வி கற்று வந்தனர். இதுவே பண்டைக் கல்வி முறை. அக்காலத்தில் **குருகுல வாசம்** என வழங்கியது இதுவே.

2. அச்சுதபுரத்துக் குருகுலத்தின் தலைவர் **அன்பானந்தர்** என்னும் கணக்காயர். அக்காலத்தில் ஆசிரியர், கணக்காயர் என்றே வழங்கப்பட்டார். அன்பானந்தர் **இயல், இசை, நாடகம்** என்னும் முத்தமிழிலும் வல்லவர். ஆசிரியர்க்கிருக்கவேண்டிய குணங்கள் அனைத்தும் அவரிடம் நிரம்பி இருந்தன; ஆனால், ஒரு துர்க்குணம் மட்டும் குடிகொண்டிருந்தது; கட்டுப்பாட்டை மிதமிஞ்சி வற்புறுத்தியதே அத்துர்க்குணம்.

3. தம் மாணவர்கள் குருகுலத்தை விட்டு வெளியேறும் போது, சிறந்த கவிஞர்களாய்த் திகழ வேண்டும் என்பது அவரது ஆவல். அதற்குத் தக்க வாய்ப்பு அளிப்பதற்காகத் தம் மாணவர்கள் தம்மிடம் தெரிவிக்க விரும்பும் செய்திகளைப் பாட்டாக இசையுடன் கூறவேண்டும் என்பது அவர் கட்டளை. "பாட்டென்பது இசையுடையது. பாட்டை இசையுடன் படிக்கவேண்டும். அல்லாவிடில், அது பாட்டாகமாட்டாது," என்று அவர் அடிக்கடி தம் மாணவர்க்குக் கூறுவார்; அன்றியும், இசையோடு பாட்டைப் பாடாதவரைக் கடுமையாகவும் தண்டிப்பார்.

4. இக்காரணத்தால் அக்குருகுலத்தில் இருந்த மாணவர் அனைவரும் குருவினிடம் தம் விருப்பங்களையும், செய்திகளையும் பாட்டுக்களின் மூலம் இன்னிசையோடு தெரிவித்து வந்தனர். இம்முறையில்,

" மும்மல மறுத்த மூர்த்தியே, வணக்கம் !
நம்முடைப் பசுவை நலமுடன் கொண்டு
சென்றதை மேய்த்துத் திரும்பிட யானும்
இன்றுநம் மானையை எதிர்பார்க் கின்றேன்,"

என்று பாட்டிசைத்துப் பசுவைக் கொண்டுபோய் மேய்த்து வர உத்தரவு கேட்பான் ஒரு மாணவன். ஆசிரியர் ஆனந்தமடைவார்.

" கோதறு குணங்கள் மிக்க குருநாத ! போற்றி ; இன்று
ஆதர வுடனே யென்றன் அன்னையா ரேனைய ழைத்துத்
தாதறு வனத்துக்கேகித் தர்ப்பையும் விறகும் கொண்டு
போதுடன் வரப் பணித்தார் போய்வரு கின்றே னையா !"

என்று இசையோடு பாட்டைக்கூறி, காட்டுக்குச்சென்று தர்ப்பையும் விறகும் கொண்டு வரும்படி குருபத்தினியார் தனக்கு இட்ட ஆணையைக் கூறி விடை கொண்டு செல்வான் ஒரு மாணவன்.

5. இங்ஙனம் பாட்டும் இசையும் பேச்சுக்களில் நிரம்ப இடங்கொள்ளலாயின அச்சுதபுரத்துக் குருகுலத்தில். இதைக் கண்டு கணக்காயர் அன்பானந்தர் மகிழ்ச்சியுற்றிருந்தார்.

6. சிற்சில சமயங்களில் ஆசிரியர் சுற்றுப்புறங்களிலிருந்த கிராமங்களுக்குச் சென்று, தம் குருகுலத்துக்கு அவசியமான பொருள்களைக் கிராமத்தவரிடமிருந்து பெற்று வருவார். அப்போது அவர் தம்மிடமிருந்த ஒரு குதிரையின்மீது ஏறிச் செல்வார். அக்குதிரையை அவர் அன்புடன் வளர்த்துவந்தார். அது எப்போதும் ஒரு கொட்டகையில் கட்டப்பட்டிருக்கும்.

7. ஒரு நாள் அன்பானந்தரும் சீடர்களும் அண்மையில் இருந்த அடவிக்குச் சென்றார்கள். ஒரு மாணவன் மட்டும் பள்ளியிலிருந்தான். அத்தருணம் தற்செயலாகக் குதிரைக் கொட்டகையில் தீப்பிடித்துக் கொண்டது. தனிமையாய் இருந்தபடியால், ஒன்றும் செய்ய இயலாத அம்மாணவன், குருவும் சீடர்களும் சென்றிருந்த அடவி நோக்கி ஓடினான் ;

ஓடும்போதே ஆசிரியரிடம் தான் சொல்ல வேண்டிய செய்தி அமையும்படி ஒரு பாட்டை இயற்றி அதை மோகன ராகத்திற் பாடி ஆசிரியரை மகிழச்செய்ய வேண்டுமென்று முடிவு செய்து கொண்டே போனான்.

8. ஆசிரியரை அணுகினான். வியர்வை சொட்ட, மூச்சுத் திணற அவன் தம் முன் நின்றதைக்கண்ட ஆசிரியர் மனத்துள் பல ஐயங்கள் எழுந்தன. ''அப்பனே, இத்துணை விரைவாக நீ வந்த காரணம் என்ன ?'' என்றார் அவர். மாணவன் தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு, பாடத் தொடங்கினான்:

" மாசறுகுணத்தாய் போற்றி! மாதவத்தலைவா போற்றி !"

என்று கூறி இராகத்தைச் சிறிது விஸ்தரிக்கத் தொடங்கினான். குருநாதர் இடை மறித்து, ''அடே! இராகம் பாடியது போதும்! எங்களைத் தேடி ஓடி வந்ததற்குக் காரணத்தைக் கூறு!'' என்று அதட்டினார். மாணவன் உடனே இரண்டாம் அடியைப் பாடத் தொடங்கினான் :

" வீசுநல் மூச்சு வாங்க வியர்வைமேன் மேலும் சிந்த "

''சரி, போதும்! மூச்சு வாங்குவதும், வியர்வை சிந்துவதும் தெரிகின்றன. ஆசிரமத்தில் என்ன நேர்ந்தது? எம் பத்தினிக்குத் திடீரென நோய் ஏதேனும் கண்டுவிட்டதா ? குழந்தைகட்கு ஏதேனும் துன்பம் நேர்ந்ததா? சொல் சீக்கிரம்!'' என்றார் குருநாதர். மாணவன் பாட்டையும் இசையையும் விட்டுவிடுவானா! அவன் மேலும் பாடத் தொடங்கினான் :

" நேசம தோடும் ஓடி நான்வந்த நிலையே தேன்றல்,"

இதற்குள் குரு பொறுமையை இழந்துவிட்டார். ''உன் பாட்டும் இசையும் நாசமாய்ப் போக! நீ பாடியது போதுமடா ; செய்தி இன்னதென்று கூறுகிறாயா, உன்னை நையப்புடைக்கட்டுமா ?'' என்று கூறி, கையிலிருந்த பிரம்பை ஓங்கினார். உடனே மாணவன் நடுக்கத்துடனே,

" தேசுறு குதிரை லாயம் தீப்பற்றிக் கொண்ட தையா !"

என்று கூறி முடித்தான்.

9. இதைக் கேட்டவுடனே எல்லாரும் ஆசிரமத்தை நோக்கி ஓடினர். ஓடி என்ன பயன்? அவர்கள் போய்ச் சேர்வதற்குள் குதிரை லாயம் முற்றிலும் நெருப்புக்கு இரையாயிற்று. அதனுள்ளிருந்த குதிரையும் தீயில் வெந்து மடிந்து-

விட்டது. பார்த்தார் குருநாதர். என்ன செய்வார் பாவம்! தமது விவேகமற்ற கட்டுப்பாட்டால் விளைந்த துன்பத்துக்கு யாரைக் குறை கூறுவது! துக்கக்கடலில் ஆழ்ந்தார்.

10. மறுநாள் அதிகாலையில் மாணவர் அனைவரையும் அழைத்தார்; ''மாணவர்களே, என் மடமையால் எனது அரிய குதிரையை இழந்தேன்! இனி, நீங்கள் பாட்டின் மூலம் எதையும் தெரிவிக்கக் கூடாது. தெரிகின்றதா? உரை நடை மூலமே உரையாடல் வேண்டும். இது எனது கண்டிப்பான உத்தரவு. இதை மீறுபவர் கடுமையான தண்டனைக்குள்ளாவர்,'' என்று கூறி, அவர்களைத் தத்தம் வேலைகளைக் கவனிக்குமாறு அனுப்பினர்.

பயிற்சி:

1. விடை எழுதுக:

அ. 'குருகுலம்' என்பது என்ன?
ஆ. அச்சுதபுரத்துக் குருகுலத்துக் கணக்காயர் யார்?
இ. அவருடைய குணநலங்கள் யாவை?
ஈ. அவரிடம் காணப்பட்ட குறை யாது?
உ. அவர் தம் மாணவர்கட்கு விதித்திருந்த கட்டளை யாது?
ஊ. அக்கட்டளையால் நேர்ந்த துன்பம் யாது?
எ. இக்கதையால் நாம் அறியும் நீதி யாது?
ஏ. முத்தமிழ் யாவை?

2. கீழ் வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துச் சொற்களை நீக்கிவிட்டுப் பொருள் மாறுபடாமல் வேறு சொற்களை அமைத்து எழுதுக:

அ. அதன் அண்மையில் உயர்ந்து தழைத்த மரங்கள் நிறைந்த பொழில் ஒன்று இருந்தது.
ஆ. மற்றக் குடிசைகள் மாணவர் வாழும் விடுதிகள்.

3. சொல்லியுள்ளபடி செய்க:

அ. அச்சுதபுரத்துக் குருகுலத்தின் தலைவர் அன்பானந்தர் என்னும் கணக்காயர். (வாக்கியத்தை 'அன்பானந்தர்' என்னும் சொல்லைக்கொண்டு தொடங்கு.)
ஆ. அப்பாட்டுக்களை இசையுடன் வெளியிட வேண்டும். ('அப்பாட்டுக்கள்' என்று தொடங்கு.)

4. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக:

அண்மை, ஆசிரமம், விடுதிகள், குருகுலம், வாய்ப்பு, இயற்றி, இசைத்து, தர்ப்பை, திணற, இடை மறித்து.

16. எங்கள் செஞ்சிச் செலவு

1. 1948-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் கடைசி வாரத்தில் ஒரு நாள் எங்கள் தலைமை ஆசிரியரிடமிருந்து ஒரு சுற்றறிக்கை வந்தது. அதில் பள்ளியிலுள்ள எல்லா மாணவரும் அன்று மாலை 4 மணிக்குப் பிரார்த்தனை மண்டபத்தில் கூட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எங்களுக்குக் காரணம் புலப்படவில்லை. நாங்கள் என்னென்னவோ காரணங்களைக் கற்பித்துக்கொண்டே குறித்த இடத்தில், குறித்த நேரத்தில் கூடினோம். தலைமையாசிரியர் வந்தார்; "மாணவர்களே, உங்கள் மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தி: பிப்பிரவரி மாதம் 10-ஆம் நாள் உங்களைத் **தென்னார்க்காட்டு ஜில்லாவில்** உள்ள **தேஜ்சிங்கு** மன்னன் செங்கோல் செலுத்திய **செஞ்சிக்கோட்டைக்கு** அழைத்துச் செல்லப்போகிறேன்; அங்கு மூன்று நாட்கள் தங்க முடிவு செய்துள்ளேன். அதற்கு ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய கட்டணம் எட்டு ரூபாய். அப்பிரயாணத்திற் கலந்துகொள்ள விரும்புபவர் இந்தத் தாளில் பெற்றோர் அல்லது போஷகர் கையொப்பம் பெற்று, இதனோடு எட்டு ரூபாயும் சேர்த்துப் பள்ளிக் கணக்கரிடம் பிப்பிரவரி மாதம் 5-ஆந் தேதிக்குள் செலுத்திவிட வேண்டும்," என்று கூறி, ஒவ்வொருவருக்கும் ஓர் அனுமதித்தாளை வழங்கினார். அது கேட்ட எங்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

2. பிப்பிரவரித் திங்கள் 6-ஆம் நாள் மாலை செஞ்சிக்குச் செல்லப் பணம் செலுத்தியிருந்த அனைவரும் கூட்டப்பட்டோம். தலைமை ஆசிரியர், "மாணவர்களே, நான் கூறுவதைக் கவனமாய்க் கேளுங்கள்: சென்னையிலிருந்து செஞ்சிக்கு 92 மைல் தூரம் இருக்கிறது. இதில் எழுபத்தைந்து மைல் புகைவண்டியிலும், பதினேழு மைல் மோட்டார் பஸ்ஸிலும் செல்லவேண்டும். ஆதலால், பெட்டி, படுக்கை முதலிய கனத்த பொருள்களை எவரும் கொண்டுவரக் கூடாது; அவசியமான ஆடைகளை ஒரு பையில் போட்டு எடுத்து வருதல் வேண்டும். பையில் ஒரு துப்பட்டி இருத்தல் நலம். அதைக் கீழே விரித்து, பையைத் தலையணியாக உபயோகித்துக் கொள்ள வேண்டும். இப்போதே வெயில் கடுமையாய் இருப்பதால், தலைக்குத் தொப்பியும், காலுக்குச் செருப்பும்

அவசியம். ஒவ்வொருவரும் தண்ணீர் வைத்துக்கொள்ளக் கண்ணாடிச் சீசா ஒன்று கட்டாயமாகக் கொண்டுவர வேண்டும். இது மறக்கத் தக்கதன்று. 'டார்ச்சு' விளக்கு அவசியம் வேண்டும். புகைப்படம் எடுக்கும் கருவி இருந்தால், கொண்டு வருவது நலம். கருப்பு மூக்குக் கண்ணாடியும் உதவியாக இருக்கும். இப்பொருள்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, 10-ஆந் தேதிக் காலை 6-30 மணிக்கு எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்தில் இருக்க வேண்டும்,'' என்று கூறி முடித்தார்.

3. உடனே உடற்பயிற்சியாசிரியர் வந்து மாணவர் நூற்றுவரையும் பத்துப்பேர் அடங்கிய பத்துக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவனை ஏற்படுத்தினார். குழுவினர் தலைவனுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்றும், தலைவனே குழுவின் அமைதிக்கும், ஒழுங்குக்கும் பொறுப்புடையவன் என்றும் கூறிச் சென்றார்.

4. பிப்பிரவரித் திங்கள் 10-ஆம் நாள் காலை 6-30 மணிக்கு எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்தில் நூற்றுவர் மாணவரும், பதின்மர் ஆசிரியரும் வந்து கூடினோம்; குழுவாரியாக நின்று கணக்கெடுத்து முடித்தோம். வண்டி மேடையினருகே வந்து நின்றதும் அனுமன் இலங்கைக்குத் தாவினாற்போலத் தாவிக்குதித்து ஒரு பெட்டியைப் பிடித்துக்கொண்டோம். பிறகு சொல்ல வேண்டுமா! எங்கள் ஆனந்தத்துக்கு அளவேது! ஒரே சந்தை இரைச்சல்தான்! வண்டி நகரத்தொடங்கியது. கூச்சல் அடங்கியது; இன்னிசை தொடங்கியது; ஆசிரியருள் சிலரும், கச்சேரியில் கலந்து கொண்டனர். புகைவண்டி எங்கெங்கு நின்றதோ, அங்கங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டித் தட்டுகளும், சோடாப் புட்டிகளும் காலியாயின.

5. முற்பகல் 11 மணிக்குத் திண்டிவனம் புகைவண்டி நிலையத்தை அடைந்து, அங்கு எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்த 'இலட்சுமி விலாஸ்' மோட்டார் பஸ்ஸுகளில் ஏறிக்கொண்டு செஞ்சியை அடைந்தோம். அங்குள்ள போர்டு உயர்நிலைப்பள்ளியில் நாங்கள் தங்கினோம். நாங்கள் புறப்படுவதற்கு முன் தினமே அங்குச் சென்றிருந்த ஆசிரியர் இருவர் போர்டு பள்ளியின் தலைமையாசிரியர் உதவியால் நல்ல

சமையற்காரர்களை அமர்த்தி அரிய உண்டி தயாரித்து வைத்திருந்தனர். அதை உண்டபின் சிறிது இளைப்பாறினோம். சரியாக மூன்று மணிக்குப் புறப்பட்டு **இராணி மலை** என வழங்கும் **கிருஷ்ணகிரி**க்குச் சென்றோம்.

6. போகும்போதே செஞ்சிக்கோட்டையின் அமைப்பு எங்களுக்கு நன்கு தெரிந்தது. அது சங்கராபரணி யாற்றின் மேற்புறம் இருக்கிறது. மூன்று சிறு குன்றுகளை அகன்றுயர்ந்த சுவர்களால் இணைத்து அமைக்கப்பட்டுள்ளது அக்கோட்டை. கோட்டையின் உட்பரப்புச் சற்றேறத் தாழ இரண்டு சதுர மைல் இருக்கலாம். அக்கோட்டைக்கு இரண்டு வாயில்கள் உள்ளன; ஒன்று வடமேற்கிலும், மற்றொன்று தென்கிழக்கிலும் உள்ளன; வடமேற்கில் இருப்பதற்கு **ஆர்க்காட்டு வாயில்** என்பது பெயர். தென்கிழக்கில் உள்ளது **புதுச்சேரி வாயில்**. மூன்று குன்றுகள் அக்கோட்டைக்கு அரண் செய்கின்றன என்று கூறப்பட்டதல்லவா? அவற்றுள் வடக்கில் இருப்பதுதான் இராணி மலை. தென்மேற்கில் **இராசகிரி**யும், தெற்கில் **சந்திராயன் துர்க்கமு**ம் உள்ளன.

7. இராணி மலையின் மீது ஏறிச் செல்லக் கோட்டைச் சுவரோடு இணைந்த படிகள் அமைக்கப்பெற்றுள்ளன. இவற்றின்மீது ஏறிச் சென்றால், குன்றின் உச்சியில் செங்கற்களாலான சிறந்த மண்டபம் காணப்படுகிறது. அது செஞ்சியை ஆண்ட தேஜ்சிங்கு மன்னரின் கொலு மண்டபம் என்று கூறப்படுகிறது. அங்குப் பல புகைப்படங்களை எடுத்தோம். அங்கு இரண்டு களஞ்சியங்கள் உள்ளன. அவை மிகப் பெரியவை. அவற்றின் உச்சிக்குச் செல்லக் குறுகிய படிகள் உள்ளன. மேலே சென்றால், அங்கு வீசும் காற்று நம்மை அடித்துக்கொண்டு போய்விடும் போல இருக்கிறது. இவற்றைத் தவிர, அங்கு ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அதற்கு **அரங்கநாதர் ஆலயம்** என்பது பெயர். ஆனால், அதனுள் விக்கிரகம் இல்லை. அங்குச் சில நீர்ச்சுனைகள் இருக்கின்றன. நாங்கள் சென்றபோது அவற்றுள் ஒன்றில் மட்டுமே நீர் இருந்தது. அது பனிக்கட்டிபோலச் சில்லென்றிருந்தது. மிகுந்த தாகத்தோடிருந்த நாங்கள், அந்த நீரை அரைமணி

நேரம் கொள்ளை கொண்டோம். மலையை விட்டு இறங்கி எங்கள் விடுதிக்கு மாலை ஆறு மணிக்கு அடைந்து தேநீர் பருகினேம். பிறகு இரவு எட்டு மணிக்குச் சாப்பிட அழைக்கப்படும் வரை எங்கள் விருப்பம் போலப் பேசியும், ஆடியும், பாடியும், ஓடியும் நேரத்தைக் கழித்தோம்.

8. மறுநாள் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டோம். ஒவ்வொருவருக்கும் உப்புமாவும், வடையும் தரப்பட்டன. வேண்டிய அளவு காப்பியும் வழங்கப்பட்டது. சீசாக்களில் நீர் நிரப்பிக்கொள்ளுமாறு தலைமையாசிரியர் கூறினர். சரியாக ஏழு மணிக்கு எங்கள் உடற்பயிற்சி ஆசிரியர் தம் ஊது குழலால் எச்சரிக்கை அளித்தார். உடனே குழுத் தலைவர்கள் தங்கள் குழுவினரை ஒழுங்காக நிறுத்தினர்கள். பத்துக் குழுவினரும் இரண்டு வரிசையாய்த் தலைமையாசிரியரைத் தொடர்ந்து சென்றேம். எங்களுக்குப் பின்னே மற்ற ஆசிரியர் வந்தனர். நாங்கள் படைவீரர்களைப் போல அணி வகுத்துச் சென்றதைக்கண்ட அந்தக் கிராம மக்கள் பெரிதும் வியப்படைந்தார்கள். அது கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம்!

9. ஏழரை மணிக்குப் புதுச்சேரி வாயிலின் மூலம் கோட்டைக்குள் நுழைந்தோம். அந்த வாயிலின் அமைப்பை என்னென்று கூறுவது! அது நேரே இல்லாமல் வளைந்து வளைந்து இருக்கிறது. உள்ளே சென்றல், அங்கு மற்ெருரு கோட்டை காணப்படுகிறது. அது இராசகிரிக்கு மட்டும் அரண் செய்கிறது. அதற்குக் **கீழ்க்கோட்டை** என்பது பெயர். அதனுள் சென்று இராசகிரியின் அடிவாரத்தைஅடைந்தோம். அங்கிருந்து மலையின்மீது போகப் பத்து வாயில்கள் உள்ளன. அவற்றைக் கடந்து சென்றல், மலையின் தென்பாரிசத்தில் ஒரு சிறு பரப்பிடம் இருக்கிறது. அங்கு அக்கோட்டைக்குக் காவல் தெய்வமாகிய **கமலக்கன்னி கோவி**லிருக்கிறது. அதையடுத்து ஒரு சிறு கோவில் அழகிய வேலைப்பாடுடன் காணப்படுகிறது. ஆனல், உள்ளே விக்கிரகமில்லை. அங்கு ஒரு குளமும் சில பாழடைந்த மண்டபங்களும் உள்ளன. அங்கு மலையின் பிதுக்கங்களில் காணப்பட்ட பல தேன் கூடுகள் எங்களுக்கு

ஆச்சரியத்தை விளைத்தன. ஏன்! அவற்றுள் ஒவ்வொன்றும் ஒரு வண்டிச் சக்கரம் அளவு இருந்தது.

10. அவற்றைப் பார்த்துக்கொண்டே சென்றால், மலையின் உச்சியை அடையும் படிகள் ஆரம்பிக்கின்றன; அவை நன்கு செப்பனிடப்பட்டில்லை. அவற்றில் ஏறிச் செல்வது சற்றுத் துன்பமாகவே இருக்கிறது. ஆயினும், எங்கள் மன வேகம் அதைப் பொருட்படுத்தவில்லை. அப்படிகள் செல்லும் மார்க்கத்தில் ஒரு சுனை இருக்கிறது. அங்கு நாங்கள் செல்லும்போது மணி பத்து. ஆனல், அதற்குள் எங்கள் வசமிருந்த சீசாக்களில் ஒரு துளி நீரும் இல்லை. அந்த சுனையைக் கண்டவுடனே தொண்டை வறண்டிருந்த நாங்கள் மனமார நீரைப் பருகினேம்; சீசாக்களிலும் நிரப்பிக்கொண்டோம். மலையேற்றம் தொடங்கப் பெற்றது.

11. நாங்கள் ஏறிச்சென்ற படிகள் குன்றின் உச்சியில் உள்ள ஒரு பிளவில் முடிகிறது. இருபதடி அகலமுள்ள அப்பிளவைக் கடந்து இராசகிரியை அடைய மரப்பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன்மீது செல்லும்போது கீழே பார்த்தால், தலை சுற்ற ஆரம்பிக்கிறது. இராசகிரியின் உச்சி சற்றுச் சமமாய் இருக்கிறது. அங்குப் பல சின்னங்கள் காட்சி அளிக்கின்றன. அவற்றுள் முதன்மையானது **சங்கீத மகால்**. அதனுட்சென்று பேசினல், ஒலிபெருக்கியிற் பேசுவதுபோலக் கேட்கிறது. அங்குள்ள எதிர் ஒலி அமைப்புப் புகழுக்குரியது. இராசகிரியில் உள்ள அரங்கர் ஆலயத்திலும் விக்கிரகமில்லை. மணிக்கூண்டு ஒன்றும், கொடி ஸ்தம்பம் ஒன்றும் காட்சியளிக்கின்றன. ஒரு புறத்தில் தேஜ்சிங்கின் நிலவரை அமைந்த நிதிச்சாலையும், மற்றோரிடத்தில் ஒரு பெரிய பீரங்கியும், பிறிதோரிடத்தில் ஒரு நீர்ச்சுனையும் உள்ளன. அந்தச் சுனையின் நீரையும் நாங்கள் விடவில்லை.

12. இவையனைத்தையும் மட்டற்ற மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டும், எங்கள் மனத்தையுங் கண்ணையுங் கவர்ந்த காட்சிகளைப் புகைப்படம் பிடித்துக்கொண்டும்



இராசகிரியை விட்டுக் கீழே வந்தோம். அங்குத் தேஜ்சிங்கு மன்னரின் சிலம்பக் கூடத்தையும், அரசியார் வசித்த கலி-யாண மகாலேயும் தேஜ்-சிங்கின் மனேவி தீக்-குளித்த இடத்தையும், போர் வீரர்களின் விடுதிகளேயும், மற்றும் பல சின்னங்களேயும் கண்டு களித்துக் கொண்டே விடுதியை அடைந்தோம்.

13. பகல் உண்டிக்-குப் பிறகு சிறிது இளைப்பாறினேம். பின்னர்ப் புறப்பட்டு, தேஜ்சிங்கு மன்னர் பூசித்து வந்த அரங்கநாதர் ஆலயத்தைக் காணச் சென்றேம். அது செஞ்சியிலிருந்து மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. அதற்குச் செல்லும் வழியில் கிருஷ்ணகிரியின் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ள ஜைனச் சிற்பங்களேக் கண்டு களித்தோம். முகத்தை முன்புறம் காட்டாமல் மறுபுறம் திருப்பிக்கொண்டிருக்கும் அரங்க-நாதரைத் தரிசித்துவிட்டு விடுதிக்கு வந்தோம். சாப்பாட்டை முடித்துக்கொண்டு அயர்ந்து தூங்கினேம். விடியற்காலேயில் மோட்டார் பஸ்ஸில் ஏறித் திண்டிவனம் வந்து, சிற்றுண்டியை முடித்துக்கொண்டு புகைவண்டி ஏறிச் சென்னேயை அடைந்-தோம். செஞ்சிக்குச் சென்று பல மாதங்கள் கழிந்துவிட்டன. ஆனுல், செஞ்சிக் காட்சிகளே இன்றும் நான் என் மனக்-கண்ணுற் கண்டு மகிழ்கின்றேன் !

பயிற்சி :

1. விடை எழுதுக :—

அ. செஞ்சி எங்குள்ளது?

ஆ. செஞ்சிக்குச் சென்றோர் கொண்டுசென்ற பொருள்கள் யாவை? எதற்கு?

இ. செஞ்சியை ஆண்ட அரசர் யார்?

ஈ. 'இராணி மலை' என்பது எதற்குப் பெயர்? அங்குக் காணப்படும் சிறந்த சின்னங்கள் யாவை?

உ. இராசகிரியின்மீது காணப்படும் சின்னங்கள் யாவை?

ஊ. 'கலியாண மகால்' என்பது யாது? அது எங்குள்ளது?

எ. உட்கோட்டையில் உள்ள சின்னங்கள் எவை?

2. எங்கள் தலைமை ஆசிரியர் ஒரு சுற்றறிக்கையை அனுப்பினர். (வாக்கியத்தைச் 'சுற்றறிக்கை' என்னும் சொல்லைக் கொண்டு தொடங்குக.)

3. இதிற் கலந்துகொள்ள விரும்புவோர் இந்தத் தாளில் பெற்றோர் கையொப்பம் பெற்று, அதனோடு எட்டு ரூபாயும் சேர்த்துப் பள்ளிக் கணக்கரிடம் செலுத்த வேண்டும். (மூன்று சிறு வாக்கியங்களாக எழுதுக.)

4. எதிர்ப்பதங்கள் கூறுக :—

கடைசி, சேர்த்து, கூடாது, விரித்து, மகிழ்ச்சி, சிறந்த, கீழ்.

5. இப்புத்தகத்தின் இறுதியில் உள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

திங்கள், செங்கோல், கட்டணம், தாள், நிலையம், சூழ, இரைச்சல், பரப்பு, அரண், களஞ்சியம், விக்கிரகம், சுனை, அணி வகுத்து, வியப்பு.

செய்யுட்பகுதி

1. கடவுள் வணக்கம்

வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும்,
தாழ்த்தச் சென்னியும், தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே? 1

தேவாரம்] [திருநாவுக்கரசர்

"பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே!" என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர்உ ளானே! 2

திவ்வியப்பிரபந்தம்] [தொண்டரடிப்பொடி யாழ்வார்

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தினரட் சகன்பதம் சிந்தித் தேத்துவாம். 3

இரட்சணிய யாத்திரிகம்] [H. A. கிருஷ்ணப்பிள்ளை

ஆதியாய் அநாதி யாகி
அரும்பொருள் அனைத்து மாகிச்
சோதியாய் சொரூப ஞானச்
சுடரொளித் தீப மாகி
நீதியாய்த் திறமை யாகி
நித்தியா னந்த மாகி
மாதிரப் புயமு மான
மகம்மதே! வருகு வீரே! 4

தனிப்பாடல்கள்] [மஸ்தான் சாகிபு

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவர் உயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம் ;

நினைத்ததும் அளிக்கும் ; மனத்தையும் உருக்கும் ;
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையும் எரிக்கும் பொறுப்பையும் இடிக்கும்
நிறைபுகழ் உரைக்கும் செயல்தாராய் ;

தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
தளத்துடன் நடக்கும் கொடுசூரர்

சினத்தையும் உடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா !
தினைக்கிரி குறப்பெண் ணவளொடு களித்தொண்
டிருத்தணி இருக்கும் பெருமாளே !

திருப்புகழ்] [அருணகிரிநாதர்

II. வருணனைப் பகுதி

1. நிலா

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே !—ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே !
ஆம்பல்களி கூறவரும் வெண்ணிலாவே !—உனக்(கு)
அம்புயம்செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே !
வளர்ந்துவ ளர்ந்துவந்த வெண்ணிலாவே !—மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ வெண்ணிலாவே !
பளிங்குபோலும் உன்உருவில் வெண்ணிலாவே !—கறை
பற்றியேஇ ருப்பதேனோ வெண்ணிலாவே !

பூமியின் உருவிழலோ வெண்ணிலாவே !—அது
போகாக்கு றுமுயலோ வெண்ணிலாவே !
குன்றும்கு கைகளுமோ வெண்ணிலாவே !—அன்றிக்
கூனற்கி ழவிதானோ வெண்ணிலாவே !
துன்பம்மிகத் தாமடைந்தும் வெண்ணிலாவே !—பிறர்க்குச்
சுகமளிப்பார் உன்போல்உண்டோ வெண்ணிலாவே !
இருள்தனை விழுங்கவல்ல வெண்ணிலாவே !—உன்னை
இருள்விழுங்கும் சூழ்ச்சிஏதோ வெண்ணிலாவே !

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

2. மழைக் குறி

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே !
நேற்றுமின்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே !—கேணி
நீர்ப்படுஞ்சொ றித்தவளை கூப்பிடுகுதே !
சேற்றுநண்டு சேற்றில்வளை ஏற்றடைக்குதே !—மழை
தேடியொரு கோடிவானம் பாடியாடுதே !
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம்பண்ணைச்—சேரி
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக்கொள்வமே !

—முக்கூடற்பள்ளு

3. கடல்

வாழிய கடலே ! வாழிய கடலே !
உலகினுக் கமைந்த ஒருதுணைக் கருவியே !
அலகிலா உருவம் அடைந்தோய் ! நிலத்தினை
ஆக்கி அன்புடன் காக்கும் பரவாய் !
உன்னை யடுத்துவந் துறுநா வாய்களை
நன்னூர்ச் செலுத்தும் நங்காய் ! நின்னிளங்
காதற் றலைவனும் மோது காற்றினல்
புனல்கார் என்னும் புனிற்றிள மகனல்
உயிர்த் தொகை யோடு பயிர்த்தொகை மகிழத்
தாவா இன்பம் தருந்தனித் தாயே !
ஓவாது ஒல்லென ஒலிக்குங் கடலே !
உன்றன் பெருமையும் உயர்வும் கருணையும்
துன்றுமடி யின்மையும் தூய்மையும் பிறவும்
என்றனு லெடுத்து இயம்பல் இயலுமோ ?

—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

III. கதைச் செய்யுள்

1. தருமரும் அருச்சுனனும்

[சித்திரசேனன் துரியோதனனைக் கட்டி இழுத்துக்கொண்டு செல்லும்போது, அவன் முறையிடுவதைத் தருமர் கேட்டு அவனை விடுவிக்க அருச்சுனனை அனுப்புதல்.]

தருமர்மனம் கொள்ளாமல் தம்பியரைத் தாம்அழைத்தே
''ஆனால் அழகுமன்னா, அருச்சுனா, நீ கேளாய் :
பெரியதந்தை பெற்றெடுத்த புத்திரர் நூற்றுவருள்
திரியோத னன்நம்மைத் தேடியே பார்க்கவந்தான்.
ஆரோ ஒருவன் ஆகாசங் கொண்டுபோனான்,
எவனோ தெரியாது இழுத்துப்போகிறான் அந்தரமாய்.
பார்த்தும் இருந்தோமானால் பாதகம் மெத்தவரும் !
மெத்த வருந்துகிறான் வில்வேந்தன் இப்போது !
நம்மை அழைக்கிறான் 'ரட்சிப்பீர்' என்று சொல்லி !
ஆபத்து வேளையிலே ஆதரித்தல் புண்ணியங்காண் !
கடுக விடுவித்துக் கையோடே கூட்டிவாராய்,''
என்ற உறைகேட்டே ஏதுசொல்வான் வாள்விஜயன் :
''ஊரோ டிருந்தநம்மை உரகதன் தானழைத்துக்
கொல்ல நினைத்தானே குருடன்மகன் சதிகாரன் !
எத்தனை வஞ்சனைகள் இடருகள் செய்தான்காண் !
நாடு பறித்தானே ! இராச்சியத்தைக் கொள்ளைகொண்டான் !
ஐவர்நம்மை விலங்கிட்டே அறையில் அடைத்தானே !
அரண்மனைப் பெண்களையும் அம்பலம் ஏற்றிவைத்தான் !
அண்ணன் பெருந்தேவி ஆடை உரியவைத்தான் !
பார வனவாசம் பரதேசம் ஓட்டிவிட்டான் ;
இந்தப் பரதேசம் இனித்திரியும் என்றானே !
சாமத் துரோகனுக்குத் தயவு நினைப்பாரோ ?
பொல்லாத பாவிக்குப் புண்ணியந் தேடுவாரோ ?
தென்ன முடிவேந்தன் திரியோ தனராசன்
எத்தனைநா ளிருந்தாலும் இடரல்லோ தேடுகிறான் ?
கொல்ல நினைக்கின்றான் கொடும்பாவி திரியோதனன் ;
இன்றே டொழிந்தவனும் எமலோகம் சேர்ந்திருந்து
செத்தாற் பழுதுமில்லை சீரான அண்ணாவே !''
என்ற உரைகேட்டு ஏதுசொல்வார் தருமரவர் ;
''அவரவர் செய்தவினை அவரவரே யனுபவிப்பார் ;

நன்மையைச் செய்தவர்கள் நாட்டரசை யாண்டிடுவார் ;
பொல்லாங்கு செய்தவர்கள் போவார் பெருநரகில் ;
நன்மையைச் செய்தவர்க்கு நட்சத்தி ரங்காணும் ;
தீமையைச் செய்தவர்க்குத் தெரியா திருளாகும் ;
வஞ்சனைகள் வேண்டாவே ; மாயர் துணையாவார் ;
இக்கணமே நீயேகி இட்டுவந்து சேர்த்திடுவாய் ;
என்வார்த்தை தள்ளாதே என்னுடைய தம்பியே நீ !''

—பஞ்சபாண்டவர் வனவாசம்

2. தேசிங்கு பாராசாரிக் குதிரையை அடக்குதல்

கனைத்த குதிரையைக் கண்ணாலே கண்டான் காளை தேசிங்கு
குதிரையைத்தட்டிச் சலாம்வாங்கினான் கொல்லும் சிங்கம்
''அண்ணா வாடா, தம்பி வாடா, மோவுத்துக் காரா நீ ! [போல
கால்கயிற்றைக் கழுத்துக் கயிற்றைக் கடுக அவிழ்'' என்றான் ;
அந்தச் சொல்லைக் காதிலே கேட்டான் மோவுத்துக் காரனும் ;
சொன்னவுடனே சல்தியாய்ப் பாய்ந்து சுருக்காயவிழ்த்தானும்;
தங்கத் தாலே சீனி போட்டுத் தடவியே கொடுத்தானும் ;
அந்தக் குதிரையைக் கண்ணாலே கண்டு அகமு மகிழ்ந்தானும் ;
அரிய ரிபரந் தாமா வென்று அலறி யெழுந்தானும் ;
கோவிந் தாஸ்ரீ கிருஷ்ணா வென்று கும்பிட் டெழுந்தானும் ;
பாரா சாரிக்குச் சலாம் வாங்கிப் பாய்ந் தேறினானும் ;
புலிக் குட்டியைப் போலே பாய்ந்து புரவி ஏறினானும் ;
ஏறின வுடனே பாராசாரி யென்ன செய்யுது பார் ;
தடதட வென்று தவிக்குது பாரு அந்தக் குதிரைதானும் ;
கிடுகிடு வென்று கிளம்பிக் குதித்தது அந்தக் குதிரைதானும் ;
லகானை இழுத்துக் கையிலே பிடித்தான் ராசா தேசிங்கு:

* * * *

''அரிஹரிஸ்ரீ முகுந்தா'' என்று அசுவத்தைத் தட்டிவிட்டான்;
தட்டின தட்டில் குதிரை கிளம்பித் தரையில் நில்லாமல்
ஆகாய மார்க்கம் வந்து பாயுது அந்தமுள்ள குதிரை ;
சூரியன் போலத் துலங்குது பாரு சொர்ணமேனிக் குதிரை ;
கண்கண்ட தூரம் பார்த்து ராசர்கள் கண் கலங்கினார்கள் ;
பாய்கிற குதிரையைக் கண்ணால் கண்டு பரிதவித் தார்கள்.

மேக மண்டலம் அளாவி வருவதைப் பார்த்தான் தேசிங்கு ;
லகானை இழுத்துச் சிமிட்டா கொடுத்தான் ராசா தேசிங்கு ;
சிமிட்டா கொடுத்த வேகத் தாலே சீறிப் பாயுதுபார் ;
கோபம் வந்து மூண்டு கொண்டது ராசாவுக் கானும்
காடு மலைகள் செடிக ளெல்லாம் கலங்கி நடுங்கிடவே,
மலைகள் இடிந்து தவிடு பொடியாய் மண்மேல் விழுந்திடவே,
குன்று மலைகள் தாண்டிக் குதிரை குதித்துப் போகிறது ;
குன்றுகள் எல்லாம் பொடிப் பொடியாய்க் குலுங்கி விழுந்தது பார்.

—தேசிங்குராசன் கதை

3. இறந்த சிங்கத்தை எழுப்பியதால் நேர்ந்த இன்னல்

துளசா புரத்தில் நால்வர்ஒரு
தொடர்பாய்க் கல்வி பயின்றார்கள் ;
வளமார் அவருள் ஒருமூவர்
மந்திரத்தின் மிக்க மையால்,
தளமார் அரசன் தனைக்கண்டு
தங்கள் வித்தைத் திறங்காட்டி
ஒளியார் தனங்கள் மிகஈட்டற்(கு)
உன்னித் தம்முள் கூறுவார் : 1
" இவன்றான் மிக்க கல்வியிலன் ;
எனினும் நம்மோடு இருந்துபடித்
தவனா தலினா லொருபங்கு
தருவோம்," என்றங்(கு) உடனழைத்துப்
புவியாள் அரச னிடைப்போகும்
போதில் அந்த வழியினிலே
சவமாம் சிங்கம் தனைக்கண்டு
தம்மந் திரம்சோ திக்கஎண்ணி 2
" கற்ற வித்தை யாற்செத்த
கண்டீ ரவத்தை யெழுப்புவேன் !
மற்றை யவர்க்குச் சம்மதமோ ?"
என்ன மந்த்ரம் தெரியாதே

உற்ற ஒருவன், "எழுப்பிலது
  கொல்லும்," என்ன உரைத்திடலும்,
பற்றி யவனைத் தள்ள அவன்
  பயந்தோர் மரத்தில் ஏறினன். 3
எழுப்பி னர்பின் பதுகொல்ல
  இறந்தார் அம்மூ வரும்; இதனல்
இழுக்கி லாத கல்வியினும்
  அறிவே பெரிதென் றிசைத்திட்டான். 4

—வீரமார்த்தாண்ட தேவர்

IV. பல்சுவைப் பகுதி

1. வெளி மயக்கம்

ஒளிமுடி யொடும்பி றந்தே
  உலகமாண் டவரும் இல்லை.
எளியராய் ஓடொன் றேந்தி.
  இங்குதித் தவரும் இல்லை,
குளிர்கடல் உடுத்த பாரில்
  குறைந்தவர் மேலோர் என்னல்
வெளிமயக் கன்றிச் சற்றும்
  மெய்யல உணர்வாய் நெஞ்சே!

—மாயூரம் வேதநாயகம் பிள்ளை

2. வெற்றிலை போடுவதன் விளைவு

ஒருவேளை அல்ல திருவேளை
வெற்றிலை போடு!—போடா
தொதுக்கலும் நல்லஏற் பாடு!
சுரந்திட்ட எச்சிலை
  வாயினில் தேக்குதல் போலே—வேறு
தூய்மையில் லாச்செயல்
  கண்டதில் லைவைய மேலே (ஒருவேளை)
கரியாகுமே உதடு! கோவைக்
கனியைநீ காப்பதும் தேவை!
  தெரியாத ஆடவர்
வாய்நிறைய எச்சிலின் சேறு
தேக்கியே திரிவார்கள்
  அவருக்கும் நீஇதைக் கூறு! (ஒருவேளை)

—பாரதி தாசன்

3. குறத்தி குறி சொல்லல்

என்னகுறி யாகிலுநான் சொல்லுவேனம்மே !—சதுர்
ஏறுவேன் எதிர்த்தபேரை வெல்லுவேனம்மே !
மன்னவர்கள் மெச்சுகுற வஞ்சிநானம்மே !—என்றன்
வயிற்றுக்கித் தணேபோதம் கஞ்சிவாரம்மே !
பின்னமின்றிக் கூழெனினுங் கொண்டுவாவம்மே !—வங்
பெரிய குடுக்கைமுட்ட மண்டுவேனம்மே ! [தால்
தின்ன இலை யும்பிளவும் அள்ளித்தாஅம்மே !—கப்பல்
சீனச்சரக் குத்துக்குணி கிள்ளித்தா அம்மே !
தும்மலுங்கா கமும்இடம் சொல்லுதே அம்மே !—சரம்
சூட்சமாகப் பூரணத்தை வெல்லுதே அம்மே !
செம்மையிது நன்னிமித்தம் கண்டுபார்அம்மே !—திரி
கூடமலைத் தெய்வமுனக் குண்டுகாண்அம்மே !

—திரிகூடராசப்ப கவிராயர்

4. ஏற்றப் பாட்டு

பிள்ளையாரே வாரீர் ! பெருமாளே வாரீர் !
பெருமாளே வாரீர் ! சிவனாரே வாரீர் !
சிவனும்பெரு மாளும் சேர்ந்துரதம் ஏற,
குருவும்பெரு மாளும் கூடிரதம் ஏற,
நானும்பெரு மாளும் நடுங்கிப்பணி செய்ய,
ராமாதுணை வாரீர் ; ராகவரே தண்டம் ;
ரட்சிப்பதும் பாரம் இரண்டுடனே வாரீர்.
உலகத்தாயி மாரி—அவள்—சதுரக்கூடைக் காரி ;
தாழனூராள் மாரி—அவள் தங்கக்கூடைக் காரி ;
எங்கும்பரா சக்தி—அவள் எல்லாம்ஆள ஒத்தி ;
ஆதிபரா சக்தி—அவள்—அங்காளம்மாள் தேவி ;
நெற்றிப்பச்சைக் காரி—அவள்—நெடுங்குணத்து ஆயி ;
பொன்னுக்கூடைக் காரி—அவள்—புறப்பட்டாளே மாரி ;
தங்கப் பொட்டுக்காரி—அவள்—தனித்துவந்தாள் மாரி ;
ஈசுவரி உமையே !—யான்—ஈடேறக்கண் பாராய்.

V. தனிப்பாடல்கள்

கன்னபுர மாலே ! கடவுளினும் நீயதிகம் ;
உன்னிலுமோ யானதிகம் ; ஒன்றுகேள்—முன்னமே
உன்பிறப்போ பத்தாம் ; உயர்சிவனுக் கொன்றுமில்லை ;
என்பிறப்பெண் ணத்தொலையா தே !

—காளமேகப் புலவர்

எட்டேகால் லட்சணமே ! எமனே றும்பரியே !
மட்டில் பெரியம்மை வாகனமே !—முட்டமேற்
கூரையில்லா வீடே ! குலராமன் தூதுவனே !
ஆரையடா சொன்ன யது.

—அவ்வையார்

வட்டமதி போலிருக்கும் ; வன்னிக் கொடிதாவும் ;
கொட்டுவார் கையினின்று கூத்தாடும் ;—சுட்டால்,
'அரகர !' என்னுமே அம்பலசோ மாசி
ஒருநாள்விட் டேனி துரை.

—கம்பர்

சொல்லுக் கினிய கழுக்குன்ற ரே ! உமைச்
செல்லவென்றால்,
அல்லற் பிழைப்புப் பிழைத்துவிட் டீர் ; முப்பு
ராதியர்மேல்
வில்லைக் குனித்தெய்ய மாட்டாமல் நீரந்த
வேளையிலே
பல்லைத் திறந்துவிட் டீர் ; இது வோநும்
படைத்தொழிலே !

—சொக்கநாதப் புலவர்

VI. நீதிப் பகுதி

1. சதகச் செய்யுள்

குமரேச சதகம்

நட்பு நிலை

கதிரவ னுதிப்பதெங் கேகளின மெங்கே
களித்துள மலர்ந்ததென்ன ?
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தில்நட் பானதென்ன ?
மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுகம்
மலர்ந்துமகிழ் கொண்டதென்ன ?
வல்லிரவு விடிவதெங் கேகோழி யெங்கே
மகிழ்ந்துகூ விடுதலென்ன ?
நிதியரசர் எங்கே இருந்தாலும் அவர்களொடு
நேசமொன் ருயிருக்கும் ;
நீதிமிகு நல்லோர்கள் எங்கிருந் தாலுமவர்
நிறைபட்சம் மறவார்கள்காண் !
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணட்டதிபனே !
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே ! 1

இதினும் இது நன்று

கடுகடுத் தாயிரம் செய்குவதின் இன்சொலாற்
களிகொண் டழைத்தல்நன்று ;
கனவேள்வி யாயிரம் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடுசொ லாமைநன்று ;
வெடுவெடுக் கின்றவோர் அவிவேகி யுறவினில்
விவேகியொடு பகைமைநன்று ;
வெகுமதிகள் ஆயிரம் செய்வதின் அரைக்காசு
வேளைகண் டுதவல்நன்று ;

சடுதியிற் பக்குவம் சொல்லும் கொடைக்கிங்குச்
சற்றுமிலை என்னல்நன்று ;
சம்பத்து டன்பிணியின் மெலிகுவதின் நோயற்ற
தாரித்தி ரியம்நன்று காண் ;
மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
மான்மருக னைமுதல்வா !
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே ! 2

அறப்பளீசுர சதகம்

இதற்கு இது வேண்டும்

தனக்குவெகு புத்தியுண் டாயினும் வேறொருவர்
தம்புத்தி கேட்கவேண்டும் ;
தானதிக சூரனே யாயினும் கூடவே
தளசேக ரங்கள்வேண்டும் ;
கனக்கின்ற வித்துவா னயினும் தன்னினும்
கற்றோரை நத்தவேண்டும் ;
காசினியை ஒருகுடையி லாண்டாலும் வாசலில்
கருத்துள்ள மந்த்ரிவேண்டும் ;
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்ய னுகிலும்
சுதிகூட்ட ஒருவன்வேண்டும் ;
சுடர்விளக் காயினும் நன்றாய் விளங்கிடத்
தூண்டுகோல் ஒன்றுவேண்டும் ;
அனற்கண்ண னே!படிக சங்கநிகர் வண்ணனே !
ஐயனே ! அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே ! 3

குறைவுற்றுங் குணம் கெடாமை

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினும்
சார்மணம் பழுதாகுமோ ?
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சாரமது ரங்குறையுமோ ?
நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந் தாலுமதன்
நீள்குண மங்கிவிடுமோ ?
நெருப்பிடை யுருக்கினும் அடிக்கினும் தங்கத்தின்
நிறையும்மாற் றுங்குறையுமோ ?

கறைபட்ட பைம்புயல் மறைத்தாலும் அதுகொண்டு
கதிர்மதி கனம்போகுமோ?
கற்றபெரி யோர்மகிமை அற்பர்அறி கிலரேனும்
காசினி தனிற்போகுமோ?
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே!
ஐயனே! அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே! 4

கயிலாச நாதர் சதகம்

கல்விச் சிறப்பு

கடலுலகில் உற்றபொரு ளுக்குள்ளே நன்மைதரு
கல்விநிலை பெற்றபொருளாம்;
கனலினு லுருகாது; புனலினுற் கரையாது;
கள்ளரால் திருடொணுது;
திடமான ராசாதி ராசரா லும்மதைத்
தீண்டிச் சிதைக்கொணுது;
செயல்மிக்க மாதரால் சேதமா காதொருவர்
செலவிடிற் குறைவுருதங்(கு)
அடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
அளவிடவும் முடியாதுகாண்;
அப்பொரு ளினைப்பெரு திப்புவியில் அலைகின்ற
அற்பருறு பயனென்கொலோ!
கடகயம் உரித்துடலி னில்தரித் திடுதேவ!
கற்பக விராசமேவும்
கங்கைபுனை ஈசனே! மங்கைமகிழ் நேசனே!
கயிலையங் கிரிவாசனே! 5

2. வாக்குண்டாம்

அல்லது

மூதுரை

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா;—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்லில் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். 2

அட்டாலும் பால்சுவையிற் குன்று(து) ; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே ;சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 4

அடக்கம் உடையார் அறிவிலர்என் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா ;—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு. 5

—அவ்வையார்

3. நல்வழி

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை ; கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 1

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை ;—சிச்சீ !
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா(து)
உயிர்விடுகை சால வுறும். 2

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே ! கேளுங்கள் :—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின்(பு) ஆரே அநுபவிப்பார் !
பாவிகாள் ! அந்தப் பணம் ? 3

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும் ;
அன்றி அதுவரினும் வந்தெய்தும் ;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் :
எனையாளு மீசன் செயல். 4

பூவாதே காய்க்கும் மரமுமுள ; மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே ;—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலும் தோன்றா துணர்வு. 5

—அவ்வையார்

4. நீதி நெறி விளக்கம்

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும் ;
புறங்கடை நல்லிசையும் நாட்டும் ;—உறுங்கவலொன்(று)
உற்றுழியுங் கைகொடுக்கும் ; கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

கற்றார்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலன் வேண்டாவாம் ;—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா ; யாரே
அழகுக்(கு) அழகுசெய் வார் ? 2

முற்றும் உணர்ந்தவர் இல்லை ; 'முழுவதூஉம்
கற்றனம் !' என்று களியற்க ;—சிற்றுளியால்
கல்லும் தகரும் ; தகரா கனங்குழாய் !
சொல்லுலைக் கூடத்தி னால். 3

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாதே நோற்பதொன் றுண்டு :—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். 4

மெய்வருத்தம் பாரார் ; பசிநோக்கார் ; கண்துஞ்சார் ;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் ;—செவ்வி
அருமையும் பாரார் ; அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். 5

—குமரகுருபர அடிகள்

5. திருக்குறள்

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்? 1

செயற்கரிய செய்வார் பெரியர் ; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 2

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 3

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 4

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 5

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 6

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 7

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. 8

அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 9

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் ; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 10

பொறுத்தல் இறப்பினை என்றும் ; அதனை
மறத்தல் அதனினும் நன்று. 11

அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதுஇல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல். 12

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 13

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல் ;
மக்கட் பதடி எனல். 14

தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 15

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 16

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 17

அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 18

உள்ளத்தால் உள்ளலும் தீதே 'பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம்' எனல். 19

வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும்
தீமை இலாத சொலல். 20

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 21

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 22

நல்லாறு எனப்படுவது யாதெனின், யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. 23

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 24

மேல்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு. 25

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை. 26

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 27

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 28

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். 29

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும். 30

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 31

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். 32

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 33

இதனை இதனான் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். 34

அச்ச முடையார்க்கு அரணில்லை; ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 35

உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 36

முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 37

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 38

முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. 39

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். 40

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 41

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 42

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். 43

குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று. 44

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 45

செய்யுட்பகுதி—குறிப்புரை

I. கடவுள் வணக்கம்

1. மடநெஞ்சு - இளமனம், தாழ்த்த - வணக்க, சென்னி - தலை, வீழ்த்தவா - வீழ்க்கவா ?
2. கமலம் - தாமரை, ஏறே - சிங்கமே, ஆயர் - இடையர், கொழுந்து - வளத்தை விளக்குபவன்.
3. நனி - மிகவும், ஊனம் - பழி, தீனர் - வறியவர், ரட்சகன் - காப்பாற்றுகிறவன்.
4. அறுதி - முதலற்றது, மாதிரம் - மலை.
5. சினத்தவர் - கோபித்தவர், முடி - தலை, செகுத்தவர் - வென்றவர், நிசி - இருள், கருவறுக்கும் - பிறப்பை ஒழிக்கும், பொருப்பு - மலை, பேரி - முரசம், துடி - உடுக்கை, தளம் - சேனை, எரி - பிரகாசம், கிரி - மலை, ஒண்டிருத்தணி - ஒளி பொருந்திய தணிகை மலை.

II. வருணனைப் பகுதி

1. மீன்கள் - நட்சத்திரங்கள், ஆம்பல் - அல்லி மலர், களி கூர - சந்தோஷம் அதிகரிக்க, அம்புயம் - தாமரை மலர், பளிங்கு - கண்ணாடி, குறு - சிறு, சூழ்ச்சி - உபாயம்.
2. ஈழம் - சிங்கள நாடு, வானம்பாடி - ஒரு வகைப் பறவை, பண்ணை - நன்செய் நிலம், பள்ளர் - உழுதொழில் செய்பவர்.
3. இயைந்த - பொருந்திய, அலகிலா - அளவில்லாத, பரவாய் - கடலே, நாவாய் - மரக்கலம்; நன்னர் - நன்மை, நங்காய் - பெண்ணே, புனல் - நீர், கார் - மேகம், புனிற்றிள மகன் - சமீபத்திற்பிறந்த புதல்வன், தாவா - கேடில்லாத, ஓவாது - இடை விடாமல், துன்று - பொருந்திய, மடி - சோம்பல், இயம்பல் - கூறுதல்.

III. கதைச் செய்யுள்

1. அந்தரம் - ஆகாயம், பாதகம் - பாவம், ரட்சிப்பீர் - காப்பீர், கடுக - விரைவாக, உரகதன் - பாம்புக்கொடியோன், இடர்கள் - துன்பங்கள், அம்பலம் - சபை, மாயன் - திருமால், ஏகி - போய்.
2. கடுக - சீக்கிரமாக, சினி - சேணம், அகம் - மனம், புரவி - குதிரை, அசுவம் - குதிரை, அந்தம் - அழகு, துலங்குவது - விளங்குவது, சொர்ணமேனி - பொன் போன்ற உடல், பரிதவித்தார்கள் - துன்புற்றார்கள்.

3. தொடர்பாய் - ஒன்றுபட்டு, வளமார் - வளம் பொருந்திய, தளமார் - சேனைகள் பொருந்திய, திறம் - சிறப்பு, ஒளியார்- பிரகாசம் பொருந்திய, தனங்கள் - பொருள், ஈட்டற்கு - சம்பாதிப்பதற்கு, உன்னி - நினைத்து, சவம் - பிணம், கண்டீரவம் - சிங்கம், இழுக்கு - குற்றம், இசைத்திட்டான் - கூறினன்.

IV. பல்சுவைப் பகுதி

1. பார் - பூமி.

2. ஒதுக்குதல் - நீக்குதல், தேக்குதல் - தங்கும்படி செய்தல், தூய்மை - சுத்தம், வையம் - உலகம், ஆடவர் - புருடர்கள்.

3. பின்னம் - சிதைவு, குடுக்கை - சுரைக்குடுக்கை, முட்ட - முழுவதும், மண்டுவேன் - உண்பேன், பிளவு - பாக்கு, சரம் - சுவாசம், நன்னிமித்தம் - நற்சகுனம்.

4. ஆயி - தாய், ஈடேற - கடைத்தேற.

V. தனிப்பாடல்கள்

1. கடவுள் - இங்குச் சிவனைக் குறித்தது.

2. எட்டேகால் - தமிழ்க்கணக்கில் 'அ' என்னும் எழுத்து 'எட்டு' என்னும் எண்ணையும், 'வ' என்னும் எழுத்து நான்கில் ஒரு பாகமாகிய 'கால்' என்னும் எண்ணையும் குறிக்கும். ஆகவே, 'எட்டேகால்' என்பதற்கு 'அவ' என்று பொருள் கொள்க. எமனேறும் பரி - எருமைக்கடா, பெரியம்மை - மூதேவி, பெரியம்மை வாகனம் - மூதேவியின் வாகனமாகிய கழுதை, முட்ட - முழுவதும், கூரையில்லா வீடு - குட்டிச் சுவர், இராமன் தூதவன் - அனுமன், (அதாவது குரங்கு), ஆரை - ஆரைக் கீரை.

3. வட்டமதி - வட்ட வடிவமுள்ள சந்திரன், வன்னிக்கொடி - நெருப்புக்கொழுந்து, கொட்டுவார் - (சாணியைத்) தட்டுகின்றவர், சுட்டால் அரகரா என்னும் - வாட்டி சுடப்பட்டால் விபூதியாக உதவும், ஒரு நாள் விட்டேன் - ஒரு நாள் தவணை கொடுத்தேன்.

4. அல்லல் - துன்பம், முப்புராதியர் - திருபுரத்தையாண்ட அசுரர்கள், பல்லைத் திறத்தல் - சிரித்தல், படைத்தொழில் - போர்த்தொழில்.

VI. நீதிப் பகுதி

1. கதிரவன் - சூரியன், நளினம் - தாமரை, பசுந்தோகை - பச்சை நிறமுள்ள மயில், மதியம் - சந்திரன், குமுதம் - அல்லி மலர், நிதியாசர் - தனவந்தர், வாவி - ஆற்றோடை, புல் வயல் - புதுக்கோட்டையின் அருகில் உள்ள ஒரு சுப்பிரமணிய ஸ்தலம்.

2. களி - மகிழ்ச்சி, வேள்வி - யாகம், அவிவேகி - முட்டாள், தாரித்திரியம் - தரித்திரம், கரி - (கஜேந்திராழ்வான் என்னும்) யானை.

3. தளசேகரம் - சேனைப் பலம், நத்த வேண்டும் - விரும்ப வேண்டும், காசினி - உலகர், தொனிக்கின்ற - ஒலிக்கின்ற, அனற்கண்ணன் - சிவபெருமான், படிகம் - பளிங்கு, சங்கம் - சங்கு, வண்ணன் - நிறமுடையவன், மதவேள் - பாட்டுடைத் தலைவன் பெயர், சதுரகிரி - சேலம் ஜில்லாவிலுள்ள ஒரு சிவஸ்தலம் என்று கூறப்படுகிறது.

4. தறிபட்ட - வெட்டப்பட்ட, பழுதாயினும் - குறைந்தாலும், சுவறிட - வற்றும்படி, மதுரம் - இனிய உருசி, கதிர்மணி - பிரகாசம் பொருந்திய இரத்தினம், புயல் - மேகம், காசினி - உலகம்.

5. தலைபெற்ற - முதன்மையான, கனல் - நெருப்பு, புனல் - நீர், சிதைத்தல் - அழித்தல், அடம் - பிடிவாதம், கடகயம் - மதம் சொரிகின்ற யானை.

2. 1. தருங்கொல் - கொல் என்பது அசை, என வேண்டா - என்று எண்ண வேண்டா, தெங்கு - தென்னை.

2. அல்லாத - (நல்லார்) அல்லாத, ஈரம் - கருணை, ஈந்த-செய்த.

3. அட்டாலும் - (அடுப்பின்மீது இட்டுக்) காய்ச்சினாலும், அளவளாய் - மனம் கலந்து.

4 கானம் - காடு, பொல்லா - அழகற்ற, கல்லாதான் - படியாதவன்.

5. கடக்க - வெல்ல, மடை - நீர் அணை, உறுமீன் - பெரிய மீன்.

3. 1. விழுமன்றே - விழும் அல்லவா? பணி - தொழில்.

2. மூத்த - (இழிவிற்) பெரிய, இடித்து - நெருக்கிப் பேசி, சால - மிக, உறும் - பொருந்தும்.

3. கூடு விட்டு - உடலை விட்டு, ஆவி - உயிர்.

4. எய்தும் - அடையும்.

5. ஏவாதே - கட்டளையிடாமலே, உணர்வார் - அறிகின்றவர், தூவா - தூவி, வித்து - விதை, பேதை - அறிவில்லாதவன், உணர்வு - அறிவு.

4. 1. இன்பம் - இல்லற வாழ்க்கை, வீடு - மோட்சம், பயக்கும் - அளிக்கும், புறங்கடை - பிற்காலம், நல்லிசை - நல்ல புகழ், உறும் கவல் - நேரும் துன்பம், உற்றுழி - நேர்ந்த போது, கை கொடுக்கும் - துணை நிற்கும்.

2. கலன் - ஆபரணம், அணிகலன் - ஆபரணம், முழு மணிப் பூண் - பெரிய இரத்தினங்கள் பதித்த ஆபரணம்.

3. தகரும் - உடைபடும், தகரா - உடைபடா, கனம் குழாய் - பொன் குண்டலத்தைக் காதில் அணிந்த பெண்ணே, குழை - காதணி, கொல் உலை - கொல்லனுடைய உலைக்களம், கூடம் - சம்மட்டி.

4. சுட்டு - நன்மதிப்பு, நோற்பது - மேற்கொள்ளத்தக்கது, சீர் - பெருமை, தூற்றி - வெளிப்படுத்தி, சிறுமை - இழி குணம், புறங்காத்து - வெளியாகாமற்காத்து, தாழ்ச்சி சொலல் - பணிவாகப் பேசுதல்.

5. துஞ்சார் - தூங்கமாட்டார், செவ்வி - தக்க காலம், கருமம் - காரியம்.

5. திருக்குறள்

1. வாலறிவன் - தூய அறிவு வடிவமான கடவுள், நற்றாள் - உயர்ந்த திருவடிகள்.
2. செய்கலாதார் - செய்து முடிக்காதவர்.
3. அறத்தினூங்கு - தருமத்தைவிட, ஆக்கம் - உயர்வு.
4. அமிழ்தினும் - அமிர்தத்தைவிட, ஆற்ற - மிக.
5. உரியர் - சொந்தமாக்கிக்கொள்வர், என்பு - எலும்பு (உடல்).
6. ஓம்பி - பொருள்களைக் காப்பாற்றி, வேளாண்மை - உதவி.
7. அகத்தானும் - உள்ளத்திலிருந்து வரும் அன்பு கலந்த.
8. வையகம் - மண்ணுலகு, வானகம் - விண்ணுலகு, ஆற்றல் - கொடுத்து உதவுதல்.
9. உய்க்கும் - சேர்ப்பிக்கும், அமரர் - தேவர், ஆரிருள் - இருள் நிரம்பிய நரகம்.
10. நன்றி - நல் வாழ்வு, இடும்பை - துன்பம்.
11. இறப்பினை - பிறர் செய்யும் துன்பத்தினை.
12. அழுக்கற்று - பொறாமையடைந்து, அகன்றார் - பெருமை அடைந்தவர், பெருக்கம் - செல்வம், தீர்ந்தார் - நீங்கியவர்.
13. அல்ல செயினும் - பாவம் செய்தாலும், புறம் - நிந்தனை.
14. பயனில் - உபயோகமில்லாத, பாராட்டுவானை - உபயோகிப்பவனை, பதடி - உபயோகமில்லாதவன்.
16. ஒத்ததறிவான் - உபகாரத்தின் உயர்வை அறிந்தவன்.
17. இசைபட - புகழுண்டாகும்படி, ஊதியம் - பயன்.
18. அவ்வுலகம் - மோட்ச உலகு, இவ்வுலகம் - மண்ணுலக சுகம்.
19. உள்ளல் - கருதுதல், கள்வேம் - கவர்ந்துகொள்வோம்.
20. வாய்மை - சத்தியம்.

21. சினம் காக்க - கோபத்தை அடக்க வேண்டும்.

22. இன்னா - துன்பம், ஒறுத்தல் - தண்டித்தல், நன்னயம் - நல்ல உதவி.

23. நல்லாறு - நல்வழி, சூழும் நெறி - கருதும் மார்க்கம்.

25. பாடு - பெருமை.

26. செவிச் செல்வம் - கேள்வி ஞானம், தலை - சிறந்தது.

27. காண்பது - சிந்தித்து அறிவது.

28. தினைத்துணை - மிகச் சிறிதளவு, பனைத்துணை - மிகப் பெரிதளவு, நாணுவார் - வெட்கப்படுவோர்.

29. அறன் - அறநூல்கள், கேண்மை - நட்பு, திறன் - தேடும் வகை.

30. மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்கள், ஆக்கம் - நன்மை, இனநலம் - நண்பர்களின் இணக்கம்.

31. ஆக்கம் - செல்வம், ஊக்கார் - மேற்கொள்ளமாட்டார்.

32. ஞாலம் - உலகம், இடத்தால் - இடத்திற்கு ஏற்றவாறு.

33. ஏனை - மற்ற, கட்டளைக்கல் - உரைகல்.

35. அரண் - பாதுகாவல், பொச்சாப்பு - மறதி, ஆங்கில்லை - அவற்றால் பயனில்லை.

36. உள்ளம் உடைமை - ஒரு காரியத்தை விடாமுயற்சியுடன் செய்யும் திறமை, உடைமை - நிலைபெற்ற பொருள்.

37. திருவினையாக்கும் - செல்வத்தை அதிகரிக்கச் செய்யும், முயற்றின்மை - முயற்சியற்றிருத்தல், இன்மை - இல்லாமை (தரித்திரம்), புகுத்திவிடும் - சேர்த்துவிடும்.

39. முகம் நக - முகமலர்ச்சியடைய, அகம் நக - உள்ளன்புண்டாக.

40. யாக்கை - உடல், அற்றது போற்றி - ஜீரணமானபின்.

41. இழுக்கார் - வழுவாமல் நடப்பார்.

42. பெருக்கத்து - செல்வச் சிறப்புள்ள போது, சுருக்கத்து - செல்வம் குறைந்த போது.

43. மேலிருந்தும் - மேலான நிலையிலிருந்தும், மேலல்லார் - குணமில்லாதவர், மேலல்லர் - மேன்மக்கள் ஆகமாட்டார், கீழல்லார் - மேன்மக்கள்.

44. சான்றோர் - பெரியோர்.

45. வாழ்வார் - உரிமை பெற்றவர், தொழுதுண்டு - பிறரிடம் தொண்டு செய்து சாப்பிட்டு, பின் செல்பவர் - கட்டளைப் படி பின் நடப்பவர்.

அகராதி

அ

அகம் - மனம்
அகற்ற - நீக்க
அகன்ற - பரந்த
அசரீரி - ஆகாயவாணி; உருவமில்லாதது
அணிகலன் - ஆபரணம்
அணுகி - நெருங்கி
அமர்ந்து - இருந்து
அமரர்கள் - வானவர்கள்
அமைச்சர் - மந்திரியார்
அர்ப்பணம் - சமர்ப்பித்தல்
அவா - மிகுந்த விருப்பம்
அவைக்களம் - சபா மண்டபம்
அளித்து - ஈந்து; கொடுத்து
அறிஞர் - புலவர்; அறிவுடையவர்

ஆ

ஆசிரமம் - பன்ன சாலை
ஆடம்பரம் - இடம்பம்
ஆணை - உத்தரவு
ஆவல் - ஆசை
ஆற்றல் - வல்லமை

இ

இச்சித்து - விரும்பி
இசைந்து - உடன்பட்டு
இடர் - துன்பம்
இடையறு - இடை விடாத
இடையூறு - இன்னல்
இயக்கம் - கூட்டம்
இயலாது - முடியாது
இயைந்தது - முடிந்தது
இராயபாரி - இராசதூதர்
இல்லம் - வீடு
இலக்கியம் - இலக்கணம் அமைந்த நூல்
இன்னருள் - இனிய கருணை
இன்னல் - துன்பம்

ஈ

ஈகை - கொடை
ஈந்தார் - கொடுத்தார்

உ

உத்தமர் - சான்றோர்; நல்லவர்
உலையா - அழியாத
உறைந்தது - தோய்ந்தது; வசித்தது
உறைவிடம் - வசிக்குமிடம்

ஊ

ஊண் - உணவு
ஊன் - தசை

எ

எக்கரிட்டு - இடுமணலிட்டு; மணல் மேடிட்டு

ஐ

ஐயம் - சந்தேகம்

ஒ

ஒப்பாரி - அழுகைப் பாட்டு
ஒப்புயர்வு - ஈடும் எடுப்பும்
ஒருங்கிருந்து - ஒன்றுகூடியிருந்து
ஒழுக்கம் - நன்னடத்தை

க

கண்கூடு - பிரத்தியட்சம்; கண்ணால் காணப்படுவது
கணம் - கூட்டம்
கணை - அம்பு
கதை - சரிதை; போரில் உபயோகிக்கும் ஓர் ஆயுதம்
கபடம் - வஞ்சகம்
கருணை - கிருபை
கருத்து - எண்ணம்
கள்வாடு - திருடு

கா

காளை - வீரன்

கோ

கொட்டில் - கொட்டகை
கொடுமை - துன்பம்
கொய்து - பறித்து

ச

சத்துரு - பகைவன்
சம்பவம் - நிகழ்ச்சி
சான்று - மேற்கோள் ; சாட்சி

சி

சிகிச்சை - நோய்க்குப்பரிகாரம்
சிப்பம் - பொட்டணம்
சிரேட்டர் - மேலோர்
சினம் - கோபம்

சீ

சீற்றம் - கடுஞ்சினம்

சூ

சூழ்ச்சி - சதியாலோசனை

செ

செம்மல் - பெருமையிற் சிறந்தோன்
செய்தி - சமாசாரம்
செய்யுள் - பாட்டு
செயற்படுத்து - வேலையில் ஈடுபடுத்து ; உருவாக்கு

த

தகர்த்தது - உடைத்தது
தடாகம் - குளம்
தலம் - இடம்
தலை சிறந்த - மிகச்சிறந்த
தனயர் - பிள்ளைகள்

தா

தாயகம் - பிறப்பிடம்

தி

தியாகம் - தன்னலமற்ற கொடை அல்லது செயல்
தியானம் - இடைவிடாமல் நினைத்தல்
திரள் - கூட்டம்
திறம் - வல்லமை

து

துயில் நீத்து - தூக்கம் கலைந்து
துறை - நீர் நிலையில் கப்பல் தங்குகின்ற இடம்
துன்புறுத்து - கொடுமை செய்

தூ

தூண்டப்பெற்று - ஏவப்பட்டு ; ஊக்கப்பட்டு
தூதுவர் - இராயபாரி

தே

தேக்கம் - நீர்ப்பரப்பு

தொ

தொண்டாற்றி - பணி செய்து

தோ

தோணி - ஓடம்

ந

நஞ்சு - விடம்
நட்பு - சிநேகம்
நன்கொடை - பரிசு

நா

நாட்டம் - பார்வை

நி

நிமித்தம் - பொருட்டு ; சகுனம்
நிறுவினர் - ஸ்தாபித்தார்

நீ

நீர்ப்பெருக்கு - வெள்ளம்

நே

நேர்மை - செம்மை

நை

நையப்புடைத்தார் - நன்றாக அடித்தார்

ப

படலம் - நூற்பகுதி; ஒன்றன் பரப்பு

படைக்கலம் - ஆயுதம்

படைகள் - சேனைகள்

பண்பு - குணம்

பணி - தொண்டு

பணித்தார் - கட்டளையிட்டார்

பணியாற்றி - தொண்டாற்றி

பயின்று - கற்று; பழகி

பார்த - விசாலமான

பரப்பு - விஸ்தீரணம்

பி

பிரதானி - முதன்மையானவன்

பிளிறின - முழங்கின; கூச்சல் இட்டன

பீ

பீலி - மயில் தோகை

பு

புதல்வர் - புத்திரர்

புல்லர் - கீழ்மக்கள்

புலர்ந்த - விடிந்த

புழுதி - தூசு

பை

பைசாசம் - பிசாசு

போ

பொதி - மூட்டை

பொலிவு - அழகு

போ

போர் தொடுக்க - சண்டை ஆரம்பிக்க

ம

மகிழ்ச்சி - சந்தோஷம்; இன்பம்

மகிழ்ந்தன - இன்புற்றன

மலிந்து - மிகுந்து

மனப்பாங்கு - மனத்தன்மை

மா

மாட்சி - மகிமை; பெருமை

மாட்சிமை - மேன்மை

மாற்றான் - பகைவன்

மு

முதுமொழி - பழமொழி

யா

யாத்திரிகர் - பிரயாணி

வ

வயப்பட்ட - வசியமான; அகப்பட்ட

வழக்கறிஞர் - வக்கீல்

வள்ளல்-வரையாது கொடுப்பவன்

வா

வாய்ப்பு - தருணம்

வாய்மை - உண்மை

வி

விடுதி - தனியிடம்

விண்ணப்பம் - மனு

வியப்பு - ஆச்சரியம்

விலங்கு - மிருகம்

வெ

வெகுண்டு - கோபித்து

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956